
https://t.me/tamilbooksworld

# மகா பெரியவர்





இந்திரா செளந்தர்ராஜன்

www.pustaka.co.in

https://t.me/tamilbooksworld

Pustaka Digital Media
http://www.pustaka.co.in

# மகா பெரியவர்

# Maha Periyavar

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

https://t.me/tamilbooksworld

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

https://t.me/tamilbooksworld

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

அத்தியாயம் 40

அத்தியாயம் 41

அத்தியாயம் 42

அத்தியாயம் 43

அத்தியாயம் 44

அத்தியாயம் 45

அத்தியாயம் 46

அத்தியாயம் 47

அத்தியாயம் 48

அத்தியாயம் 49

அத்தியாயம் 50

## என்னுரை

telegram/tamilbooksworld

https://t.me/tamilbooksworld

மகா பெரியவர் என்னும் இந்த நூல் என் நூல்களிலேயே மிக பவித்ரமானது. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த காஞ்சி பரமாச் சார்பார் என்றும், பெரியவர் என்றும், மகா பெரியவர் என்றும் பக்தர்களால் அன்பாக அழைக்கப்பட்ட காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதியான ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகளின் வாழ்க்கை வரலாறுதான் இந்த மகா பெரியவர் எனும் நூல்.

தினமலர் ஆன்மீக மலரில் தொடராக வந்த இந்த அரிய விஷயம் இப்போது நூலாக வருகிறது. இது முதல் பாகம் தான்... சில மாதங்களில் இரண்டாம் பாகமும் இதே போல் வந்து விடும்.

பெரியவரின் அருளுக்கு பாத்திரமானவர்களில் நானும் ஒருவன். அவரை வியந்தும் நெகிழ்ந்தும் வாழ்ந்து கொண்டிருப்பவன். அவர் பூத உடல்தான் மறைந்துள்ளது. அவரது பேரொளியான ஆத்மா அழியாத பெருவாழ்வு கொண்டது. அது நாம் தியானிக்க தியானிக்க நமக்கு நல் வழிகாட்டும்.

இந்த நூல் எளிய தமிழில் நான் பெரியவர் வரலாற்றை அடுக்கடுக்காய் தொட்டு எழுதியிருக்கிறேன். நிச்சயமாக உங்களை எல்லாம் பெரிதும் சிலிர்க்க வைக்கும்.

பணிவன்பு

இந்திராசௌந்தர்ரா

09.04.2016

மதுரை - 3

# 1

இந்த உலகில் எவ்வளவோ சன்னியாசிகளும் மகான்களும் வாழ்ந்துவிட்டு போயிருக்கிறார்கள். ஆனால் எல்லாரும் வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை. ஒரு சிலரைத்தான் காலம் மறவாது போற்றித் துதிக்கிறது.

அவர்களில் ஒருவர்தான் நம் ஆன்மிக உலகம் பெரிதும் போற்றி வணங்கும் காஞ்சிப் பெரியவர்.

காஞ்சி காமகோடி மடத்தின் 68வது பீடாதிபதியான இவர், ‘ஸ்ரீசந்திரசேகரேந்திர சங்கராச்சாரியார்’ என்று ஸ்ரீமடத்தின் வழக்கப்படி

https://t.me/tamilbooksworld

அழைக்கப்பட்டபோதிலும், ‘காஞ்சிப் பெரியவர்' என்று சொல்லப்பட்ட வாஞ்சை மிகுந்த சொல்தான் ஜனங்களிடம் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

காஞ்சிப் பெரியவர் என்கிற விளிப்பே முன் நிற்கிறது.

இன்று காஞ்சிப் பெரியவர் என்று கூட கூறத்தேவையில்லை. 'பெரியவர்’ என்றால் போதும்! அது அவர் ஒருவரைத்தான் குறிக்கும். ஓர் ஆச்சரியம்போல கடவுள் இல்லை என்று கூறியவர் பெரியார். அவர் மறுத்த கடவுள் தத்துவத்தை, உலகிற்கு உண்டு என்று போதித்து கடவுளாகவே வாழ்ந்தவர் பெரியவர்!

பெரியாருக்கும் பெரியவருக்கும் ஒரு எழுத்துத்தான் வித்தியாசம்.

அதனால், இவருக்கும் சமூக நலன் மிகப்பெரிதாக இருந்தது.

அதனால் இருவரையுமே காலம் பதிவு செய்துகொண்டு விட்டது.

இதை அறிஞர் உலகம் ரசனையோடு பார்க்கவும் செய்கிறது. பெரியவர் எனும் பெயரின் பின்பாதியில் ‘யார்?' என்கிற கேள்வி இருக்கிறது. ‘அது யார் கடவுள்’ என்று கேட்பது போல் உள்ளதாம்!

பெரியவர் என்னும் பெயரின் பின்பாதியில் ‘அவர்’ எனும் பதம் பதில் சொல்வதுபோல ஒளிந்துள்ளதாம்!

அதாவது பெரியார் கேட்ட யார் கடவுள் கேள்விக்கு அவரே கடவுள் அதாவது பெரியவரே கடவுள் என்பதாக உள்ளதாம்!

இப்படி இரு பெயரினைக் கொண்டு அர்த்தங்களை உருவாக்கிக்கொள்வது ஒரு புறம் இருக்க, நிஜத்திலும் பெரியவர், தான் வாழ்ந்த காலத்தில் ஆன்மிக உலகுக்கு கடவுளாகத்தான் இருந்தார்.

கடந்த நூற்றாண்டின் இறுதியில் 1994ம் ஆண்டு ஜனவரி 8ம் தேதி பெரியவர் முக்தி அடைந்தார்.

கடந்த 2016 ஆண்டு வரை கணக்கிட்டால் அவர் அமரத்துவம் அடைந்து 22 ஆண்டுகள் கழித்துவிட்டன. ஆனாலும் பெரியவர், தான் வாழ்ந்த நாளில் சிந்திக்கப்பட்டதைவிட மிக அதிகமாக இன்று சிந்திக்கப்படுகிறார். அவர் அருளுரைகளை வெளியிடாத இதழ்களே இன்று இல்லை எனலாம். தொலைக்காட்சியிலும் அவரது தெய்வத்தின் குரல் தினமும்

https://t.me/tamilbooksworld

எதிரொலித்தபடி உள்ளது.

அவர் மகாசமாதி அடைந்த காஞ்சி மடத்து பிருந்தாவனம் இன்று தினமும் பக்தர்கள் அலைமோதும் ஒரு திருத்தலமாகவே ஆகிவிட்டது. மகான்களைப் பொறுத்த அளவில் அவர்கள் உடல்தான் அழிகிறது. ஆன்மா பேரொளியோடு பக்தர்கள் உலகில் அழியாது வலம் வந்தபடியேதான் இருக்கிறது.

அப்படி வலம் வரும் வேளையில் அந்த ஆத்மா நிகழ்த்திவரும் அற்புதங்களுக்கும் ஒரு அளவில்லை. இத்தொடர் பெரியவரின் வரலாற்றைச் சொல்வதோடு, அவர் நிகழ்த்தாமல் நிகழ்த்திய அற்புதங்களையும் சொல்ல இருக்கிறது.

இன்று நாம் ஒரு நவீனத்துவமான விஞ்ஞானவளம் செறிந்த ஒரு வாழ்க்கைப் பாட்டுக்குள் இருக்கிறோம். பள்ளிக்கூடம் பக்கம் மழைக்குகூட ஒதுங்கிடாதவர் வசம் கூட இன்று கைப்பேசி உள்ளது. அது உலகையே உள்ளங்கைக்குள் கொண்டுவந்துவிடுகிறது. எல்லாருக்கும் எல்லாமாக ஆகிவிட்டது. அதை ‘ஆறாவது பூதம்' என்று சொன்னால் அது துளிகூட மிகையில்லை.

காலத்தின் ஒரு கோலம் ஒருபுறம் இப்படி இருக்க, மறுபுறமோ ஒரு குட்டிச்சந்தில் உள்ள மிகச்சிறிய கோயிலில் கூட இன்று அசாதாரணமாக கூட்டம் கூடுகிறது. அதில் பிரதோஷம் போன்ற நாட்களில் கூடும் கூட்டத்தில் எள்விழ இடமில்ல.

திருப்பதி, ஸ்ரீரங்கம், மதுரை, சிதம்பரம், சுவாமி மலை, திருவண்ணாமலை, ராமேஸ்வரம், பழனி, திருச்செந்தூர் என்று எங்கு போனாலும் கூட்டம்.

ஆக மொத்தத்தில் விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தபடி உள்ளன. இது வளர்ச்சியா இல்லை வீக்கமாக என்பதிலும் ஒரு குழப்பம்.

உண்மையில் எது ஞானம்?

அதில் விஞ்ஞானம் எப்படிப்பட்டது? மெய்ஞானம் எப்படிப் பட்டது? இதை பாமரனுக்குப் புரியும் விதத்தில் சொன்னதோடு சொன்ன வண்ணமே முக்தி அடையும்வரை வாழ்ந்தவர் மகா பெரியவர். அவர் இம் மண்ணில் வாழ்ந்த காலம், நூறாண்டுகளுக்கு நான்குமாத காலம்தான்

https://t.me/tamilbooksworld

குறைவு!

## 2

பதிமூன்று வயதில் துறவு மேற்கொண்டதில் இருந்து 87 ஆண்டு கால சன்யாச வாழ்வை வாழ்ந்த அந்த மகான் இந்த பாரத பூமியில் செல்லாத இடம் இல்லை. அவர் கால் படாத மாநிலம் என்று ஒன்றைக்கூடச் சொல்ல முடியாது.

ஆதிசங்கரரின் அடியொற்றி அத்வைதக் கருத்துக்களோடு அவர் மேற்கொண்ட யாத்திரைகள்... அதில் அவருக்கு கிடைத்த அனுபவங்கள்… அப்போதெல்லாம் அவர் ஆற்றிய பேருரைகள்…

அதில் நாம் தெரிந்து தெளிய மின்னிடும் கருத்துகள் என்று அவர் வாழ்வே ஒரு இறைகொடை!

அவர் ‘இறைவன் ஒருவனே’ என்கிற கருத்தை வழிமொழிந்த ஓர் அத்வைதியாக இருக்கலாம். ஆனால் அந்த ஒருவன்தான் நாம் உணர பலவாக இருக்கின்றான் என்பதை அவர் நமக்கெல்லாம் உணர்த்திய விதம் அற்புதமானது.

பெரியவரின் பின்புலம் இந்து மரபாக இருக்கலாம். ஆனால் அவரை மதம் கடந்து மற்ற மதத்தவர்களும் நேசித்தார்கள். கடவுள் இல்லை என்னும் நாத்திகர்கள் கூட பெரியவரின் தவத்தையும் அவர் கருணையையும் கண்டு வியந்தார்கள்.

இந்த தொடர் அவர் பிறப்பில் இருந்தே ஆரம்பமாகிறது.

அப்போதுதான் அவரது தெய்வீகச் சிறப்பை பாமரர்களாலும் புரிந்துகொள்ள முடியும்.

கடந்த நூற்றாண்டு மனிதரில் ஒரு மகாத்மா காந்தியை நமக்குத் தந்தது. கவிஞர்களில் ஒரு பாரதி கிடைத்தார்.

அதுபோல ஒவியத்துக்கு ஒரு ரவிவர்மா, இசைக்கு ஒரு எம்.எஸ்.சுப்புலட்சுமி, சமூக சேவைக்கு ஒரு தெரசா என்று கடந்த நூற்றாண்டு பல மனிதர்களை நமக்குதந்தது.

அது ஆன்மிகத்துக்கும் சன்யாசத்துக்கும் இலக்கணமாக தந்தது பெரியவரைத்தான்!

https://t.me/tamilbooksworld

பெரியவர் பிறந்த இடம் விழுப்புரம்.

விழுப்பங்கள் நிறைந்த புரம் என்பதே விழுப்புரம் என்பதாக கூறுவர். விழுப்பம் என்றால் உயர்வு, உன்னதம், தூய்மை, மேன்மை என்று பல பொருள் தரும் ஒரு சொல்லாகும். திருவள்ளுவர்கூட இச்சொல்லை பயன்படுத்தி குறள் ஒன்றை படைத்துள்ளார்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்'

என்கிறார் வள்ளுவர். அவர் கூற்றுப்படி இங்கே விழுப்பம் எனும் சொல்லுக்கு மேன்மை என்பது பொருளாகும். அந்த பொருள்படி பார்த்தால் விழுப்புரம் எனும் பெயர் மேன்மைகளைத் தரும் இடம் என்றாகிறது.

அது உண்மை என்பது போல நம் பெரியவரும் விழுப்புரத்தில் பிறந்தார். பெரியவரின் பெற்றோர் பெயர் சுப்ரமண்ய சாஸ்திரி, மகா லட்சுமி அம்மாள். 1894ம் ஆண்டு மே மாதம் 20ம் தேதி அனுஷ நட்சத்திரத்தில் பிரதமை திதியில் பிறந்த பெரியவர் தன் பெற்றோருக்கு இரண்டாவது மகன்.

இவருக்கு முன் பிறந்தவர் பெயர் கணபதி. எனவே இவருக்கு பெற்றோர் சுவாமிநாதன் என்ற பெயரை வைத்தனர்.

பெரியவருக்குப் பின்னர் ஒரு பெண்ணும், அதற்குப் பின்னர் 3 ஆண் குழந்தைகளும் உண்டு. ஆக பெரியவரின் பெற்றோருக்கு மொத்தம் 6 பிள்ளைகள்.

அவர்கள் பெயர்களை வரிசைப்படுத்தினால், அதில் ஓர் அபூர்வ ஒற்றுமை தெரியும்.

முதலாமவர் பெயர் கணபதி

அடுத்து நம் பெரியவர் சுவாமிநாதன்

மூன்றாவதாக லலிதாம்பாள்

நான்காவதாக சாம்பமூர்த்தி

ஐந்தாவதாக சதாசிவம்

https://t.me/tamilbooksworld

ஆறாவது கிருஷ்ணமூர்த்தி

இந்தப் பெயர்களே நம் இந்த மரபில் ஆதிசங்கரர் வகுத்துத் தந்த ஆறு விதமான வழிமுறைகளைக் கொண்டிருப்பது புலன் ஆகும்.

ஒன்றாகிய இறைவனை இந்த ஆறு வழிகளில் எந்த ஒன்றில் சென்றாலும் அடையலாம் என்பதே ஆதிசங்கரர் வகுத்துத் தந்த ஷண்மதக்கோட்பாடு ஆகும்.

அந்த கோட்பாடு பெரியவரின் குடும்பத்தில் தற்செயலாகவே குறி அமைந்து விட்டதை பெயர்கள் புலப்படுத்தும்.

கணபதி-காணாபத்யம் என்னும் வழிமுறையையும்

சுவாமிநாதன-கவுமாரம் எனும் வழிமுறையையும்

லலிதா-சாக்த வழிமுறையையும்

சாம்பமூர்த்தி சவுரம் எனப்படும் ஆரிய வழிபாட்டையும்

சதாசிவம்-சைவ நெறிமுறைகளையும்

கிருஷ்ணமூர்த்தி-வைணவ நெறிமுறைகளையும் நமக்கு உணர்த்துகிறது.

இது தற்செயலாக அமைந்த அதிசய ஒற்றுமையாகும்.

பெரியவரின் பிறப்பில் இந்த ஒரு அதிசய ஒற்றுமை மட்டுமல்ல; பல அதிசய சிறப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றை செய் வரிசையாகப் பார்க்கலாம்.

## 3

நாம் மிகுந்த மரியாதையோடும், வாஞ்சையோடும் அழைக்கும் பெரியவரின் பெற்றோர் இட்ட பெயர் சுவாமிநாதன்.

நாமும் இனி சுவாமிநாதன் மடாதிபதியாகும் தருணம் வரை அவரை சுவாமிநாதன் என்றும் நம்மில் ஒருவர் போலவுமே பார்த்து சிந்திப்போம்!

சுவாமிநாதன் தந்தை சுப்ரமண்ய சாஸ்திரிகள் விழுப்புரத்தில்.உள்ள வீட்டை விட்டு, தன் பணியின் நிமித்தம் மாற்றலாகி, திண்டிவனத்தில் பணியாற்றியபோது, அங்குள்ள பள்ளியில் சுவாமிநாதன்

https://t.me/tamilbooksworld

சேர்க்கப்பட்டான்.

படிப்பில் சுவாமிநாதன் படுசுட்டி!

ஆசிரியர் ஒருமுறை ஒன்றைச் சொன்னால் போதும், அப்படியே கப்பென்று பிடித்துக்கொண்டு விடுவான்.

குறிப்பாக கணக்கும், ஆங்கிலமும் சுவாமிநாதனுக்கு மிகச் சரளமாக வந்தது. மதிப்பெண்ணில் முதலிடம் பெற்றது மட்டுமின்றி, பள்ளி ஆண்டு விழாவில் நாடகங்களில் மாறுவேடம் அணிந்து நடிக்கும் வாய்ப்பெல்லாம் சுவாமிநாதனுக்கு கிடைத்தது. இதெல்லாம் எட்டாம் வகுப்பு வரைதான்!

அதன்பிறகு நாம் இன்று படிக்கும் பள்ளிக்கூட படிப்போ, கல்லூரிப்படிப்போ சுவாமிநாதனுக்கு இல்லை என்றாகிவிட்டது.

பெரிதினும் பெரிதான ஞானக்கல்வியை ஒரு சன்யாசியாக மாறி சுவாமிநாதன் கற்க வேண்டும் என்று விதிப்பாடு இருக்கும் போது அதை யாரால் வெல்ல முடியும்?

ஆம்!

காலம் சுவாமிநாதனை ஒரு ஜகத்குருவாக மாற்ற தீர்மானம் செய்துவிட்டது! விதிவசத்தால் நடந்த அந்த சம்பவங்கள் மிக ரசமானவை.

ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட சங்கரமடத்திற்கு என்று பிரத்யேக கடமைகள் இருந்தன. அத்வைத சித்தாந்தத்தை நிலைநிறுத்தி வேதம் விளங்கச் செய்ய வேண்டும் என்பதே ஸ்ரீமடத்தின் பிரதான கடப்பாடாகும்.

கேரள மண்ணில் பிறந்த ஆதிசங்கரரின் வழியில் மடாதிபதிகளாக பல பேர் வந்து கடமையாற்றிய நிலையில், 66வது பீடாதி பதியாக விளங்கிய சங்கராச்சாரியார் அப்போது விழுப்புரம் பக்கமாய், பெருமுக்கால் என்னும் கிராமத்திற்கு வந்து தங்கியிருந்தார்.

பொதுவில் மடத்து சன்யாசிகள் ஊர் ஊராக சென்ற வண்ணம் இருப்பார்கள். அதுதான் அவர்களின் சன்யாசதர்மம்.

இரண்டு நாட்களுக்கு மேல் ஒரு ஊரில் காரணம் இல்லாமல் தங்கக்கூடாது. அப்படித் தங்கினால் ஊர்ப்பற்று ஏற்பட்டு சன்யாசத்துக்கு இழுக்கு வந்ததாகப் பொருள்.

https://t.me/tamilbooksworld

அதே போல கதவுகளே இல்லாத திறந்த மனைகளில்தான் தங்கவேண்டும். மேற்கூரை இல்லாதிருப்பதும் உத்தமமே!

சன்யாச சாட்சியான திரி தண்டம் என்னும் மூங்கில் கம்பை எந்த நிலையிலும் பிரிந்திருக்கக்கூடாது. அதில் கொடிபோல கட்டப்பட்டிருப்பது அவர்கள் அணிய வேண்டிய கவுபீனம் ஆகும்.

ஒரு கவுபீனம் (கோவணம்) இடுப்பில் அணிந்த நிலையில் இருக்க ஒன்றை மாற்றாக வைத்துக்கொள்ளலாம்.

மற்றபடி இரவு ஓலைப்பாயில் படுக்கும் போது தனக்கு சமமாக அதையும் அருகிலேயே படுக்க வைத்துக்கொள்ளவேண்டும்.

இப்படி சன்யாச விதிகள் நிறையவே உள்ளன. அந்த அடிப்படையில் பெருமுக்கலுக்கு அப்போதைய 66வது பீடாதிபதி வந்ததங்கியிருந்தார்.

இதுபோல் பீடாதிபதிகள் வருவதே மக்களை நல்வழிப்படுத்தி அருளாசி வழங்கத்தான்! அவர்களை தரிசனம் செய்து ஆசி பெற வேண்டியது நமது பிரதான கடமையாகும். அந்த வகையில் சுவாமிநாதனின் பெற்றோர் சுப்ரமணிய சாஸ்திரிகளும், மகாலட்சுமி அம்மாளும் தங்கள் பிள்ளைகளோடு சென்று குருதரிசனம் செய்தனர்.

இந்த குருதரிசனம் சுவாமிநாதன் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தப்போகிறது என்பது பெற்றோர்களுக்குத் தெரியாது. அந்த முதல் குருதரிசனத்திலேயே அந்த மடாதிபதியின் பார்வை நம் சுவாமிநாதன் மேல் மிக தீர்க்கமாக பதிந்துவிட்டது! சுவாமிநாதனும் குருநாதரை மிக தீர்க்கமாகப் பார்த்தான்!

குருவந்தனம் புரிந்துவிட்டு பின்னர் எல்லாரும் வீடு திரும்பினர். அதன்பின் அவரவர்களுக்கு அவரவர் வேலை...

சுவாமிநாதனுக்கும் பள்ளிப்பாடங்கள், வீட்டுப்பாடங்கள் என்ற பெயரில் காத்திருந்தன.

ஆனால் மனது அதில் செல்ல மறுத்தது. குருநாதரைப் பார்த்த அந்த தருணங்களே மனதில் திரும்ப திரும்ப தோன்றியது.

எவ்வளவு நேரம்தான் இப்படியே நினைப்போடு தவிர்க்க முடியும்?

சுவாமிநாதன் புறப்பட்டுவிட்டான்.

https://t.me/tamilbooksworld

பெருமுக்கால் கிராமம் நோக்கி நடக்க ஆரம்பித்து ஒரே மூச்சில் வந்து சேர்ந்தான்.

வீட்டில் ஒருவரிடம் ஒருவார்த்தை கூடச்சொல்லிக் கொள்ளவில்லை. சொல்லிக்கொள்ளவும் தோன்றவில்லை. குருநாதர் முன்போய் நிற்கவும் அவரிடம் திகைப்பு!

கிட்டத்தட்ட அவரும் சுவாமிநாதன் நினைப்பாகவே இருந்ததுதான் விந்தை!

விதி தன் வினைப்பாட்டை செயல்படுத்த முனைந்து விட்டால் ஐந்து பூதங்களும் அதற்கு ஏற்பத்தானே செயல்பட்டாக வேண்டும்?

66வது பீடாதிபதியான அந்த குருநாதர், சுவாமிநாதனை அழைத்து ஒரே ஒரு கேள்விதான் கேட்டார்.

"வீட்டில் சொல்லிவிட்டு, வந்தாயா? சொல்லாமல் வந்தாயா?" இதுதான் அந்தக்கேள்வி.

## 4

66வது பீடாதிபதியான அந்த குருநாதர், சுவாமிநாதனை அழைத்து ஒரே ஒரு கேள்விதான் கேட்டார்.

"வீட்டில் சொல்லிவிட்டு வந்தாயா? சொல்லாமல் வந்தாயா?"

"சொல்லாமல்தான் வந்தேன்!" சுவாமிநாதனின் பதில் அவரை சற்று பரவசப்படுத்தியது.

தன் காலத்துக்குப்பின் யாரை கொண்டுவருவது? என்னும் ஒரு கேள்வி பொதுவாக எல்லா மடாதிபதிகளிடமும் இருக்கும். அது அவரிடமும் இருந்தது. அதுவே பரவசத்துக்கு காரணம். சன்யாச பட்டம் என்பது ஒரு ராஜாவை தேர்வு செய்வது போன்றது கிடையாது. அரச பதவி என்பது புலனடக்கத்துக்கு எதிரானது. வீரம், கருணை, விவேகம் என்ற பலவற்றைச் சார்ந்தது. ஆனால், சன்யாச பட்டம் என்பது பூர்வஜென்ம கர்மம் சார்ந்தது. ‘ஞானம் கருணை பரிபாலனம்’ என்னும் வகையைச் சார்ந்தது.

சன்யாசம் வெறுப்பால் விளைவதில்லை. மிகுந்த பொறுப்பில் விளைவது. இங்கேயும் அவர் தனக்குப் பின் ஒருவர் பட்டமேற்க வேண்டிய நிலையில்

https://t.me/tamilbooksworld

இருந்தார். அதற்கு ஏற்ப 67வது பீடாதிபதியாக பட்டமேற்ற லட்சுமிகாந்தன் என்ற குருநாதரை ஒருவார காலத்தில் காலன் தன்வசம் அழைத்துக்கொண்டான். இந்த நிலையில், ஒரு பீடாதிபதியை நியமித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் போது, சுவாமிநாதனும் அந்த பீடாதி பதியான குருநாதர் பார்வையில்பட்டுவிட, அவரும் சுவாமி நாதனை அப்போதே முடிவுசெய்துவிட்டார்.

இந்நிலையில், வீட்டில் சுவாமிநாதனைக் காணாமல் பெற்றோரும் உற்றாரும் தேடிக்களைத்துப் போன நிலையில், சுவாமிநாதன் திரும்பி வந்தான்.

நெற்றியில் குரு பிரசாதமாய் விபூதி! துளியும் கலக்கமின்றி பாலசூரியனாக தாய், தந்தையரை பார்த்துச் சிரித்தான். தாயிடமோ கோபம்.

"சுவாமிநாதா, இப்படியா சொல்லாம போவே?"

"சொல்லத் தோணலம்மா!"

"அப்படி எங்க போனே?"

"குருநாதரை தரிசனம் பண்ண!"

"அதான் நாமெல்லாம் போய் ஒரு தடவை பண்ணினோமே?"

"எனக்கு பண்ணிண்டே இருக்கணும் போல இருக்கும்மா!"

அந்தப் பதிலே அவர்களுக்கு பாதியை உணர்த்த, பின்னாலேயே மடாதிபதியிடம் இருந்தும் சுப்ரமண்ய சாஸ்திரிக்கு அழைப்பு வந்தது.

அவரும் வாரிச்சுருட்டிக்கொண்டு போய் அவர் முன் நின்றார்கள்.

"உன் இரண்டாவது பிள்ளை சுவாமிநாதனை நீ மடத்துக்கு தரணும்" என்றார் குருநாதர்.

தருவியா? என்று கேட்காமல் தரணும் என்று சற்று கட்டளையாக அவர் சொன்னதைக் கேட்ட சாஸ்திரிகள் முதலில் சற்று சலனப்பட்டார்.

அது குருநாதருக்கும் புரிந்தது.

"சுப்ரமண்யா... கலங்காதே! அவன் உன் குடும்பத்துக்கு மட்டுமானவன்

https://t.me/tamilbooksworld

இல்ல. இந்த உலகத்துக்கானவன். போ... போய் அவன் ஜாதகத்தை எடுத்துப்பார் எல்லாம் புரியும்!" என்றார்.

சுப்ரமண்ய சாஸ்திரிகளும் வீடு திரும்பி மனைவியிடம் விஷயத்தைக் கூறினார். இதைக்கேட்டு மகாலட்சுமி அம்மாள் ஸ்தம்பித்து விட்டார்!

எந்த தாய்க்கு பத்துமாசம் சுமந்து பெற்ற பிள்ளையைத் தூக்கி 13 வயசிலேயே காவிக்கு கொடுக்க மனது வரும்?

அவள் மனது மறுப்போடுதுடித்தது.

சாஸ்திரிகளும் சொன்னார்:

"மகாலட்சுமி, எனக்கும் நம் பிள்ளை ஒரு இஞ்ஜினியராகவோ, டாக்டராகவோ வரணும்கறதுதான் விருப்பம். ஆனா, குருநாதர் கட்டளை வேறுவிதமாக இருக்கு. ஜாதகத்தை பார்க்க சொல்லியிருக்கார். பார்ப்போமே... அது என்ன சொல்றதுன்னு..." என்றார்.

அதன் எதிரொலியாக சுப்ரமண்ய சாஸ்திரிகள் ஆத்ம சினேகிதரான கிருஷ்ணசுவாமியின் தந்தையான வெங்கட் ராமய்யர் எனும் தேர்ந்த ஜோதிடர் வீடு தேடி வந்தார்.

சாதாரணமாக ஜோதிடம் பார்க்க எல்லாரும் ஜோதிடரைத் தேடி போவோம். இங்கோ தலை கீழாக ஜோதிடர் வீட்டுக்கே வந்தார்.

வந்தவரும் சுவாமிநாதனின் ஜாதகத்தை எடுத்து பார்க்க ஆரம்பித்தார். அவரது கண்களில் ஆச்சரிய உணர்வு வழிய தொடங்கியது. ஒருவித பரபரப்பு, பரவசம் என்று பலதரப்பட்ட உணர்ச்சிகள் அவரை ஆட்கொண்டதாக ஒருவாறாக சுவாமி நாதனின் ஜாதகத்தைப் பார்த்து முடித்தவர் நிமிர்ந்தார்.

சுவாமிநாதனும் அப்போது அங்கே அவரை பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஜோசியர் மாமா, இப்படி பார்த்தா என்ன அர்த்தம்?"

இடையிட்டார் சாஸ்திரிகள்.

"சொல்றேன் சுப்ரமணி… அப்பா சுவாமிநாதா, நீ போய் உன் கை, கால்களை நல்லா கழுவிட்டு வறியா?" என்றார்.

சுவாமிநாதனும் அடுத்த பத்தாவது நிமிடம் கை, கால்களை

https://t.me/tamilbooksworld

கழுவிக்கொண்டு இடுப்பில் ஒரு பட்டுத்துண்டுடன் சந்தியா வந்தனம் செய்யச் செல்லும் பிள்ளைப்போல அவர் முன் வந்து நின்றான்.

நின்றவனை அருகில் உள்ள நாற்காலியில் உட்காரச் சொன்னார்.

பின்னர் அவன் கால்களைப்பிடித்து பாதப்பகுதியில் ஓடும் ரேகைகளைப் பார்த்தார். பார்க்கப் பார்க்க பரவசமாகியது. ஒரு காலில் சங்கு ரேகை இன்னொரு காலில் சக்கரரேகை!

ஸ்ரீவிஷ்ணுவின் பாதங்களை எதிரொலித்த அந்தப் பிஞ்சுப் பாதங்களை இறுகப் பற்றிக்கொண்ட வெங்கட்ராமனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது!

சுப்ரமண்ய சாஸ்திரிகளுக்கும் புரிந்து விட்டது!

ஜோதிடரும் விவரிக்க தொடங்கினார்.

## 5

"சுப்ரமண்யா! நீ ரொம்ப கொடுத்து வெச்சவன். இந்தக் கால்கள் பெரும் தவசிகள் தேடிண்டுருக்கற கால்கள். எந்த காலடில அடைக்கலம் புகுந்தா நமக்கு விமோசனமோ அந்தக் கால்கள் இது! இந்தப் பிள்ளை உன் மூலமா வந்துருக்கற உலகத்துக்கான பிள்ளை...

நான் ஜோசியம் பாக்கறத கடமையா செய்துண்டு வர்றவன். இதுவரை யார் கிட்டேயும் காலணா வாங்கினதில்லை. அதனால் தான் இந்த காலடி நான் பிடிச்சுக்க எனக்கு கிடைச்சிருக்கு! நான் ரொம்ப கொடுத்து வெச்சவன்" என்று அப்படியே சுவாமிநாதனின் காலடிகளை கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டார்.

அதன் பிறகும் சுப்ரமண்ய சாஸ்திரி, சுவாமிநாதன் சன்னியாசியாக தடைசொல்வாரா என்ன? மறுநாளே மடாதிபதியை பார்த்து சம்மதம் தெரிவித்து, கனத்த இதயத்தோடு அதே சமயம் பெரு மிதத்தோடு சாஸ்திரிகளும் அவர் மனைவியும் சுவாமிநாதனை மடாதிபதியான 66வது பீடாதிபதியிடம் ஒப்படைத்தனர்.

67வது பீடாதிபதி பட்டமேற்று சொற்ப நாட்களில் காலமாகி விட்ட நிலையில், 68வது பீடாதிபதியாக சந்திரசேகரேந்திர சரஸ்வதி என்கிற புதிய நாமகரணத்துடன் 1907ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் தேதி பட்டத்துக்கு வந்தான் சுவாமிநாதன்.

https://t.me/tamilbooksworld

அன்று அவன் வயது 13!

இந்த 13 வயது பாலகன்தான் பின்னாளில் உலகமே போற்றும் 'பெரியவர்' ஆனவன்.

எது சன்யாசம் என்பதற்கு இலக்கணமும் வகுத்தவன். சைவம், வைணவ பேதத்தை முற்றாக ஒதுக்கியவன். தன்னை நாடி வந்த பக்தர்களுக்கெல்லாம் பரிவுகாட்டி நல்வழியும் காட்டியவன்.

இவன் சொன்ன பரிகாரங்கள், இவன் செய்த உபதேசங்கள், இவனால் விளைந்த அற்புதங்கள் ஒன்றா இரண்டா?

பெரியவர் பற்றிய வரலாற்றில் நாம் தெரிந்துகொள்ள நிறையவே ரசமான சம்பவங்கள் உள்ளன.

அவை பெரியவர் பற்றியவை மட்டுமல்ல; பெரியவர் சார்ந்த காலம் பற்றியவையும்கூட.

இன்றைக்கு இத்தொடர் எழுதப்படும் காலக்கட்டம் கி.பி.2016 என்பதாகும்.

பெரியவர் மடாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டது 1907 ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 13ம் தேதி ஆகும். அவர் பொறுப்பேற்றுக் கொண்டது கலவை எனும் ஊரில்.

ஆனால், அதன்பிறகு வெகு சீக்கிரத்தில் அதாவது மே மாதமே அவர் கும்பகோணம் தலைமைப் பீடத்துக்கு வந்துவிட்டார்.

இந்தக் கால கட்டம் நம் நாடு சுதந்திரம் பெற்றிராத ஒரு கால கட்டம். வெள்ளையர்கள் வசம் பாரததேசமே சிக்கித் திணறிக் கொண்டிருக்க, ஒருபுறம் பெரிய அளவில் சுதந்திரப்போராட்டமும் நடந்தபடி இருந்தது.

இதில் ஆங்கிலேயருக்கும், நமது நாட்டின் கடல்பகுதி வழியாக ஊடுருவிய பிரெஞ்சுக்காரர்களுக்குமே கூட ஒத்துப்போகவில்லை.

பிரெஞ்சுக்காரர்கள் ஒழித்துக்கட்டப்பட்டனர். ஆனால், நம் நாட்டு சுதந்திரத்துக்கு போராடியவர்களை வெள்ளையர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

பெரியவர் மடாதிபதியாக பொறுப்பேற்ற இதே காலகட்டத்தில் தான்துத்துக்குடியில் வ.உ.சி. திருச்சியில், வா.வே.சு ஐயர் மற்றும் ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற வாஞ்சிநாதன், சுப்ரமண்ய சிவா போன்றோர்

https://t.me/tamilbooksworld

பெரிய அளவில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நாட்டு விடுதலை ஒரு பெரும் தேவையாக முன்நின்ற நிலையில் ஆன்மிக வேட்கை இரண்டாவதாகவே இருந்தது.

சுருக்கமாக சொல்லப்போனால், ஆன்மிகத்தை அழுத்தமாக ஏந்திப் பிடிக்க வேண்டிய ஒரு முக்கியமான கால கட்டம்.

நெடுங்காலமாகவே பாரத தேசம் பல போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும், யுத்தங்களையும் கண்டுவந்ததால், காஞ்சியில் உள்ள பங்காரு காமாட்சி எனப்படும் தங்கக்காமாட்சி விக்கிரகம் முதல் பிரசித்த பெற்ற ஆலங்களின் வழிபாட்டு விக்கிரகங்களை எல்லாம் கண்ணும் கருத்துமாக பாதுகாக்க வேண்டி இருந்தது.

இக்கால கட்டத்தில் சற்று ஆறுதலாக திகழ்ந்தவர்கள் தஞ்சாவூரை ஆண்ட மகாராஷ்ட்ர மன்னரின் வம்சாவளியினர் தான். குறிப்பாக வீர, சிவாஜியின் வழிவந்தவர்கள்.

எனவே தஞ்சை கும்பகோணம் எனும் காவிரிதீரம் மடாதிபதிகளுக்கு எல்லாம் பாதுகாப்பானதாக ஏற்ற இடமாக அமைந்தது.

இதனாலேயே காஞ்சிகாமகோடி மடம் கும்பகோணத்தில் தலைமை இடமாக ஆயிற்று. பெரியவரும் இங்கே வந்து தன் கடமையைத் தொடங்கிய நிலையில் இவர் முதலில் பங்குகொண்டது திருவானைக்கோவில் ஜம்புகேசுவரர் அகிவாண்டேஸ்வரி ஆலயத்தின் கும்பாபிஷேகத்தில் தான்.

அகிவாண்டேஸ்வரி அம்மனுக்கும் காஞ்சிமடத்துக்கும் பல விதங்களில் நெருங்கிய தொடர்பு உண்டு. குறிப்பாக அம்பாளின் காது.தாடங்கம் எல்லாரும் சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

அகிலாண்டேஸ்வரி ஒரு காலத்தில் மிக உக்கிர தெய்வமாக விளங்கினாள். பலியூசனைகள் மிகுந்திருந்த காலம் அது.

ஆதிசங்கரர் இந்நாளில் பலி பூசனைகளை எல்லாம் மாற்றி, நெறிப்படுத்தி அம்பாளின் ஆக்ரோஷத்தையும் கருணைக்குரிய சாத்த சக்தியாக மாற்றி அதை அவளது காது தாடங்கத்தில் ஐக்கியப்படுத்திவிட்டார்.

இன்றும் அந்த தாடங்கங்களோடு அவளை வணங்குவதே உசிதமான வழிபாடாகும். அப்படிப்பட்ட அம்பாளுக்குரிய கோயில்

https://t.me/tamilbooksworld

கும்பாபிஷேகமே பெரியவர் பங்கெடுத்த முதல் முக்கிய நிகழ்வாகி விட்டது.

## 6

திருவானைக்காவல் கோயில் கும்பாபிஷேகத்தையடுத்து பெரியவர் பங்கெடுத்துக்கொண்டது 1908ம் ஆண்டு கும்பகோணத்தில் வந்த மாமாங்க நிகழ்வாகும்.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் ஓர் ஆன்மிக அற்புதம்-மாமாங்கம்!

மா-என்றால் பெரிய என்று பொருள். மா மா- என்றால் மிகப்பெரிய என்று பொருள்.

மனித வாழ்வில் பெரும் அங்கம் வகிக்கும் ஒரு நிகழ்வு எனும் பொருளில் மாமாங்கம் என்பர். மகாமகம் என்றும் குறிப்பிடுவர்.

மகம் எனும் நட்சத்திரத்துடன் வியாழக்குருபகவானும் சிம்மராசியில் சம்பந்தப்பட்ட நிலையில் 12 ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே விண்ணில் நடைபெறும் ஒரு நிகழ்வு.

இதன் எதிரொலியாக மண்ணில் இந்த பூமியின் புண்ணிய நதிகள் எல்லாம் கும்பகோணம் மகாமக குளத்தில் ஒன்று கூடி ஊற்றெடுக்கும்.

இந்த நாளில் இந்த திருக்குளத்தில் ஒரு மனிதன் பயபக்தியோடு நீராட விதியில் பெரும் இடம் இருக்க வேண்டும்.

மனிதவாழ்வு என்பது நல்லதும் கெட்டதுமானது. வாழும் நாளில் அறிந்தும் அறியாமலும் பாவங்கள் செய்யும் ஒரு சூழல் எப்படியோ ஏற்பட்டுவிடுகிறது.

அப்படிச் செய்த பாவங்களை மனதால் எண்ணி வருந்துவது ஒருபுறம். அதற்கு பரிகாரம் கண்டு வாழ்வை சீர்படுத்திக்கொள்வது மறுபுறம். இன்னொன்று சீர்ப்படுத்திக் கொள்ள காலம் நமக்கு தரும் ஒரு வாய்ப்புதான் மகாமகம், மகாமகத்தின் போது திருக்குளத்தில் நீராடி இறைவனை வழிபடும்போது நாம் புதிதாய் பிறந்தவர்கள் போலாகிவிடுவோம்.

இந்த நாளில் லட்சக்கணக்கில் நீராடுவார்கள். இதனால் லட்சக்கணக்கானவர்கள் வாழ்வை பாவச்சுமையில் இருந்து விடுபட்டு

https://t.me/tamilbooksworld

நற்கதிக்கு ஆளாகிறார்கள். இவர்களால் இவர்களது குடும்பத்தவர்க்கும் நற்கதி கிடைக்கும்.

மொத்தத்தில் ஒரு தேசமே பாவச்சுமையை நீக்கிக்கொள்ள காலங்காலமாக வழங்கும் ஓர் அருட்கொடைதான் மாமாங்கம் என்னும் மகாமகம்!

திருவானைக்காவல் கும்பாபிஷேகம் முடிந்து மாமாங்கத்திலும் பங்கேற்க பெரியவருக்கு வாய்ப்பு கிட்டியது என்றால், அவர் எத்தனை மேலான புண்ணிய ஆத்மாவாக இருக்க வேண்டும்!

இதனைத் தொடர்ந்து நாம் கல்லூரிக்குச் சென்று கற்று பட்டம் பெறுவது போல, பெரியவருக்கும் மடத்தின் சார்பில் வேதக்கல்விக்கான போதனையும் தொடங்கியது. இது எவ்வளவு காலம் தெரியுமா? ஐந்து ஆண்டுகள். இந்த கல்வியை திருச்சிக்கு அருகில் உள்ள மகேந்திர மங்கலம் எனும் ஊரில் இருந்ததுதான் பெரியவர் பயின்றார்.

பெரியவர் இப்படி கல்வி பயின்ற நாளிலேயே அங்கே பெரியவர் வடிவில் கல்வியை கற்பது அந்த தட்சிணாமூர்த்தியே எனும் படியாக ஒரு சம்பவம் ஒன்று நடந்தது.

பெரியவரை ‘ஏகாக்ரஹி’ என்றும் குறிப்பிடலாம். அதாவது ஏகம் என்றால் ஒன்று. ஒருமுறை என்று பொருள். ஒன்றை ஒருமுறை கேட்டாலே போதும். அது அப்படியே அவருக்குள் அசைக்க முடியாதபடி சென்று அமர்ந்துவிடும்.

குறிப்பாக, இளம்வயதில் ஐந்துவயதுக்கு மேல் பதினைந்து வயதுக்குட்பட்ட காலத்தில் மூளையானது மிகுந்த செயல் திறனோடு இருக்கும். அப்போது நாம் கற்கும் எதுவும் சாகும் வரை நம்மால் மறக்க முடியாதபடி நம் மனதில் தங்கிவிடும்.

அதனாலேயே இக்காலக்கட்டம் பள்ளிக்காலமாக உள்ளது. அதே போல பிராமணர்கள் தங்கள் நித்ய கடமை எனப்படும் சந்தியா வந்தனம் போன்றவற்றை செய்ய ஏழு, எட்டு வயதிலேயே அவர்களுக்கு உபநயனம் செய்விக்கப்பட்டு காய்த்ரி மந்திரமும் போதிக்கப்படுகிறது.

மந்திரங்களில் மிக மேலான மந்திரம் காயத்ரியே! காயத்ரிக்கு நிகராகவோ, மேலாகவோ ஒரு மந்திரமும் இல்லை. இந்த காயத்ரி பால பருவத்திலேயே ஒரு ஆண்மகன் மனதுக்குள் புகுந்துவிட வேண்டும். இதை விசேஷப்படுத்தி ‘காமம் புகுமுன் காயத்ரி புகுந்துவிட வேண்டும்’

https://t.me/tamilbooksworld

என்றும் கூறுவர். அப்படிப்பட்ட மேலான இந்த காயத்ரி சார்ந்த உபநயன சடங்கு பெரியவருக்கு ஏழு வயதிலேயே செய்யப்பட்டுவிட்ட நிலையில், அவர் நாள் தவறாமல் சந்தியா வந்தனம் செய்து காயத்ரியை ஜெபிப்பதிலும் தலைசிறந்து விளங்கினார்.

இதனால் அவர் பள்ளி மாணவராக திகழ்ந்த போதே பரிசோதனை செய்யவரும் இன்ஸ்பெக்ஷனில் பரிசோதகர் கேட்கும் கேள்விக்கு பளிச்சென்று பதில் கூறுபவராக இருந்தார்.

அப்படிப்பட்டவரே மகேந்திரமங்கலத்தில் வேதகல்வியும் கற்க வேண்டிவந்தது. அதற்காக பாடம் நடத்தும் போது பெரியவர், ஆசிரியர் பார்வைக்கு அதை கவனிக்காமல் மணலில் விளையாடுபவர் போலவே தென்பட்டார்.

உண்மையும் அதுதான்!

அக்கறையாக குரு போதிக்கும் போது கவனித்து கேட்காமல் காவிரி ஆற்றுமணலில் கிளிஞ்சல் பொறுக்கினால் குருவுக்கு என்ன நினைக்க தோன்றும்?

பெரியவரோ பட்டம் ஏற்றுக்கொண்டவிட்ட மடாதிபதி. வயது சிறியது. ஆனால் கீர்த்தி பெரியது. இதனால் வேதம் கற்பித்த குரு இனியும் பாடம் நடத்துவது வீண், இவருக்கு அக்கறையில்லை என்று கருதி, விலகிச்செல்ல முற்பட்டபோது, அவர் காதுபட அவர் கற்பித்த வேத பாடத்தை மட்டுமல்ல அதன் தொடர்ச்சியாக அவர் இனி கற்பிக்க வேண்டிய மீதமிருந்ததையும் பெரியவர் ஒரே மூச்சில் சொல்லி நிறுத்த, அந்த குரு அப்படியே ஸ்தம்பித்து விட்டார். அந்த நொடி அவருக்குள் அவ்வையிடம் சிறுவனாக விளையாட்டு காட்டிய முருகன்தான் நினைவுக்கு வந்தான்.

## 7

அந்த ஆசிரியருக்கு தன்னை சோதிக்க வந்த முருகனாகத்தான் தெரிந்தார் பெரியவர்.

அந்த நொடியே சிலிர்த்துப்போய் பெரியவரைப் பார்த்து, "இது என்ன சோதனை? உண்மையில் இங்கே நான் பெயர் அளவில்தான் உங்கள் குரு. நீங்கள்தான் உண்மையான குரு" என்றார்.

https://t.me/tamilbooksworld

பெரியவரோ அன்போடு மறுத்து, "விளையாட்டாக பாடத்தை கவனிக்காமல் இருந்தது தவறுதான். இனி கவனிப்பேன்" என்றார்.

நீங்கள் கவனிக்கத் தேவையில்லையே. இனி இந்த உலகம்தான் உங்களை கவனிக்க வேண்டும்" என்று அந்த ஆசிரியர் மனதில் கூறிக்கொண்டார்.

இந்த சம்பவம் பெரியவரின் ஞானத்துக்கு ஓர் உரை கல்!

காலத்தால் வளர்ந்து ஞானமடைவது ஒருவிதம். பிறக்கும் போதே கருவில் திருவோடு பிறத்தல் இன்னொரு விதம்.

ஞானசம்பந்தர் அப்படிப்பட்ட ஒரு ஞானி எனலாம். அதனாலேயே குழந்தையாக இருந்த போதிலேயே ‘தோடுடைய செவியன்’ என்று தனக்குக் கிட்டிய இறைக்காட்சியை அவரால் பாட்டாய் பாட முடிந்தது. இப்படிப்பட்ட ஞான சம்பந்தரை முருகப்பெருமானின் அவதாரமாக குறிப்பிடுவார்கள்.

அதே போல ஆதிசங்கரரையும் இந்த ஈசனின் மானுட அவதாரம் என்பர். அவர் வழியில் வந்த நமது பெரியவரும் அதை நிரூபிப்பது போலத் திகழ்ந்தார்.

ஆனால், அவர் வாழ்நாளில் ஒருபோதும் தன்னை அவர் நான் கடவுள் அவதாரம் என்பது போல் காட்டிக்கொள்ளவோ, வார்த்தையால் சொல்லிக்கொள்ளவோ முயன்றதேயில்லை.

அதே சமயம் அவர் தன்னை தாழ்த்திக்கொள்ள தயங்கியதே யில்லை. ‘நான்’ என்கிற பதத்தையே கூட அவர் பயன்படுத்த மிகவும் யோசிப்பார்.

‘தானொரு சன்யாசி. ஆதிசங்கரர் ஸ்தாபிதம் செய்த மடத்தின் வழியில் வருபவன். அவர் விட்டுச்சென்ற கடமைகளை தொடர்ந்து செய்வதே தன்னுடைய கடமை. அதற்குமேல் எதுவுமில்லை. எந்த நிலையிலும் தன்னுடைய சன்யாச கொள்கைக்கோ கோட் பாட்டுக்கோ குந்தகம் வந்துவிடக்கூடாது என்பதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

குறிப்பாக சன்யாசி எனப்படுபவள் பின் தூங்கி முன் எழ வேண்டும். காவி வஸ்திரத்தில் கூட ஒன்றுக்கு மேல் இன்னொன்று வைத்திருக்கக்கூடாது. அரசர்களுக்கு செங்கோல் போல, சன்யாசிகளுக்கு தண்டம். இதை தன் உடல்போல கருதி பிரியாது இருக்க வேண்டும். அந்த தண்டத்திலேயே தனது மாற்று ஆடையை கொடி போல கட்டி வைத்திருந்து அதையே பயன்படுத்த வேண்டும்.

https://t.me/tamilbooksworld

அறுசுவை உணவு காம்யார்த்தமாக வாழும் நம் போன்றவர்களுக்கே. ஒரு சன்யாசி அவல், பொரி, பால், பழம், மோர் என்று எளிய உணவே உட்கொள்ள வேண்டும்.

எல்லா விரத நாட்களையும் கடுமையாக பின்பற்றிட வேண்டும். ஓலைப்பாயில்தான் படுத்து எழவேண்டும். ஆறு, குளங்களில் நீராட துளிகூடதயங்கக்கூடாது.

ஒரு ஊரில் காரணம் இல்லாமல் தங்கக்கூடாது. பிட்சை எடுத்தே உண்ண வேண்டும். பிச்சையல்ல... அது பிட்சை!

பிச்சை என்பது ஒரு மனிதனுக்கு நேரிடும் இழிவான நிலை. பிட்சை என்பது மிக மேலான நிலை. பிச்சை இடும் போது இடுபவர்க்கு புண்ணியம் சேர்கிறது. பிட்சையில் இடுபவர்க்கு பாவங்கள் விலகுகின்றன. பிச்சையின் பின்புலத்தின் கருணை என்னும் உணர்வே உள்ளது. பிட்சையின் பின்புலத்தில் கடமை என்னும் உணர்வு மிகுந்துள்ளது.

ஒரு சன்யாசிக்கு பின்னாலே நாம் தெரிந்துகொள்ள இது போன்ற பல விஷயங்கள் உள்ளன.

அதிலும் பெரியவர் ஆதிசங்கரர் வழிவந்த சன்யாசி. ஆகையால் சன்யாசிக்கு உண்டான விதிப்பாடுகளோடு மக்களை வழிப்படுத்தும் கடமையும் அவருக்கு இருந்தது.

வழிப்படுத்துவது என்றால், முதலில் அப்பழுக்கு இல்லாத ஒரு சன்யாசியாக வாழ்தல். பின்னர் ஆன்மிக அறநெறிகளை போதித்தல், வேதங்கள் விளங்கியதை கூறுதல். ஆலய கும்பாபிஷேகங்களை செயல்படுத்துதல், ஏழை எளியோர் நலமாய் வாழ முடிந்ததை செய்தல், வாழ்க்கை துன்பம் தாளாது வருந்தி வருவோர்க்கு நல்வழிகாட்டி அருளுதல் என்று பெரியவருக்கான கடமைகள் மிகவே அதிகம்.

சன்யாசிகளில் கூட பல ரகங்கள் உண்டு. ராஜசன்யாசி, பிரம்ம சன்யாசி, மக்களைவிட்டு ஒதுங்கிகாடுகளில் தஞ்சம் புகுந்து வாழும் பற்றற்ற சன்யாசி. சமூக மேன்மைக்காக அதன்மேல் பற்றோடு அதே சமயம் தனக்கென்று எந்த பற்றுதலும் இல்லாமல் வாழ்ந்திடும் சன்யாசி என்று நாம் இவர்களை வகைப்படுத்தலாம்.

பெரியவர் இதில் தனக்கென வாழாத சமூக மேம்பாட்டுக்காக வாழ்ந்த

https://t.me/tamilbooksworld

சன்யாசியாவார். அதனால் மடத்தின் விதிப்படி நாடு தோறும் உள்ள அவ்வளவு ஊர்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களோடு பேசி அவர்களுக்கு நல்வழிகாட்டுபவராக இருந்தார்.

இதனால் அவர் யாத்திரைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். இம்மட்டில் அவர் மேற்கொண்ட முதல் நெடிய யாத்திரை வட தியாவில் உள்ள தலங்களுக்கு விஜயம் செய்வதாக இருந்தது.

வடபுலத்தில் தான் கங்கை நதி பாய்கிறது.

ஒவ்வொரு இந்துவும் தன் வாழ்நாளில் ஒருமுறையாவது கங்கையில் நீராட வேண்டும் என்பது விதிக்கப்பட்ட கடமை என்றே கூறலாம்.

## 8

இது மிகவும் கங்கை... புனிதமானது. தனக்குள் மூழ்கி நீராடும் அனைவரின் பாவங்களை எல்லாம் கங்கா தேவி எடுத்துக்கொண்டு புனிதப்படுத்தி உயிர்களை கரைக்கு அனுப்புகிறாள்.

புராணங்களின்படி திருமாலின் பாதம் வருடும் இந்நதி, சிவனாரின் சடையில் இருந்து விழுகிறது. பிரம்மனும் இதைக் கொண்டே திரிவிக்ரமனாய் மகாவிஷ்ணு காட்சி தந்தபோது அவர் பாதங்களை அபிஷேகம் செய்தான்.

மும்மூர்த்திகளின் சம்பந்தம் மட்டும் இதன் சிறப்பல்ல.

சற்று அமைதியாக நாம் யோசித்தால் இதன் பல சிறப்புகள் நமக்கு புலனாகும்.

பொதுவில் நதிகள் மலையில் இருந்தே உருவாகும். உருவாகவும் முடியும். மலைமேல் பெய்யும் மழையே நதிகள் உருவாகக் காரணம். இந்த மழை நீரில் மண்ணின் குணம்தான் இருக்கும். இது நிலத்தை தழுவி ஓடிவருவதே காரணம். இதனால் தாவரங்கள் மற்றும் மூலிகைகளின் அம்சமும் நதிநீரில் இருக்க வாய்ப்பு உண்டு. ஆனால் கங்கை நீர் இதிலிருந்து பெரிதும் மாறுபடுகிறது.

வெள்ளிப்பணியை சூரியனின் கிரணங்கள் உருக்க, இது உருகிப் பெருகி வருகிறது. பனிக்கட்டியை ஞானிகளின் திடமான மனதுக்கு ஒப்பிடுவார்கள்.

https://t.me/tamilbooksworld

தண்ணீரும் மனதும் பலவிதங்களில் ஒன்று. இரண்டுமே அலைபாய்பவை. இரண்டுமே ஓடவும் செய்யும். தேங்கவும் செய்யும். தெளியவும் செய்யும். குழம்பவும் செய்யும். தான் விழும் இடத்திற்கு ஏற்ப நீர் மாறிடும். மனமும் சூழலுக்கு ஏற்ப மாறும் தன்மை கொண்டதே.

தண்ணீரை கொதிக்க வைத்தால் சூடாகும். மனமும் கோபத்தில் சூடாகும். தண்ணீர் எந்த வண்ணத்தையும் ஏற்கும் மனமும் அப்படித்தானே!

எனவேதான் துய்மையான மழைநீர்போல மனது இருக்க வேண்டும் என்பர். அதே சமயம் இது இப்படிப்பட்ட தன்மை கொண்டிருக்காவிட்டால் இதை பயன்படுத்தவும் முடியாது. எனவே இதெல்லாம் மனதின் இயல்பு. இதை ஒட்டி ஒரு சிந்தனைக்குரிய கதையும் உண்டு.

தண்ணீரை ஒருவரால் சல்லடையில் பிடிக்க முடியுமா? என்பதே போட்டி.

அது எப்படி முடியும் என்பதே பதிலாக இருந்த நிலையில் ஒருவன் மட்டும், ‘முடியும்’ என்றான்.

பிடிக்கவேண்டிய தண்ணீரை சல்லடையில் பிடித்து நிறுத்தியும் காட்டினான். முன்னதாக அவன் அந்த நீரை உச்ச குளிர்நிலையில் உறையச்செய்தான். பின் பிடித்துக்காட்டினான். நாமும் நம் மனதை யோக நிலையில் பனிக்கட்டிபோல திடமாக்கிவிட முடியும்.

இப்படி திடமாகிவிட்டால் சலனமில்லை. அசுத்தமில்லை. இந்த இருநிலைப்பாட்டையும் தரவல்லவன் அந்த ஈசன் என்பதாலேயே அவன் உறைகின்ற இடமே பனிமலையாக ஒரு குறியீடாக உள்ளது.

இந்த பனி சூரியனின் கிரணம் பட்டு உருகும்போது தூய நீராகி ஒடி கடலைச்சென்று அடைகிறது. இடையில் இதனுள் சூரியனின் உஷ்ணம் எனும் தன்மை நாம் உணர இயலாத விதத்தில் உள்ளது.

இப்படி மும்மூர்த்தி சம்பந்தத்தோடு சூரியனின் சம்பந்தமும் கொண்டு வருவதாலேயே உலகின் அத்தனை ஆற்று நீரிலும் கங்கை நீர் பல ஆண்டுகள் கெடாத தன்மை கொண்டதாக விஞ்ஞானப்பூர்வ ஆய்வுகளில் நிரூபணமாகி உள்ளது.

இதில் நாமும் மூழ்கிடும்போது பஞ்சபூதங்களில் ஒரு பூதமான நீரின் ஓர் அம்சமாக மட்டுமே நாம் ஆகிறோம்.

https://t.me/tamilbooksworld

இந்த நதிக்குள் இமயத்தின் உச்சிக்கும் கடலோடு சம்பந்தப்பட்ட நிலையில், அதன் முடிவுக்கும் இடையே ஒரு நிறுத்த முடியாத ஒட்ட கதி விசையாக இருந்தபடியே உள்ளது.

அதன் தொடர்புக்கும் ஆளாகிறோம். மொத்தத்தில் உயரமான உச்சித்தொடர்பு விசைத்தொடர்பு, கடலோடு கலந்த நிலையில் உலகின் மூன்று பங்கை தன்னுள் கொண்டிருக்கும் மாபெரும் நீரின் தொடர் என்று மூன்று தொடர்புக்கு நாம் இந்த ஆற்று நீரில் மூழ்கும் போது ஆளாகிறோம்.

வேறு எந்த ஆறும் இப்படி ஒரு நிலைப்பாட்டில் இல்லை என்பது சிந்தித்தால் புலனாகும்.

இப்படிப்பட்ட புனித கங்கையில் நீராடத்தான் பெரியவர் வட இந்திய யாத்திரையையே மேற்கொண்டார்.

பஞ்சபூத தலங்களின் நீர்தலமான திருவானைக்காவல் கோயிலின் கும்பாபிஷேகம், நீராடுவதன் உச்சம் எனப்படும் மகாமகத்தில் பங்கேற்பு என்று இரு புண்ணியச் செயல்களின் தொடர்ச்சியாக மூன்றாவது பெரும்புண்ணியச்செயலாக கங்கை நீராட்டு அதன் முடிவாக ராமேஸ்வரம் சமுத்திரத்தில் நீராடுவது எனும் இலக்கோடு தொடங்கிய பெரியவரின் இந்த வட இந்திய யாத்திரை எவ்வளவு காலம் நிகழ்ந்தது தெரியுமா?

## 9

கிட்டத்தட்ட 22 ஆண்டுகள் அவரது வட இந்திய யாத்திரை நிகழ்ந்ததாக அவர் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கையில் அறிய முடிகிறது.

நம் பாரத தேசத்தில் நிறையவே மாநிலங்கள்!

குறிப்பாக சுதந்திரம் பெற்றபின் ஜமீன்தார்களின் பிடிகளில் இருந்தும், மிட்டா மிராசகளின் பிடிகளில் இருந்தும் நாட்டை விடுவித்து பின் மொழிவாரி மாநிலமாக இதை பிரித்து, அதே சமயம் அனைவருக்கும் பொதுவாக டெல்லியில் இருந்துகொண்டு ஒரு மத்திய அரசு ஆட்சி செய்யும் முறை என்பது 1947ம் ஆண்டுக்கு பிறகே தோன்றியது.

அதற்குப் பின் இப்போது குறிப்பிடுவது போல தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா என்று அன்று தேசம் பிரிக்கப்பட்டிராத

https://t.me/tamilbooksworld

நிலையில், வடநாடு என்றாலே இப்போதைய தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நடகா நீங்கலாக உள்ள எல்லாமே வடநாடு என்றே கருதப்பட்டது.

இந்த வடநாட்டில்தான் ஒரு பக்கம் கங்கை, இன்னொரு பக்கம் நர்மதை, ஒரு பக்கம் யமுனை என்று எல்லா புண்ணிய நதிகளும் ஓடியபடி இருந்தன. இது போக ஏராளமானதலங்களும் வடக்கில் உள்ளன.

பத்ரிநாத், கேதார்நாத், துவாரகை, காசி, உஜ்ஜயினி, மதுரா, அயோத்தி என்று தலங்களுக்கு பஞ்சமில்லாத ஒரு பாகம்தான் வடபாகம்.

இந்த வடபாகம் முழுக்க தன் கால்தேய நடந்தே சென்று நீராடுதல், வழிபாடு புரிதல் என்பதை தனக்கான கடமையாக கொண்டு செயல்பட்டவர்தான் நம் பெரியவர்.

அதிலும் காசியில் கங்கை நதியில் நீராட வேண்டும் என்னும் வேட்கை அவரிடம் மிகுதியாக இருந்தது. கங்கை கரையில் இன்றும் சங்கரமடம் பெரிதாக அருட்சேவை புரிந்து வருகிறது.

அங்கே பல மாதங்கள் தங்கி, தினமும் கங்கையில் நீராடி அங்குள்ள மற்ற கோயில்களுக்கெல்லாம் சென்று வழிபட்டதோடு இக்கெல்லாமும் சத்சங்கம் நடத்தி வேதம் முழங்கச் செய்து உபயன்யாசங்களும் செய்தார்.

பெரியவர் மடாதிபதி பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே ஒரு பெரும் உபன்யாசம் செய்யும் அவசியம் அவருக்கு ஏற்பட்டது.

அதாவது 13 வயதிலேயே...!

பெரியவருக்கு முன்பு இருந்த மடாதிபதி உபன்யாசம் செய்வதில் பெரும் நிபுணராக இருந்தார்.

மணிக்கணக்கில் அவரால் உபன்யாசம் செய்ய முடிந்தது. இந்நிலையில் புதியவர் மற்றும் வயதில் மிக இளையவரான பெரியவரால் எப்படி உபன்யாசம் செய்ய முடியும் என்பதே பலரிடம் கேள்வியாக இருந்தது.

ஆனால் பெரியவர் சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவையும், பிள்ளையாரையும் மையமாக வைத்து, ‘சமந்தகமணி’ தொடர்பான புராண சம்பவம் ஒன்றை பேசி நிறைவு செய்தார்.

துவாரகையில் கிருஷ்ணன் ருக்மணியை திருமணம் செய்து கொண்டு தன்

https://t.me/tamilbooksworld

வாழ்க்கையைத் தொடங்கிய போது நடந்த சம்பவமே அந்த புராண சம்பவமாகும்.

துவாரகையில் சத்ராஜித் என்பவனும் வாழ்ந்து வந்தான்.

அவன் பெரிய செல்வந்தன். இருப்பினும் துவாரகையில் எல்லாரும் எப்போதும் ஸ்ரீகிருஷ்ணபிரானை புகழ்வது அவனுக்கு எரிச்சல் ஏற்படுத்தியது.

தன்னைப்பற்றியும் துவாரகாபுரி மக்கள் பேச வேண்டும் என்று விரும்புகிறான். அதற்காக அவன் சூரியனை உபாசித்து கடும் தவம் புரிகிறான்.

சூரியனும் அவனின் கடும்தவத்திற்கு மகிழ்ந்து அவனுக்கு காட்சி கொடுத்தார்.

'என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார்.

"துவாரகையில் தானே பெரிதாக பேசப்படவேண்டும். செல்வம், புகழ், மகிழ்ச்சி என்னும் மூன்றும் என்னைவிட எவரிடமும் அதிகம் இருக்கக்கூடாது" என்று கேட்டான்.

சூரியதேவனுக்கும் சத்ராஜித் எதனால் இப்படி ஒருவரம் கேட்கிறான் என்பது புரிந்தது.

எனவே சமந்தகமணி மாலை என்னும் வைரம்போல் ஜொலிக்கும் ஒரு மாலையை சத்ராஜித்துக்கு தந்தான்.

அதை தந்து அதை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்? அதை எப்படி வைத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் சூரியன் விளக்கினான். முறையாக வைத்துக்கொள்ளாவிட்டால் அது செல்வம், புகழ், மகிழ்ச்சி என்னும் மூன்றையும் கெடுத்துவிடும் என்றும் கூறுகிறான்.

சமந்தகமணி மாலை பூஜிக்கப்பட்டால் தினமும் நள்ளிரவில் எட்டுயானை அளவுக்கு தங்கம் தரும். கூடவே வெற்றிகளை மட்டுமே தரும் என்று கூறி செல்கிறான்.

இந்நிலையில் சத்ராஜித்துக்கு அப்போதே கண்ணனை ஜெயித்து விட்ட மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதன்பிறகு அதுதரும் தங்கம் மற்றும் புகழ், மகிழ்ச்சியால் துவாரகை முழுக்க சத்ராஜித் பற்றியே அனைவரும்

https://t.me/tamilbooksworld

பேசத்தொடங்குகின்றனர்.

செல்வமும், புகழும் குவியவும் சத்ராஜித்தும் மாறத் தொடங்கினான். இந்நிலையில் துவாரகை அரசனான பலராமர், சத்ராஜித்தின் சமந்தகமணி பற்றி கேள்விப்பட்டு ஸ்ரீகிருஷ்ணரை அழைத்து அதைப் பற்றி கேட்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணனும் சூரியதேவன் தந்த சந்தகமணி மாலை தினமும் எட்டுயானை அளவு தங்கத்தை தருகிறது. அதை எல்லாருக்கும் தந்து சத்ராஜித்தும் தன்னை வள்ளல் ஆக்கிக் கொண்டுவிட்டான் என்கிறான்.

பலராமரோ அதைக்கேட்டு சிரித்துவிட்டு, மாறுபட்ட கோணத்தில் சிந்திக்கிறார். இப்படியே போனால் துவாரகையே ஒருநாள் தங்கமயமாகிவிடும். பின்னர் சத்ராஜித்தே எல்லார்

முன்னும் அரசன் ஆக கருதப்படுவான். ஒரு கட்டத்தில் சத்ராஜித் துவாரகை அரசன் இனி நானே என்றும் கூறிக்கொள்ளலாம் என்பதெல்லாம் அவருக்குள் அலைமோதத்தொடங்குகிறது.

## 10

பலராமர் கண்ணனிடம் அதன் நிமித்தம் ஒரு உத்தரவு பிறப்பித்தார்.

"அந்த மாலை ஒரு தனிமனிதனிடம் இருப்பதைவிட ஒரு அரசாங்கத்திடம் இருந்தால் அது அரசாங்கத்திற்கும் நல்லது. மக்களுக்கும் நல்லது. எனவே அதை நம்மிடம் ஒப்படைக்கச் சொல்" என்று ஸ்ரீகிருஷ்ணரிடம் சொல்கிறார் பலராமர்.

ஸ்ரீகிருஷ்ணன் அதைக்கேட்டு சிரித்தான்.

'அண்ணா, சத்ராஜித் புலன்களை அடக்கி தவம் செய்து அவனுக்கென பெற்றுக்கொண்ட வரம் அது. அதை நாம் கேட்பது அவ்வளவு சரியில்லை" என்றான்.

"சரியில்லைதான். ஆனால் இப்படியே விட்டால் நாளை இந்த ராஜ்ஜியத்தில் அரசர்களான நம்மைவிட நம் குடிகள் செல்வந்தர்களாகவும், அந்த சத்ராஜித் அவர்களுக்கெல்லாம் அரசன் போலவும் ஆகிவிடுவான். ஒரு போரில் ராஜ்ஜியத்தை இழப்பதைவிட இது மிக மோசமானது" என்றார் பலராமர்.

"அது சரி, நாம் கேட்டு அவன் தரமறுத்துவிட்டால்?"

https://t.me/tamilbooksworld

"அதன்பின் யுத்தம்தான் ஒரே வழி?"

"அந்த மாலை யாரிடம் உள்ளதோ அவர்களை வெல்ல முடியாதே?"

"அதையும் பார்த்துவிடலாம். நம் கண் எதிரில் நம்முடைய ராஜ்ஜியம் பறிபோவதை சகிக்க என்னால் முடியாது" என்றார் பலராமர்.

ஸ்ரீகிருஷ்ணனும் அரைமனதாக ஸ்ரீபலராமர் கட்டளையை செயல்படுத்த முனைந்தான், அதற்காக முதல்முதலாக ஸ்ரீகிருஷ்ணன், சத்ராஜித்தின் அரண்மனைக்கு வரவும் எல்லாரும் ஆச்சரியப்படுகின்றனர்.

ஆனால், சத்ராஜித், ஸ்ரீகிருஷ்ணனிடம் மிக அலட்சியமாக நடந்துகொள்கிறான். பலராமனுடைய கட்டளையையும் ஏற்க மறுத்ததோடு, அது பலராமர் விருப்பம் அல்ல. உன் விருப்பம்! பலராமர் இப்படி எல்லாம் சொல்லக்கூடியவர் அல்ல" என்றும் கூறுகிறான்.

சத்ராஜித்தின் ஒரே மகள்தான் சத்யபாமா!

இவளுக்கோ சத்ராஜித் ஸ்ரீகிருஷ்ணனை அவமானப்படுத்துவது துளியும் பிடிக்கவில்லை. மாறாக ஸ்ரீகிருஷ்ணனை கண்ட மாத்திரத்தில் காதல் கொள்கிறாள்.

ஸ்ரீகிருஷ்ணனும் திரும்பியவனாக சத்ராஜித், பலராமர் கட்டளையை ஏற்க மறுத்ததை கூறுகிறான். குறிப்பாக அந்த கட்டளை தங்களுடையதல்ல, என் எண்ணம் அது என்று சத்ராஜித் நினைக்கிறான்' என்று கூறவும் பலராமர் தானே நேரில் போய் அவனிடம் பேச முடிவு செய்கிறார்.

அதற்குள் அந்த சமந்தக மணிமாலையை சத்ராஜித்தின் தம்பி பிரசேனஜித் ஆசையாக தன் கழுத்தில் அணிந்துகொண்டு வேட்டைக்கு செல்கிறான்.

சத்ராஜித் தன் தம்பி வேட்டையில் வெற்றிபெற விரும்பி மாலையை போட்டு அனுப்பிவைக்கிறான்.

இதை பாமா தடுக்கப் பார்க்கிறாள். ஆனால் சத்ராஜித் பாமா பேச்சை கேட்கவில்லை.

மணிமாலையுடன் வேட்டைக்கு பிரசேனஜித் சென்ற அதே நாள் அதே நேரம் ஸ்ரீகிருஷ்ணனும் வேட்டைக்குச் செல்கிறான்.

ஒரு சிங்கம் ஒன்று துவாரகைக்குள் வந்து பலரை கொன்றுவிட்டு சென்று விடுகிறது.

https://t.me/tamilbooksworld

எனவே பலராமர் ஸ்ரீகிருஷ்ணனை அந்த சிங்கத்தை கொன்று வருவதற்காக அனுப்புகிறார்.

ஆக ஒரே காட்டுக்குள் மணிமாலையுடன் பிரசேனஜித்தும், கையில் வில்லம்புடன் ஸ்ரீகிருஷ்ணனும் செல்கின்றனர். விதியும் இங்கிருந்துதான்தன் விளையாட்டை தொடங்குகிறது.

காட்டிற்கு சென்ற சத்ராஜித்தின் சகோதரன் பிரசேனஜித் ஒரு கட்டத்தில் இயற்கை உபாதைக்கு ஆளாகிறான். அவ்வேளையில் தன் கழுத்தில் அணிந்திருந்த சமந்தகமணிமாலையைக் கழற்றி ஒரு பூச்செடிமேல் சாத்திவிட்டு ஒதுங்கிச் செல்கிறான். அவனைவிட்டு மணிமாலை நீங்கிய நொடியே அவன் சராசரி மனிதன் போலாகிறான். பின் உபாதை நீங்கி ஒரு தடாகம் நோக்கி கால்கழுவச் செல்கிறான். அங்கே ஸ்ரீகிருஷ்ணர் எந்த சிங்கத்தை கொல்வதற்காக புறப்பட்டானோ அந்த சிங்கம் நீர் அருந்தியபடி இருந்தது. அது பிரசேனஜித்தை பார்க்கவும் வெறியோடு பாய்ந்து அவனைக்கொல்கிறது. பின் அது சமந்தகமணி மாலையை மலர்ச் செடியிடம் இருந்து தான் எடுத்துக்கொண்டு செல்லத் தொடங்குகிறது. பிரசேனஜித் இப்படி அநியாயமாக மாலையோடு தன்னையும் இழந்துவிட்ட நிலையில் துவாரகையில் சத்ராஜித் தம்பி இன்னும் வரவில்லையே என்று தவித்தபடி இருக்கிறான். மாலை முடிந்து இரவும் வருகிறது அன்று பவுர்ணமி கழிந்த நான்காம் நாள்.

வானில் நான்காம் பிறை பளிச்சென்று தெரிகிறது. காட்டிற்குள் சிங்கத்தை வேட்டையாடச் சென்ற ஸ்ரீகிருஷ்ணனோ அலையாய், அலைந்தும் சிங்கம் கண்ணில் படாததால் திரும்பத் தொடங்குகிறான்.

இந்நிலையில் வரும் வழியில் யதார்த்தமாக ஸ்ரீகிருஷ்ணன் அண்ணாந்து வானம் பார்த்திட, வானில் நான்காம் பிறை நன்கு தெரிகிறது. அதை ரசித்தபடியே துவாரகை வந்து சேர்கிறான்.

மறுபுறம் பிரசேனஜித் திரும்பாததும், ஸ்ரீகிருஷ்ணன் திரும்பிவிட்டதும் சத்ராஜித்துக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஸ்ரீகிருஷ்ணன் பிரசேனஜித்தை பின்தொடர்ந்து சென்று சமந்தகமணி மாலையை அபகரித்திருக்கக்கூடும் என்று அவன் மனம் நம்பத்தொடங்குகிறது. நேரில் வந்து கேட்டு தராததால், ஸ்ரீகிருஷ்ணன் குறுக்குவழியில் சதி செய்துவிட்டதாக நம்பி அதை ஒரு குற்றச்சாட்டாகவே வைக்கிறான். இதை சற்றும் எதிர்பாராத பலராமர், ஸ்ரீகிருஷ்ணரைப் பார்க்க ஸ்ரீகிருஷ்ணனும் தான் சிங்கத்தை வேட்டையாட மட்டுமே சென்றதாகவும் மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறுகிறான்.

https://t.me/tamilbooksworld

ஆனால் சத்ராஜித் அதை நம்பாமல் இது உன் சதிச்செயல்தான் என்று கூறவும், தான் குற்றவாளியில்லை என்பதை நிரூபிக்க ஸ்ரீகிருஷ்ணர் சத்ராஜித்தின் வீரர்கள் சிலருடன் திரும்பவும் வனம் புறப்படுகிறான்.

## 11

பெரியவர் தன் 13வது வயதில் மேற்கண்ட கதையின் ஒரு பாதியைக் கூறி நிறுத்தியவராக உபன்யாசம் கேட்டபடி அமர்ந்திருக்கும் கூட்டத்தை பார்க்கிறார்.

கூட்டத்திடம் ஓர் அர்த்தமுள்ள மவுனம்.

பெரியவரின் உபன்யாசத்தில் அவர்கள் தங்களையே மறந்து அமர்ந்திருக்கிறார்கள். அதை விட அவர் பேசுவதை கேட்டபடி இருந்த அவரது குருவானவர் ஆச்சரியத்தின் உச்சத்திலேயே இருக்கிறார்.

ஒரு புராண கதையை எப்படிச் சொல்ல வேண்டும் என்பது தெரிந்து துளியும் சுவாரஸ்யக்குறைவின்றி அவர் சொல்லிச் செல்வதைக் கண்டு இனி இந்த காமகோடி மடத்தை பற்றி யாதொரு கவலையும் படத்தேவையில்லை. இவன் பாலகனுக்கு பாலகன், ஞானிக்கு ஞானி என்று பெருமிதம் கொள்கிறார்.

உபன்யாசம் தொடர்கிறது...

ஸ்ரீகிருஷ்ணன் சத்ராஜித்தின் வீரர்களோடு காட்டிற்குள் பிரசேனஜித்தை தேடி அலையவும் ஒரு இடத்தில் அவனது தலைமட்டும் கிடக்கிறது. அருகிலேயே அவன் உடம்பைச் சுவைத்த சிங்கம் உமிழ்ந்த எச்சங்கள்!

ஆனால் மணிமாலை காணவில்லை. உடன் வந்த வீரர்கள் அந்த

தலையையும் உடம்பின் மிச்சத்தையும் மூட்டைக்கட்டிக் கொண்டு அதை எடுத்தபடி ஒருவன் சத்ராஜித்தை சந்திக்க புறப்படுகிறான்.

மற்றவர்கள் ஸ்ரீகிருஷ்ணனோடு சமந்தகமணியை தேடிச் சென்றனர். அப்படிச்சென்ற வழியில் ஒரு இடத்தில் சிங்கம் இறந்து கிடந்தது. அங்கிருந்து பெரிய அளவில் காலடித்தடங்கள் ஒரு இடம் நோக்கிச் சென்றன. ஸ்ரீகிருஷ்ணனும் மற்றவர்களும் காலடித் தடயத்தை தொடர்கின்றனர்.

அது ஜாம்பவான் என்னும் ராமாயண காலத்தில் இருந்து சிரஞ்சீவியாக

https://t.me/tamilbooksworld

வாழ்ந்து வரும் கரடி உருவத்திலான ஒரு ஞானியுடைய காலடித் தடங்களாகும்.

அந்த தடங்கள் ஒரு குகைக்குள் சென்று முடிகின்றன. ஸ்ரீகிருஷ்ணர் அந்தக் குகைக்குள் நுழையவும் உள்ளே ஒரு பெண் தொட்டிலில் குழந்தை ஒன்றை பாட்டுப்பாடி தூங்கச் செய்தபடி இருக்கிறாள். அந்தத் தொட்டிலில் சமந்தகமணி தொங்கியபடி இருக்கிறது.

அதை அங்கேயே பார்க்கவும் எல்லாருக்கும் அப்பாடா என்று இருக்கிறது. பாட்டுப் பாடியபடி இருந்த பெண் ஜாம்பவனின் மகள் ஜாம்பவதி. அந்தக் குழந்தை அவள் உறவுக்கார குழந்தை. இந்நிலையில் அவள் ஸ்ரீகிருஷ்ணரை கண்டதும் பிரமித்துப் போகிறாள்.

அவர் மணிமாலையை தேடி வந்திருப்பதை தெரிந்துகொண்டு மாலையை ஸ்ரீகிருஷ்ணரிடம் வேகமாக அதை எடுத்துக்கொண்டு சென்றுவிடும்படி கூறுகிறாள்.

ஸ்ரீகிருஷ்ணனோ, 'இது எப்படி இங்கு வந்தது என்பது தெரியாமல் நான் செல்லமாட்டேன்" என்று கூறினான்.

அவளும் "அதை தன் தந்தையான ஜாம்பவான்தான் ஒரு சிங்கத்தைக் கொன்று அதனிடம் இருந்து எடுத்துவந்தார். அவர் இப்போது வெளியே நீராடச் சென்றுள்ளார். அவர் திரும்பி வந்தால் இந்த மாலையை தராமல் உங்களோடு யுத்தம் புரியத் தொடங்கிவிடுவார்" என்கிறாள் ஜாம்பவதி.

அவள் அப்படிச் சொல்லும் போதே ஜாம்பவானும் வர... அவள் சொன்னது போலவே யுத்தமும் தொடங்குகிறது.

ஸ்ரீகிருஷ்ணனோ ஜாம்பவானிடம் பதிலுக்கு யுத்தம் புரியாமல் அவர் அடிப்பதை எல்லாம் மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்.

இந்நிலையில் பிரசேனஜித் ஆட்களில் சிலர் அங்கிருந்து புறப்பட்டு சத்ராஜித்தை சந்தித்து நடந்ததை எல்லாம் கூறுகின்றனர். சத்ராஜித்தும் அவசரப்பட்டு ஸ்ரீகிருஷ்ணன் மேல் பழிபோட்டு பேசியதற்காக வருந்துகிறான்.

அப்படியேதன் பொறாமையும் அலட்சியமான போக்கும் தம்பி உயிரை வாங்கிவிட்டதை எண்ணி வருந்துபவன் இனி சமந்தகமணி மாலைக்குதான் அருகதையற்றவன் என்றும் தெரிந்து கொள்கிறான்.

https://t.me/tamilbooksworld

காட்டிலே குகையிலோ யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

ஜாம்பவான் என்பது வெல்ல முடியாத ஒருவருக்கான பெயராகும். இங்கோ உண்மையில் ஜாம்பவானால் ஸ்ரீகிருஷ்ணனை எதுவும் செய்ய முடியவில்லை.

ஒரு கட்டத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தன் முந்தைய அவதாரமான ஸ்ரீராமனாகவும், தோன்றி ஜாம்பவானிடம் அடிவாங்கிட, ஜாம்பவானுக்கு தூக்கி வாரிப்போடுகிறது.

பிறகே ஸ்ரீகிருஷ்ணன் வடிவில் வந்திருப்பதும் ஸ்ரீராமனே என்பது புலனாகி யுத்தத்தை உடனேயே நிறுத்திவிட்டு அப்படியே ஸ்ரீகிருஷ்ணன் காலில் விழுந்து கதறத்தொடங்குகிறான்.

"எம் பெருமானே, எதற்காக இந்த சோதனை? உன்னோடா நான் யுத்தம் புரிந்தேன்? பெரும்பாவியாக என்னை ஆக்கி விட்டாயே! இது நியாயமா?" என்றும் கேட்கிறான்.

ஸ்ரீகிருஷ்ணனோ ஜாம்பவான் வரையில் ஸ்ரீராமனாக காட்சி தந்தபடியே அதற்கு பதில் தருகிறான்.

"என் அருமை ஜாம்பவானே! கடந்த என் அவதார காலத்தில் சீதாதேவியை மீட்பதற்காக நான் பாடுபட்ட போது சுக்ரீவனோடு சேர்ந்து எனக்கு பல விதங்களிலும் உதவி செய்தவன் நீ. என் அருமை அணுக்கத் தொண்டனான அனுமனுக்கே அவன் ஆற்றலை எடுத்துக்கூறி அவனை இலங்கைக்கு அனுப்பியதே நீதான். ஆனால், அதற்கு பிரதிபலனாக நான் உனக்கு எதையுமே தரவில்லை. அனுமனை நான் ஆரத்தழுவியபோது நீ உனக்குள்ளேயும் நான் ஆரத்தழுவவேண்டும் என்று விரும்பினாய். ஆனால் கரடி உடம் போடு இருந்துகொண்டு கட்டித் தழுவுவதை நீ விரும்பவில்லை.

எனவேதான் உன் ஆசையை அப்போது அடக்கிக்கொண்டாய். ஆனால் நான் உன்னை தழுவி உன்னை கவுரவப்படுத்தியிருக்கலாம். நானும் அதை அப்போது செய்ய தவறிவிட்டேன். அதற்கு பரிகாரமாகவே இப்போது உன் கரங்கள் என் மேனி எங்கும் அடிக்கும் சாக்கில் படுவதற்கு சம்மதித்தே உன் அடிகளை நான் தாங்கிக்கொண்டேன். உண்மையில் நான் இப்போதுதான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று ஸ்ரீகிருஷ்ணன் ராம அவதார நினைவுகளுடன் பேசினான்.

https://t.me/tamilbooksworld

ஜாம்பவானின் விழிகளில் ஆனந்தக்கண்ணீர்!

பெரியவர் தன் உபன்யாசத்தில் இந்த கட்டத்தை நுட்பமாக விவரித்த வேளையில் கேட்டுக்கொண்டிருந்த அனைவர் விழிகளிலும் கூட ஆனந்த கண்ணீர்!

## 12

ஒரு பனிரண்டு வயது சிறுவனாக இருந்துகொண்டு சமந்தகமணி வரலாற்றை பெரியவர் தங்கு தடையின்றி சொன்னவிதம் அன்று அவ்வளவு பேரையும் வாயடைக்கச் செய்தது. அதை ஒரு கதையாக கூறாமல் அதில் ஒளிந்திருக்கும் நுட்பமான சங்கதிகளையும் பெரியவர் கூறிய விதம்தான் அலாதியானது. ஜாம்பவான் கொடுத்த அடிகளை கண்ணன் வாங்கிக்கொண்ட காரணம் எத்தனை பேருக்கு தெரியும்?

உபன்யாசம் புரிவதை அன்றாட கடமையாக கொண்டவர்கள் கூட இதுபோன்ற கட்டங்களில் நுட்பம் தெரியாமல் கதையை கதையாகவே கூறிவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள். ஆனால், பெரியவர் அப்படியில்லை.

இந்த சமந்தகமணி வரலாற்றில் பிள்ளையாரும் வருகிறார். அவர் சம்பந்தபட்ட சங்கடஹர சதுர்த்தி விஷயமும் இந்த வரலாற்றில் சம்பந்தப்பட்டு வருகிறது. கூடவே வானில் வலம் வரும் சந்திரனும் இந்த வரலாற்றில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறான். கண்ணன், கணபதி, சந்திரன் ஆகிய மூவருக்கும் இடையேயான ரசமான விஷயங்கள் நமக்கெல்லாம் மிக முக்கியமானவை. நாம் கட்டாயம் அறியவேண்டியவையும் கூட.

அவைகளை பெரியவர் வாயிலாகவே தொடர்ந்து சிந்திப்போம்…

"கண்ணனின் காலடியில் விழுந்து ஜாம்பவான் கதறத் தொடங்க, கண்ணன் அவனைத் தூக்கி நிறுத்தி ஆறுதல் கூறுகிறான்.

அப்போது ஜாம்பவான் கண்ணனிடம் ஒரு வேண்டுகோள் வைக்கிறான்.

"கண்ணா, உன் முந்தைய ஜென்மத்தில் நான் எனக்கென எதையும் கேட்கவில்லை. கேட்கவும் தோன்றவில்லை. ஆனால் இப்போது தோன்றுகிறது. நான் ஒன்றைக் கேட்கட்டுமா?" என்று கேட்க... ஸ்ரீகிருஷ்ணனும் தாராளமாக கேள் என்று கூற, ஜாம்பவானிடம் சற்று

https://t.me/tamilbooksworld

அமைதி.

"ஜாம்பவானே என்ன தயக்கம்."

"ஒன்றுமில்லை. நான் கேட்டு நீ மறுத்துவிட்டால்?"

"மறுக்கமாட்டேன். இது என் மேல் ஆணை" ஸ்ரீகிருஷ்ணன் சத்தியம் செய்யவும் ஜாம்பவானுக்கு தைரியம் வருகிறது.

"நீ வாக்கு கொடுத்துவிட்டால் நிச்சயம் மாறமாட்டாய் என்று நம்புகிறேன்."

"ஜாம்பவானே, ராமனாக இருந்தபோது செய்யத் தவறியதை நான் கிருஷ்ணனாக இருக்கும் போதாவது செய்து நன்றிக் கடனை தீர்த்துக்கொள்வேன். தைரியமாகக் கேள்!" ஸ்ரீகிருஷ்ணன் திரும்பவும் தைரியம் தரவும் ஜாம்பவான் பார்வை அடுத்து தன் மகளான ஜாம்பவதி மேல்தான் சென்றது. அவளும் வெட்கத்துடன் தான் நின்று கொண்டிருந்தாள்.

ஜாம்பவதியை அருகில் அழைத்த ஜாம்பவான், "கண்ணா, என் மகளை மணந்து கொண்டு என்னை உன் மாமனாக்கிக் கொண்டு கவுரவிக்க வேண்டும்" என்று கூறவும் கண்ணனிடம் திகைப்பு.

இருந்தாலும் வாக்குறுதி கொடுத்திருப்பதால் மறுக்க முடியாத நிலை. சில நிமிட மவுனத்துக்கு பின், "சரி" என்று ஸ்ரீகிருஷ்ணனும் சம்மதிக்க அங்கேயே அப்போதே இருவருக்குமான திருமணம் ஒருமாலை மாற்றும் சடங்கு மூலம் எளிதாக முடிந்து போனது.

இந்தக் கட்டத்தை சொல்லி முடித்த பெரியவர், கூட்டத்தை சற்று அமைதியோடு பார்த்தார். எல்லார் முகத்திலும் 'ருக்மணி இருக்க கண்ணன் ஜாம்பவதியையும் மணந்து கொண்டால் ருக்மணி அதை ஏற்றுக்கொள்வாளா?" என்ற கேள்வி.

பெரியவர் அதை அப்படியே எதிரொலித்தார்.

"என்னடா ருக்மணின்னு ஒருத்தி இருக்கும்போது கிருஷ்ணன் ஜாம்பவதியை கல்யாணம் பண்ணிக்கிறானே, பூர்வ ஜென்மத்துல ஸ்ரீராமனா ஏகபத்தினி விரதனா வாழ்ந்தவனா இந்த ஜென்மத்துல இப்படி இருக்கான்னு ஒருகேள்வி எழுறது இல்லையா?" அவர் கேள்விக்கு எல்லாரிடமும் ஆமோதிப்பு!

https://t.me/tamilbooksworld

"ஒருத்தனுக்கு ஒருத்திங்கறதுதான் நம்ப பண்பாடு. ஆனால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு அதெல்லாம் கிடையாதான்னு நினைக்க தோணும். ஸ்ரீகிருஷ்ணனை நினைக்கும் போது கோபிகா ஸ்த்ரீகள் எண்ணமும் வரும். இங்க நம்பளப்போல காம்யார்த்த வாழ்க்கை வாழறவனா ஸ்ரீகிருஷ்ணனை நாம் பார்க்கக்கூடாது. அவன் பரமாத்மா, ஜாம்பவதியும் சரி, கோபிகா ஸ்த்ரீகளும் சரி 'ஜீவாத்மாக்கள். ஸ்ரீவைஷ்ணவத்துல ஆணும் சரி, பெண்ணும் சரி பரமாத்மா வரைல ஒண்ணுதான். புருஷன்னா அது அந்த விஷ்ணு மட்டும்தான். மற்ற எல்லாரும் தாசர்கள் தாசிகள்தான். ஆகையால் தான் ஸ்ரீகிருஷ்ணன் ஜாம்பவதியையும் ஏத்துண்டார்!" என்று அங்கே பரமாத்மா, ஜீவாத்மா விளக்கம் தரவும் கூட்டத்தவர்களிடம் ஒரே ஆச்சரியம்! அந்த உபன்யாசம் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் நடைபெற்றது.

ஜாம்பவதியை மணந்துகொண்டு சமந்தக மணியோடு ஸ்ரீகிருஷ்ணன் துவாரகைக்கு திரும்பவும் சத்ராஜித் ஸ்ரீகிருஷ்ணனை சந்தேகப்பட்டு துரஷித்தற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறான். அப்படியே தன் மகள் சத்யபாமாவை ஸ்ரீகிருஷ்ணன் ஏற்க வேண்டும் என்கிறான். ஜாம்பவதியை ஏற்கச் சொன்ன அதே காரணம் இங்கே சத்யபாமாவையும் ஏற்க வைக்கிறது. ருக்மணியும் ஆட்சேபிக்காமல் சத்யபாமா, ஜாம்பவதியை தன் தமக்கைகளாகவே ஏற்றுக்கொள்கிறாள்.

## 13

சமந்தகமணி இந்த நிலையில் சததன்வா என்பவனால் களவாடப்பட்டு சத்ராஜித்தும் கொலை செய்யப்படுகிறான்.

ஸ்ரீகிருஷ்ணனும் அதை களவாடிச் சென்ற சததன்வாவை யுத்தம் செய்து கொல்கிறான். ஆனாலும், சமந்தகமணிமாலை அவனிடம் இல்லை. சததன்வா அதை தன் நண்பனான அக்ரூரர் என்பவர் வசம் தந்துவிட அவர் அந்த மாலையோடு காசிக்கு போய் விடுகிறார்.

மொத்தத்தில் சூரியன் தந்த சமந்தக மணிமாலை அதை தவம் செய்து பெற்ற சத்ராஜித்தையும் அவன் தம்பி பிரசேனஜித்தையும், அதை களவாடிய சததன்வாவையும் கொன்று விடுகிறது.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு அதனால் கெட்டப்பெயர்தான். ஓர் அற்புதமான தெய்வீக தன்மை கொண்ட ஒரு மாலை இப்படிக் கூடவா கெடுதல்களைச் செய்யும்? எதனால் இப்படி ஆயிற்று? மற்றவர்கள் பேராசைப்பட்டார்கள். அதனால் அழிந்து போனார்கள். ஸ்ரீகிருஷ்ணன் பரமாத்மாவாயிற்றே!

https://t.me/tamilbooksworld

அவனுக்கும் ஏன் கெட்ட பெயர் ஏற்பட்டது?

இந்தக் கேள்விக்கெல்லாம் விடை விண்ணில் பிரகாசிக்கும் சந்திரனிடம்தான் விடை உள்ளது.

எப்படி என்று பார்ப்போம்...

கண்ணுக்கு குளிர்ச்சியான சந்திரன் சிவபெருமானால் சபிக்கப்பட்டு மாதா மாதம் வளர்ந்து தேய்பவனாக இருந்தான். இவனை மகாகணபதியான பிள்ளையாரும் ஒருமுறை சபித்து விடுகிறார். எப்படி தெரியுமா?

பிள்ளையார் சர்வலோக சஞ்சாரியாக சந்திரமண்டலத்துக்குள் நுழையவும், சந்திரன் அவரை கேலியாக பார்த்து சிரிக்கிறான்.

‘யானை முகம், மனித உடல், தொந்தி வயிறு என்று வினோத வடிவில் இருக்கும் நீ எந்த வகை உயிரினம்? என்று அவரிடமே கேட்க, கோபிக்கும் பிள்ளையார்,

"சந்திரா, நான் பேரழகன் எனும் ஆணவத்தில் நீ என்னை இகழ்ந்து பேசினாய். அகந்தை பிடித்த உன்னை இனி யார் பார்த்தாலும் அவர்கள் படாதபாடு படுவார்கள். அவர்கள் பழிக்கும் ஆளாவார்கள்" என்று சபிக்கவும் தான் சந்திரனுக்கும் தன்தப்பு புரிந்தது.

அதன்பின் அவன் பிள்ளையார் காலில் விழுந்து கதறி, மன்னிப்பு கேட்கவும், பிள்ளையாரும் சற்று மனம் மாறி ‘உன்னை என்று பார்த்தாலும் என்று இருப்பதை சற்று மாற்றி அமாவாசையில் இருந்து நீ வளர ஆரம்பிக்கும் சமயம் நான்காம் நாளான சதுர்த்தியன்று உன்னை பார்ப்பவர்கள் பழிபாவங்களுக்கு ஆளாவார்கள்’ என்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணனும் சதுர்த்தி அன்று மணிமாலையைத் தேடி காட்டுக்குள் போனபோதுதான் நான்காம் நாள் சந்திரனையும் பார்க்கும்படி ஆனது.

சமந்தக மணிமாலையோடு போன பிரசேனஜித்தை தேடிக்கொண்டு கண்ணன் காட்டுக்கு போன போது தான் வானில் நான்காம் பிறையை பார்க்கும்படி ஆயிற்று. நான்காம் பிறையை யார் பார்த்தாலும் சரி அவர்கள் பழிச் சொல்லுக்கும் அதன் காரணமாக துன்பத்துக்கும் ஆளாக வேண்டும் என்பது சந்திரன் மேல் உள்ள கோபத்தால் பிள்ளையார் சாபமிட்டுவிட்டார்.

இப்படி ஒரு சாபம் இருப்பது தெரிந்தால் நான்காம் நாளில் எவரும்

https://t.me/tamilbooksworld

சந்திரனைப் பார்க்க மாட்டார்கள். அதாவது சதுர்த்தி திதி என்றால், வானில் சந்திரனைப் பார்க்கக்கூடாது என்கிற ஒரு எண்ணம் எல்லாருக்கும் தோன்றிவிடும். கூடவே எதனால் இப்படி? என்கிற கேள்வியும் எழும். உடனே பிள்ளையாரின் சாபம் நினைவுக்கு வரும். கூடவே பிள்ளையார் நினைப்பும் தோன்றி அவரை வணங்கவும் செய்வோம்.

பிள்ளையார் சபித்தன் பின்னாலே இவ்வளவு உள் விஷயங்கள் உள்ளன.

இது தெரியாத நிலையில்தான் ஸ்ரீகிருஷ்ணனாகிய கண்ணன் நான்காம் பிறையை பார்க்க நேர்ந்தது.

எனவே சமந்தகமணிமாலையை முதலில் திருடியது கண்ணன் தான் என்று அந்த மாலைக்கு உரிய சத்ராஜித்தும் கண்ணன் மேல் பழிபோட்டான். பிறகு கண்ணன் காரணமல்ல என்று தெரிந்து, தன் தவறுக்கு பிராய்ச்சித்தமாக தன் மகளான சத்யபாமாவையே திருமணமும் செய்து கொடுத்தான். ஆனாலும் பிரச்னை தீரவில்லை. சத்யபாமாவை மணக்க விரும்பிய சததன்வா என்பவன் சத்ராஜித்தை கொன்று சமந்தக மணிமாலையையும் அபகரித்து சென்று அதை அக்ரூரர் என்பவர் வசம் தந்துவிட, அவர் அதோடு காசிக்கு புறப்பட்டு சென்றார். சததன்வாவை கண்ணன் படையெடுத்து வந்து கொன்றான்.

மொத்தத்தில் சமந்தகமணி அதை தவம் செய்து பெற்ற சத்ராஜித்தை அவன் தம்பி பிரசேனஜித்தை, அதை களவாட முயன்ற சததன்வாவை என்று ஒன்றுக்கு மூன்று உயிர்களைப் பறித்த நிலையில் கண்ணன் வரையில் அது எங்கிருக்கிறது என்றும் தெரியாமல் போயிற்று!

பெரியவர் இதுவரை உபன்யாசம் செய்த நிலையில் மக்களைப் பார்த்து சில கேள்விகளை கேட்கவும் செய்தார்.

"சூரியன் தந்த அற்புதம்தான் சமந்தகமணி. ஆனால், அதை ஒழுங்காக வெச்சுக்க முடியல பார்த்தேளா?" என்று எல்லாரையும் பார்த்து கேட்டார்.

"அதை கண்ணன் போய் ராஜாவான பலராமர்கிட்ட கொடுத்துடு... இதுமாதிரி பெரிய விஷயங்கள் எல்லார்க்கும் பொதுவா ஒரு ராஜாகிட்ட இருக்கிறதுதான் நல்லதுன்னு சொல்லியும் சத்ராஜித் கேட்கல. காரணம் அவ்வளவு பேராசை இல்லையா?" என்று திரும்பவும் கேட்டவர் மூன்றாவது கேள்வியையும் கேட்டார்.

https://t.me/tamilbooksworld

"தெய்வீகமான விஷயங்களை வெச்சுக்க தெரியணும். துளியும் சுயநலம், பொறாமை கூடாது. பொறாமையும் சுயநலமும் இருந்தா எவ்வளவு பெரிய தெய்வீகமானவைகளும் அழிவுக்குத் தான் பயன்படும்கிறது தானே சூரியனோட சமந்தகம் நமக்கு சொல்ற நீதி?" என்று மூன்றாவதாக கேட்கவும் கூட்டத்தவரிடம் ஆமோதிப்பு!

இந்த சமந்தகமணியால சாமான்யப்பட்ட சத்ராஜித்துக்குதான் கஷ்டம் வந்து அவன் உயிரும் போச்சு. ஆனா கிருஷ்ண பரமாத்மாவுக்கு இதனாலதான் ஜாம்பவதி, பாமான்னு இரண்டு பத்தினிகள் கிடைச்சா. ஏன்னா ஸ்ரீகிருஷ்ணனா கண்ணன் துளியும் சுயநலமில்லாம நடந்துண்டான். அதனால அவன் வரைல முடிவு நல்லவிதமா அமைஞ்சது.

"ஸ்ரீகிருஷ்ணன் இன்னும் பல நன்மைகள் நமக்கெல்லாம் கிடைக்கவும் வழி செய்தான். எப்படி தெரியுமா?" பெரியவர் கேள்வியாய் கேட்டுவிட்டு, சமந்தக மணி புராணத்துக்குள் மீண்டும் புகுந்தார்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு நான்காம் பிறை பார்த்தால் கேடு வரும் என்பது தெரியாது என்ற இடத்தில் இருந்து கதையை ஆரம்பித்தார்.

"ஸ்ரீகிருஷ்ணனிடம் ஒரு வருத்தம். அவனைவிட பாமாவிடம் அதிக வருத்தம். அப்பா, சித்தப்பா என்று இரண்டு பேரை அல்லவா அவள் பறி கொடுத்துவிட்டாள்.

இந்த வேளையில்தான் சர்வலோக சஞ்சாரியான நாரத மகரிஷி ஸ்ரீகிருஷ்ணனை காணவந்தார். அவர்தான் ஸ்ரீகிருஷ்ணர் பழிக்கு ஆட்படவும் பாடாய்படவும் காரணம். நான்காம் பிறையை அவன் பார்த்ததுதான் என்றார்.

ஸ்ரீகிருஷ்ணன் நான் என்ன செய்ய வேண்டும். அதற்கு என்று அப்பாவி போல் கேட்டான்.

"இது அவதாரம் என்பதற்காக இப்படி கூடவா மனிதத் தன்மையோடு நடந்து கொள்வீர்? உமக்குத் தெரியாததா பெருமாளே?" என்று கேட்டார்.

"தெரிந்தால் எதற்கு கேட்கிறேன் நாரதரே!" என்று கிருஷ்ணன் கோபமாக கூறவும், நாரதருக்கும் ஸ்ரீகிருஷ்ணனிடம் தானும், எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது தெரிந்துவிட்டது.

உடனேயே பரிகாரத்தை கூறத்தொடங்கினார்.

https://t.me/tamilbooksworld

"பிரபு, நான்காம் பிறை பார்த்த தோஷம் நீங்க ஒரே வழி கணபதி வழிபாடுதான். அவரை நினைத்து அவருக்குப் பிரியமான வெல்லம், கொழுக்கட்டையை வைத்து நிவேதனம் செய்தால் கணபதி உள்ளம் உவந்து அனுக்கிரகம் செய்வார்" என்று கூறவும், பாமா அப்போதே கணபதி பூஜைக்கு தயாராகி விடுகிறாள்.

ருக்மணி நைவேத்யப் பிரசாதம் தயாரிக்க தொடங்க ஸ்ரீகிருஷ்ணனும் மானுட பாவனையில் தன் வரையில் சகோதரி மகனான கணபதியை மருமகன் என்று எண்ணாமல் பிரணவ சொரூபன் என்றும், தேவர்களுக்கு எல்லாம் முதல்வன் என்கிற தகுதியை எண்ணியும் கணபதி வழிபாட்டில் இறங்கிட கணபதி ஓடிவந்தார்.

"பாமா... மாமா... என்னது? தாங்கள் போய் என்னை வணங்குவதா?" என்று பெருந்தன்மையாக கேட்க.

"உன் தந்தையே உன்னை வணங்கிய பிறகுதான் முப்புரம் எரிக்கப்புறப்பட்டார்? உன்னை வணங்கிச் செய்யும் செயல்கள் வெற்றியில் முடியும் என்று ஒரு நிலை இருக்க அதை நானும் பின்பற்றுகிறேன் அவ்வளவுதான். விதிகளை உருவாக்கியவர்களே அதை பின் பற்றாவிட்டால் அப்புறம் அந்த விதியை யார் மதிப்பார்?" என்று கேட்க...

கணபதி பூரிப்புடன், "நாலாம் பிறை தோஷம் நீங்கள் என்னை எண்ணிய உடனேயே போய்விட்டது" என்று கூறிட, ஸ்ரீகிருஷ்ணனும் கணபதியிடம் சில கருத்துகளை முன்வைக்க தொடங்குகிறார்.

"விநாயகா. இருந்தாலும் நீ சந்திரனை இப்படி சபித்திருக்கக் கூடாது. சந்திரனின் தப்புக்கு இந்த பூஉலகில் பிறந்தவர்கள் என்ன செய்ய முடியும்? எனவே இவர்கள் நான்காம் பிறை பார்த்தால் பழிக்கு ஆளாவது என்பதை நீ கொஞ்சம் தளர்த்தி அவர்களுக்கு சுலபமான பரிகாரத்தைக் கூறு" என்றார் ஸ்ரீகிருஷ்ணர்.

"மாமா, நான்காம் பிறை பார்த்த பாவத்துக்கு பரிகாரமாக என்னை நினைப்பவர்கள் இனி உங்களையும் நினைத்துக் கொள்ளட்டும். உங்கள் விருப்பப்படி சுலபமான பரிகாரத்தையும் கூறிவிடுகிறேன். முதல் நாளான மூன்றாம் பிறையை பார்த்தாலே நான்காம் பிறைக்கான தோஷம் நீங்கிவிடும். அதற்கும் இயலாத நிலையில், ஆவணியில் எனக்கான

https://t.me/tamilbooksworld

மகாசதுர்த்தி நாளில் வழிபட்டாலும் போதும்" என்று கணபதி பரிகாரங்களைக் கூறி அருள, ஸ்ரீகிருஷ்ணரும் பூரித்துப்போகிறார்.

பெரியவர் சமந்தகமணி வரலாற்றை இப்படி கணபதியோடும், சந்திரனோடும் தொடர்புபடுத்தி சதுர்த்தி நாள் என்பது எப்படிப்பட்டது என்பதோடு கணபதியும் எப்படிப்பட்ட அனுக்ரகமூர்த்தி என்பதையும் கூறவும் முதிர்ந்த அந்த பேச்சை கேட்டு அன்று கூட்டத்தவர்கள் புளகாங்கிதமடைந்தனர்.

குறிப்பாக, அப்போதிருந்த மடாதிபதி அந்த பரமேஸ்வரனே பெரியவராக வந்துவிட்டதாக அப்போதே உணர்ந்துகொண்டார்.

இப்படி கல்வி, கேள்வி, உபன்யாசம், தியானம், தவம் என்று பெரியவரின் தவவாழ்வு நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக மின்னியது என்றால் மிகையே இல்லை.

பெரியவர் துறவு பூண்டகாலம் பாரததேசம் விடுதலை வேள்வியில் இருந்தது.

காந்தி சத்தியாகிரக முறையில் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

ஆன்மிக உலகத்தவர்க்கு ஒரு பெரியவர் என்றால், அரசியல்வாதிகளுக்கான பெரியவர் காந்தியாவார்.

மகாத்மாவோடு நம் பெரியவர் சந்திக்கும் ஒரு காலமும் வந்தது.

கேரள மாநிலம் பாலக்காட்டுக்கு அருகில் உள்ள ஒரு ஊரில்தான் அந்த அரிய சந்திப்பும் நடைபெற்றது.

## 15

பெரியவருக்கும் மகாத்மா காந்திக்குமான அந்த சந்திப்பு வரலாற்று சிறப்பு வாய்ந்தது மட்டுமன்று, பின்னாளில் மகாத்மா காந்தி உற்ற அருளோடு செயலாற்ற அது பெரிதும் வழிவகை செய்தது.

அதேபோல பெரியவரும் மகாத்மாவை ஆத்மார்த்தமாக புரிந்துகொண்டதோடு அவர் சார்ந்த விடுதலை வேள்வி வெற்றி பெற நித்தமும் சர்வேஸ்வரனிடம் பிரார்த்தனை செய்து கொள்ளவும் வழி செய்தது.

https://t.me/tamilbooksworld

இந்தச் சந்திப்பின்போது, நாடெங்கும் அங்கும் இங்குமாக இனக்கலவரங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

பிரிட்டிஷார் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நம்மை இன பேதம் காட்டியும், மதபேதம் காட்டியும் பிரிக்க முடிவு செய்து அதை செயல்படுத்தியும் கொண்டிருந்தனர்.

குறிப்பாக இந்துக்கள் முஸ்லிம்கள் இடையே திட்டமிட்டு பகையை உருவாக்கினர். இதற்கு வேறு வேறான இருவரது வழிபாட்டு முறைகள் அவர்களுக்கு உதவியாக இருந்தன.

மகாத்மா, பிரிட்டிஷாரின் இந்த தந்திரத்தை புரிந்து வைத்திருந்தார். இதனாலேயே அவர் இனக்கலவரங்களுக்கு எதிராக செயல்பட்டார்.

இனக்கலவரத்துக்கு சரியான பதிலடியாக அகிம்சை என்னும் ஆயுதத்தை கையிலெடுத்து உண்ணாவிரதம் இருந்தார். அவரது தீவிர உண்ணாவிரதம் கலவரத்தில் ஈடுபட்ட இருசாரர்களையும் சிந்திக்க வைத்து, ஆயுதங்களை கீழே போட வைத்தது.

இருந்தாலும் கலவரங்கள் தொடர்ந்தபடியே இருந்தன. கலவரத்தை சாக்கிட்டு, காந்தீய வழியில் போராடியவர்களை போலீசார் கைது செய்து சுதந்திரப் போராட்டத்தை அடக்கிக் கொண்டே இருந்தனர்.

இப்படிப்பட்ட நிலையில்தான் மகாத்மாவுடன் பெரியவர் சந்திப்பு நிகழ்ந்தது.

சந்திப்பு நிகழ்ந்த அன்று கூட ஒரு இந்துவை ஒரு முஸ்லிம் கொன்று விட்டிருந்தான்.

மகாத்மா பெரியவரிடம் இப்படி பழிக்கு பழி வாங்கும் போக்கு துளியும் சரியில்லை என்று வருத்தமுடன் கூறிட, பெரியவர் அதை ஆமோதித்து, "ஆயுத கலாச்சாரமே ஆபத்தானது... நமது வழிமுறைகளில் அதற்கு இடமே இல்லை. இது தொடர்ந்தால் நாளை ஒரு இந்துவே இன்னொரு இந்துவை கூட கொல்லும் நிலை வரலாம். அது உங்களுக்கும் நிகழலாம். யாருக்கும் நிகழலாம். எனவே, அகிம்சா வழிதான் மிகச் சரியான நமக்கான வழி!" என்று பேசி காந்தியை அமைதிப்படுத்தினாராம்.

இந்தச் சந்திப்புக்கு பின் மகாத்மா, பெரியவருடன் நிகழ்ந்த சந்திப்பு தனக்கு மிகுந்த பலத்தை அளிப்பதாக இருந்தது என்று குறிப்பிட்டார்.

https://t.me/tamilbooksworld

அந்நாளில் மடத்துக்கு பூஜையில் கலந்து கொள்ளவருகிறவர்கள் பூஜை முடிந்து பிரசாதம் பெற்றுச்சென்ற நிலையில் போஜனமும் முடித்து செல்வது பெரிய அளவில் வழக்கத்தில் இருந்தது. இன்றும் அந்த நடைமுறை காஞ்சி மடத்தில் ஒரு குறையும் இன்றி தொடர்கிறது.

இந்த போஜனத்திலும் ஒரு சிக்கல் நேரிட இருந்தது. 1931ம் ஆண்டு... இந்திய விடுதலைப் போரில் தீவிர பங்காற்றிய காங்கிரஸ் காரர்களில் பலர் பெரியவரை சந்தித்து அவரிடம் ஆசிபெற விரும்பினர். இதற்காக மடத்து மேலாளரிடம் கோரிக்கை வைத்தனர். ஆனால், மடத்து நிர்வாகிகள் இதைக்கேட்டு பயந்தனர்.

அப்போதைய வெள்ளை அரசாங்கம் காங்கிரசாருக்கு யார் ஆதரவு தந்தாலும் அவர்களை பாடாய்படுத்தி வந்தது. ஒடுக்கு முறை மூலம் அடக்கிவிடலாம் என்று எண்ணியது.

இது மடத்தாருக்கும் தெரியும். எனவே, காங்கிரசார் பெரிய வரை சந்திப்பதை அனுமதிக்கத் தயங்கினர். ஆனால் பெரியவர் காதுக்கு விஷயம் எட்டவும், அவர் துளியும் தயங்காமல் "எல்லோரையும் வரச்சொல். எல்லோருக்கும் போஜனத்துக்கும் ஏற்பாடு செய்துவிடுங்கள்" என்று ஒருபடி மேலேயே போய் விட்டார்.

மடத்து நிர்வாகிகள் பயந்தனர்.

வெள்ளை அரசு அதிகாரிகள் பற்றி பெரியவரிடம் கூறினர்.

பெரியவர் உடனே அவர்களிடம் திருப்பிக் கேட்டார்.

"என்னை நீங்க என்னன்னு கூப்பிட்றேள்?"

"ஜகத் குருன்னு"

"ஜகத் குருன்னா எல்லாருக்கும் தானே குரு?"

"ஆமாமா!"

"அப்ப வெள்ளைக்காரனுக்கு பயந்துண்டு காங்கிரஸ்காரனை பார்க்க பயந்தா அப்ப நான் யார்?" அவர்களால் பதில் கூறமுடிய வில்லை.

"பதில் சொல்லுங்கோ... பயம்னா இருட்டுன்னு அர்த்தமுண்டு. குருன்னா ஒளின்னு பொருளுண்டு. நான் ஜெகத்துக்கே ஒளியா இருக்க வேண்டியவன். நான் இருட்டுக்கு துணை போனா இந்தப் பட்டத்துக்கு

https://t.me/tamilbooksworld

நான் தகுதியா இருக்க முடியுமா?" என்று கேட்க எல்லாரும் வாயடைத்து போயினர்.

"வெள்ளைக்காரன் கேட்டா நீங்களும் வாங்கோ உங்களுக்கும் போஜனம் உண்டுன்னு சொல்லுங்கோ. பயந்து ஒடுங்கிடக்கூடாது. நிமிர்ந்து திமிராவும் பேசக்கூடாது. ஆறு மாதிரி போயிண்டே இருக்கணும்" என்ற அவர் விளக்கம் பலரை சிலிர்க்க வைத்தது.

அதே சமயம் அவர்கள் பயந்தது போல எதுவும் ஆகிவிடவில்லை.

பெரியவரின் இந்த தீர்க்கமான அணுகுமுறை மதம், மொழி, இனம் கடந்தது.

அதற்கு சான்றாகவும் ஒரு சம்பவம் உண்டு. 1921ம் ஆண்டு. மகாமகம் திரும்ப வந்தது. பெரியவர் சன்னியாசியான பிறகு வரும் இரண்டாம் மகாமகம் இது. பெரியவர் இதிலும் பங்கு கொண்டார்.

## 16

மகாமகத்தின் சிறப்பே அதில் பங்கு கொள்ள வருகிறவர்களுக்கு எல்லாம் பசியாற உணவிடும் அன்னதானச் சிறப்புதான்.

திரும்பின பக்கமெல்லாம் அன்னதானம் நிகழ்ந்தபடி இருக்கும். தானங்களிலேயே தலைசிறந்த தானம் அன்னதானம்தான். அதுமட்டுமல்ல, மற்ற தானங்கள் அளிக்காத ஒரு நிறைவை இந்த தானம் உடனே அளித்துவிடும்.

பெரும் பேராசைக்காரன் கூட வயிறு நிரம்பவும் போதும் என்று கூறி இலையை விட்டு எழுந்து விடுவான். ஆனால் மற்ற தானங்களில் உலகையே தானமாக கொடுத்தாலும் ஆகாசத்தில் உள்ள நட்சத்திரங்கள் கிடைக்காதா? என்று ஆசைப்படுவான். அதனாலேயே அன்னதானத்தை சிறந்த தானமாக நம் சாஸ்திரம் கூறுகிறது.

இந்ததானத்துக்கு இன்னொரு சிறப்பும் உண்டு.

இது மிகுந்த இடத்தில் திருட்டு இருக்காது. இருந்தாலும் குறைவாக இருக்கும். அடுத்து, சமுதாயமும் பாவத்துக்கும் உள்ளாகாது. ஒருத்தர் பசித்திருக்க ஒரு சமூகம்தான் மட்டும் உண்ணுவது பாவம். பசித்திருப்பவர்கள் வருத்தம் சமூகத்தை பாதிக்கும். இன்றும் நம் சமூகத்தில் நிறைய குறைபாடுகளும் மழை குறைவும், ஏற்ற தாழ்வும்

https://t.me/tamilbooksworld

இருக்கிறது என்றால் பிறர் பசித்திருக்க நாம் சுயநலமாக உண்ணுவதே காரணம்.

இதனாலேயே மடம் நித்ய அன்னதானத்தை தன் கடமைகளில் முதலாக செய்து வந்தது. இப்படிப்பட்ட அன்னதானத்தை 1921ம் ஆண்டு மாமாங்கத்திலும் செய்தது. லட்சக்கணக்கான பேர் வந்து சாப்பிட்டுச் சென்றனர். இந்த மாமாங்க நாளில் பிற மதத்தவர்களும் வந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்தி, தண்ணீர்தந்து சேவை செய்தனர். அதில் சென்னையை சேர்ந்த முஸ்லிம் இளைஞர் சங்கமும் ஒன்று.

சுமாராக 200 பேர் இந்தச் சங்கத்தில் இருந்து மாமாங்க வேளையில் சீரிய தொண்டு புரிந்தனர். இந்த தகவல் அப்போது பட்டீஸ்வரத்தில் முகாமிட்டிருந்த பெரியவர் காதுகளுக்கும் சென்றது.

பெரியவர் அதைக்கேட்டு மகிழ்ந்தது மட்டுமின்றி அந்த 200 பேரை மடத்துக்கு வர வழைத்து அவர்களோடு தனித்தனியே பேசி, அவர்களைப் பாராட்டி எல்லாருக்கும் மடம் சார்பில் போஜனம் அளித்து, இறுதியாக ஒரு கோப்பையையும் பரிசளித்து இந்த நட்பும் நல்லிணக்கமும் எப்போதும் தொடரட்டும் என்று ஆசீர்வதித்தார்.

பெரியவரின் சன்னியாச வாழ்வில் எவ்வளவோ ரசமான கட்டங்கள். அதில் அவரது பால்ய பிராயத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள் நம் நெஞ்சை நெகிழ்த்தும்.

பெரியவர் திண்டிவனத்தில் பள்ளி மாணவனாக இருந்த தருணத்தில் அவர் வசித்த தெருவில் ஒரு பாட்டி முறுக்கு செய்து விற்று வந்தாள். பாட்டியின் வயிற்றுப்பாடே அதில் தான் இருந்தது. பாட்டியின் கைப்பக்குவம் அலாதியானது. பெரியவர் அப்போது அப்பாவிடம் முறுக்கு சாப்பிட ‘அரையனா’ பெற்றுச் சென்று அதில் முறுக்கு வாங்கிச் சாப்பிடுவதோடு, தன் நண்பர்களையும் வாங்கச் சொல்லி ஊக்கப்படுத்துவார். இதனால் பாட்டிக்கு வியாபாரம் நன்கு நடந்தது.

ஒருநாள் பெரியவர் பாட்டியிடம் பெருமையாக தன்னால்தான் பாட்டிக்கு நல்ல வியாபாரம் என்று கூற பாட்டியும் ஒப்புக் கொண்டு சிரித்தாள்.

அப்படியே, "என் கைப்பக்குவமும் எல்லாரும் வாங்கிச் சாப்பிட காரணம்" என்றாள்.

"அப்ப நான் காரணம் இல்லையா?" என்று கேட்கவும், பாட்டி, "நீயும் ஒரு

https://t.me/tamilbooksworld

காரணம். இப்ப அதுக்கு என்னடா வந்தது?" என்று கேட்டாள்.

"அதுக்கென்ன வந்ததா? ஒரு தடவையாவது ஒரு முறுக்கையாவது நீ எனக்கு சும்மா தந்துருக்கியா?" என்று பெரியவர் கேட்கவும், பாட்டிக்கு கோபம் வந்துவிட்டது.

"நான் அப்படி எல்லாம்தரமாட்டேன். இஷ்டமிருந்தா வாங்கு. இல்லாவிட்டால் வாங்காதே" என்று பாட்டி கூற பெரியவரும் சளைக்காமல், "அப்புறம் நான் நிஜமாலுமே வாங்க மாட்டேன் தெரிஞ்சுக்கோ" என்றார்.

"சரிதான் போடா... நீ வாங்கலேன்னுதான் நான் அழறேனாக்கும்" என்றாள் பாட்டியும்.

"பாட்டி யோசிச்சு பேசு..."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? நீ பெரிய கலெக்டரு பாரு..."

"அப்ப கலெக்டரா இருந்தாதான் மதிப்பியா?"

"நான் கலெக்டரையே கூட என்ன மதிச்சாதான்டா மதிப்பேன்..."

"சரி... இனி நான் உன் கடைல முறுக்கு வாங்கவே மாட்டேன்."

"ரொம்ப முறுக்கிக்காதே... நீ வரணும்னு நான் ஒண்ணும் இங்க பூர்ண கும்பத்தோட காத்திருக்கல..." பாட்டி அப்படி சொல்லவும் பெரியவருக்குள் ஒரு இனம் தெரியாத வேகம்...

"ஒருநாள் காத்திருப்பே பார்..." என்றவராக பாட்டியிடம் விடை பெற்றார்.

பாட்டியும் அதை அன்று விளையாட்டாகத்தான் எடுத்துக் கொண்டாள்.

ஆனால் காலம் சில வருடங்களிலேயே பாட்டியை பூர்ண கும்பம் எடுக்க வைத்துவிட்டது. ஒரு மடாதிபதியாக காசியாத்திரை எல்லாம் முடிந்து கும்பகோணம் நோக்கி பெரியவர் திரும்பிய சமயம் திண்டிவனம் குறுக்கிட்டது.

தான் ஓடியாடித் திரிந்த ஊர்... பள்ளிப் பிராயத்தில் எவ்வளவோ நண்பர்கள்! ஆசிரியர்கள்! எல்லோரும் பெரியவர் பல்லக்கில் அமர்ந்து வருவதைப் பார்த்தபடி இருக்க பெரியவருக்குள்ளும் அந்த நாள் ஞாபகங்கள்!

https://t.me/tamilbooksworld

பல்லக்கை விட்டு இறங்கி நடந்தே வந்தவராய் நண்பர்களை எல்லாம் சந்தித்தார். எல்லாருடைய பெயரையும் ஞாபகம் வைத்திருந்து சொல்லி அழைத்தார்.

## 17

பெரியவர் படித்தது ஒரு கிறிஸ்தவப் பள்ளியில்... அதன் ஆசிரியர்கள் சிலர் பாதிரியார்கள் அவர்களும் பெரியவரை காண வந்தனர். அவர்களுக்கெல்லாம் தங்களிடம் பயின்ற மாணவன் 'ஜெகத்குரு'வாக திகழ்கிறான் என்பதில் ஒரு பெருமை.

அப்படியேதான் வசித்த தெருப்பக்கமும் பெரியவர் சென்றார்.

பெரியவர் வருகையை ஒட்டி தெருவே விழாக்கோலம் பூண்டிருந்தது. வாசலில் கோலம் போட்டு எல்லோரும் பயபக்தியுடன் காத்திருந்தனர். இதில் தாய், தந்தை சகோதரர்க்கு மட்டும் இடமில்லை.

ஒரு மடாதிபதிக்கான சன்யாச தர்மப்படி சன்யாசியாகிவிட்ட நிலையிலேயே குடும்ப உறவுகள் நீங்கி விடுகின்றன. யாரும் பெரியவரை தன் பிள்ளை என்றோ, தன் சகோதரன் என்றோ, அத்தை மகன், மாமன் மகன் என்றோ கூறக்கூடாது.

உறவோடு இருந்தவர்களுக்குக்கூட பெரியவர் ஜெகத் குருவாகி விடுகிறார். எனவே அவர்கள் எல்லாம் கூட குரு என்றே கூற வேண்டும்.

பெரியவரும் மனதால் அவர்களை உறவினராக கருதாமல், இந்த உலகில் வாழும் கோடானுகோடி பேரில் அவர்களும் இருப்பதாகவே கருதவேண்டும். அப்படிக் கருதிய நிலையோடு தான் பெரியவர் அந்த தெருப்பக்கம் விஜயம் செய்தார். அப்போது பாட்டி வீட்டை கடந்த போது அப்படியே வாசலில் நின்று உள்ளே பார்வையை விட்டு, "பாட்டி எங்கே?" என்று கேட்டார். பாட்டியை அழைக்க சிலர் உள்ளே சென்றனர்.

பாட்டியோ பூர்ணகும்பம் சகிதம் தயக்கத்தோடு உள்ளேயே முடங்கியிருந்தாள். காரணம்?

அன்று பேசிய பேச்சு... அன்று "ஒருநாள் நீ காத்திருப்பே பார்" என்று பெரியவர் சொன்னதும் பலித்துவிட்டது.

பூர்ணகும்பத்துடன் பாட்டி தயங்கித் தயங்கி வெளியே வந்தாள்.

https://t.me/tamilbooksworld

பெரியவரை நேருக்குநேர் பார்க்க அவளுக்கு கூச்சமாக இருந்தது.

பெரியவரிடமோ புன்னகை, பூர்ணகும்பத்தை வாங்கிக் கொண்டே, "பாட்டி சவுக்கியமா இருக்கியா?" என்று பழசைக் கிளறாமல் கேட்கவும், பாட்டி "சர்வேஸ்வரா" என்று காலில் விழுந்து விட்டாள்.

அதன்பின் பாட்டிக்கு விசேஷமான ஆசிகளை வழங்கியதோடு, "பாட்டி முறுக்குன்னா எனக்கு உசுரு. பாட்டி கைப்பக்குவம் யாருக்கும் வராது" என்று பாராட்டி மகிழ்ந்தார்.

இப்படி அவர் யாத்திரையில் நெகிழ்வான அனுபவங்கள் நிறைய!

ஒரு திகைப்பூட்டும் அனுபவமும் இக்கால கட்டத்தில் நடந்தது.

காஞ்சி காமகோடி மடத்தின் பீடாதிபதிகளில் 58வது பட்டத்து பீடாதிபதி ‘ஆத்மபோதேந்திரர்’ என்பவர்.

இவர் மகத்தான ஞானி, ‘இவரிடம் பல விதமான ஆற்றல்கள் இருந்தன. தியானத்தில் இவர் மூழ்கினால், வாரக்கணக்கில் பச்சைத் தண்ணீர் கூட பல்லில் படாதபடி அமர்ந்து விடுவார்.

தியானம் கலைந்த பிறகு பார்த்தால் சுடர் போல ஜொலிப்பார். அப்படிப்பட்டவர் உடம்போடு வாழ்ந்தது போதும் என்று ஒருநாள் ஜீவசமாதியில் அமர்ந்து விட்டார். அப்படி அவர் ஜீவசமாதியானது கடலூருக்கு அருகே வடவாம்பலம் என்ற ஊரில்.

காலத்தால் அவர் சமாதியான இடம் தூர்ந்து போய் மண்மூடி பெருங்காடாகிவிட்டது. பொதுவாக ஜீவசமாதிகளை பேணிப் பாதுகாத்து பூஜிக்க வேண்டும்.

ஓர் ஆகம சாஸ்திரப்படி கட்டப்பட்ட கோயிலை விடவும் ஜீவசமாதிக்கு சக்தி அதிகம். இங்கே சமாதியான சன்யாசி சூட்சும உடம்போடு நடமாடுவார். அப்படி நடமாடும்போது தன்னை வணங்குவோருக்கு எல்லாம் அருளாசி வழங்குவார். அந்த அருளாசிகள் வணங்குபவர்களின் பல கொடிய வினைகளை எல்லாம் தீயில்பட்ட சருகு போல சாம்பலாக்கிவிடும்.

ஆனால் இதை அங்குள்ளவர்கள் உணர்ந்திராத நிலையில் அந்த ஜீவசமாதியை மறந்தே விட்டனர். இப்படி ஒரு நிலையில்தான் பெரியவர் அந்த வடவாம்பலம் வழியாக யாத்திரை மேற்கொண்டார்.

https://t.me/tamilbooksworld

வடவாம்பலத்தில் அவர்கால்பட்ட நொடி பெரியவர் உடம்பில் ஒரு சிலிர்ப்பு! ‘சந்திரசேகரேந்திரா’ என்று ஆத்மபோதேந்திர் அழைப்பது போலவும் ஓர் உணர்வு.

அந்த சிலிர்ப்பும் உணர்வும் கலையாமல் பாதை வழியே போய்க்கொண்டிருந்தவர் இடையிலிருந்து ஒரு அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் நுழைந்தார்.

எல்லாருக்கும் ஆச்சரியம்!

"எதற்காக இந்த முள்ளும் புதருமான காட்டுக்குள் செல்கிறார்?" என்கிற கேள்வியோடு பதில் தெரியாமல் பின் தொடர்ந்தவர்கள், பெரியவர் நின்ற ஓர் இடத்தில் அப்படியே தேங்கி நின்றனர்.

பெரியவரும் தன்னைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்துவிட்டு, சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் என்பவரை அழைத்து குறிப்பிட்ட இடம் ஒன்றைக் காட்டி அங்கே தோண்டச் சொன்னார்.

ஒரு அடி தோண்டவுமே எல்லோருக்கும் எதற்கு என்று தெரிந்துவிட்டது. அடுத்தடுத்த அடிகளில் மண்டை ஓடு ஒன்று கண்ணில் பட்டது. தோண்டியவரும் மண்வெட்டியை போட்டு விட்டு கைளைக் கூப்பிக்கொண்டு ‘சதாசிவம்...சதாசிவம்’ என்று பிரார்த்திக்க... அங்கே அவ்வளவு பேர் முன்பாகவும் ஒருபெரும் ஒளி வெள்ளம் தோன்றி மறைந்தது. பிறகே, பெரியவர் ஜீவசமாதியை கண்டறிந்ததை அவர்கள் உணர்ந்தனர். அடுத்த நொடியே அனைவரும் ஒன்று கூடி அந்தப் பகுதியை சுத்தம் செய்து ஜீவசமாதி உள்ள பகுதியைச் சுற்றி வேலி போட்டு அங்கே முதல் காரியமாக விளக்கேற்றினர்.

தன் நடைபயண யாத்திரையில் பெரியவர் ஞான திருஷ்டியாலேயே செய்த இந்த செயல்தன் குருவுக்கு அவர் செய்த பெரும் வந்தனமாகவும் ஆகிவிட்டது!

## 18

பெரியவர் தான் இளமையோடு இருந்த காலத்தில் ஒருமுறைக்கு இருமுறை தேசாடனம் செய்தார். முதல் தேசாடனத்துக்கு சுமாராக 12 ஆண்டுகள் ஆயிற்று. இரண்டாவது தேசாடனத்திற்கு 29 ஆண்டுகள் ஆயிற்று.

https://t.me/tamilbooksworld

தேசாடனம்- என்றால் என்ன என்று இவ்வேளையில் கேட்கத் தோன்றும். ஒரு சன்னியாசியின் கடமைகளில் தேசாடனமும் மிக முக்கியமானது.

துளியும் பற்றுதல் இன்றி ஓர் ஊரில் தங்கிவிடாமல் ஊர் ஊராக செல்வதே தேசாடனம். அதன் பொருட்டே முதல் தேசாடனம் நடந்தது. இது இரண்டாவது தேசாடனம்.

இப்படி ஊர் ஊராக போவதால் ஆகப்போவதென்ன? என்கிற கேள்வி எழலாம்.

ஆதிசங்கரர் சங்கர மடத்தை ஸ்தாபிதம் செய்ததே மடத்து சன்னியாசிகள் மக்களை ஆன்மிக வழியில் நடக்கச்செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்! இதனால்தான் மக்களை தேடிச் சென்றும், கோயில்களில் அவர்களைச் சந்தித்தும் அவர்களுக்கு அருளாசி வழங்கியும் அவர்களை நெறிப்படுத்துவது கடமையாயிற்று.

மக்களுக்கு அருளாசி வழங்குவது மட்டும் கடமையில்லை. நம் பாரத மண்ணின் மிக உயர்ந்த தெய்வீக சிறப்புகளை அழியாமல் பார்த்துக்கொள்வதும் கூட இதுபோன்ற மடாதிபதிகளின் கடமையாகும். அந்த வகையில் சமூகத்தை பொருட்டாக கருதாமல், சமூகத்தொடர்பே துளியும் இல்லாத காட்டுக்குச் சென்று தவம் செய்யும் மனிதர்களையும் நாம் சன்னியாசிகள் என்றே கூறுகிறோம்.

அவர்களில் எவர் வழியையும் பின்பற்றாமல் தனக்குள் தன்னைத் தேடி உணர்ந்து பிரத்யேகமாக தனி வழியில் செல்பவர்களை சித்தர்கள் என்கிறோம்.

மகாபெரியவரும் கூட சன்னியாசிதான். ஒரு கோணத்தில் சித்தரும் கூட. அதே சமயத்தில் கடப்பாடு என்று ஒன்று அந்தக் காட்டுக்கு போனவர்களுக்கு கிடையாது. ஆனால் பெரியவர் போன்ற மடாதிபதிகளுக்கு அது உண்டு.

இதைப்பற்றி பெரியவரே வேடிக்கையாக சொல்லுவார்.

"நானொரு சன்னியாசி... ஆனால் எனக்கு அதிபதி என்கிற பட்டமும் உண்டு. அதாவது மடாதிபதி சனந்னியாசி எங்காவது அதிபதி ஆகமுடியுமா? முற்றும் துறந்தவன் அதிபதி என்றால் இடிக்கிறதே! இருந்தாலும் நீ அதிபதியாகவும் இருந்துகொண்டே சன்னியாசியாகவும் இருக்க வேண்டும் என்று இரண்டு கட்டளைகளை போட்டுவிட்டார்

https://t.me/tamilbooksworld

பகவத்பாதர். அதிபதிக்கான கடமைதான் மக்களைச் சந்திப்பது. அவர்களுக்கு அருளாசிகள் வழங்குவது என்பது...

இதனூடே அருளுக்கு காரணமான கோயில்களை புனருத்தாரணம் செய்வதும், கும்பாபிஷேகங்கள் நிகழ்த்துவது என்பதும் முக்கியம்.

புதிதாய் ஒருகோயில் கட்டுவது என்பது மிகப்புண்ணியமான காரியம்தான். அதைவிட புண்ணியம் பாழடைந்த கோயில்களை எடுத்துக்கட்டி அவற்றை பூஜைகளோடு இயங்க வழிகாண்பது...

பெரியவர் இந்த 29 ஆண்டு கால யாத்திரையில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களில் அனேகமாக எல்லா ஊர்களுக்கும் சென்று அந்த ஊர்கோயில்களுக்குச் சென்று அங்கே தங்கி, பக்தர்களுக்கு அருளாசி வழங்கி, அந்தக் கோயில்களின் தேவைகளையும் முடிந்தவரை பூர்த்தி செய்தார்.

இதுபோல யாத்திரை போகும் தருணங்களில் எவ்வளவோ ரசமான அனுபவங்கள்! அதில் சிலவற்றை இனிக் காண்போம்.

ஒருமுறை ஒரு காட்டுப்பகுதி வழியாக பெரியவர் பயணிக்க வேண்டி வந்தது. அந்தக் காட்டுக்குள் 'செஞ்சூஸ்' எனப்படும் மலை சாதியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு வேட்டையாடுவதுதான் தொழில். நல்ல மழை பெய்து வனம் செழிப்பாக இருந்தால் இவர்கள் வாழ்வும் செழிப்பாக இருக்கும். அல்லாத பட்சத்தில் மிருகங்களை வேட்டையாடும் இவர்கள் பசியின் நிமித்தம் மிருகங்கள் போல மனிதவேட்டையிலும் இறங்கி விடுவார்கள்.

பசிவந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள். இந்த கருத்து நாகரீக முதிர்ச்சி உள்ளவர்களுக்கே பொருந்தும் போது படிப்பறிவு இல்லாத மலை சாதியினருக்கு மட்டும் பொருந்தாதா என்ன?

அதனால் அந்த காட்டு வழியாக பயணம் செய்ய எல்லாரும் அஞ்சும் ஒரு நிலை இருந்தது. காட்டைக் கடந்தால்தான் ஊர் வரும். அந்த ஊருக்குச் செல்ல காடுதான் சரியான வழி. காட்டை தவிர்த்தால் சுற்றித்தான் செல்லவேண்டும். இதனால் கால நேரம் மட்டுமல்ல பொருளும் நிறைய செலவானது.

இப்படி ஒரு நிலையில் பெரியவர் அந்தக் காட்டுப்பகுதி வழியாக போக முனைந்தபோது, காட்டுக்கு போய் பொருட்களைப் பறிகொடுத்த பலர்

https://t.me/tamilbooksworld

வேகமாக வந்து தடுத்தனர்.

"தயவுசெய்து சுற்றிச் செல்லுங்கள். நிச்சயம் நீங்கள் கொண்டு செல்லும் பொருட்கள் அவ்வளவையும் அந்த செஞ்சூஸ் களவாடி விடுவார்கள். எதிர்த்தால் கொல்லக்கூட செய்வார்கள்" என்றனர்.

பெரியவரோ துணிவுடனும் அதே சமயம் அந்த செஞ்சூஸ் மேல் பரிவுடனும் காட்டுவழியே பயணிப்பது என்று தீர்மானித்து நடந்தார்.

## 19

மற்றவர்கள் எச்சரித்தது போலவே செஞ்சூஸ் மனிதர்களும் கையில் வேல் கம்பு போன்ற ஆயுதங்களுடன் பெரியவரையும் மற்றவர்களையும் சுற்றி வளைத்து விட்டனர். எல்லாரும் அஞ்சி நடுங்கிய அந்த வேளையில் பெரியவர் முகத்தில் மட்டும் புன்னகை.

அவர்களில் தலைவன் போல காட்சியளித்த ஒருவனை மிகவே கனிவாய் பார்த்தார். அவனை அருகில் அழைத்து, ‘என்ன வேண்டும்?' என்றும் கேட்டார்.

அவனோ பெரியவரின் கனிவான ஒளிவீசும் முகத்தைக்கண்ட நொடி மாறிவிட்டவன் போல தன்னையும் அறியாமல் பெரியவரைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான்.

பெரியவரும் ஆசீர்வதித்தார்.

அதைத் தொடர்ந்து எல்லாரும் வணங்கிட பெரியவரும் எல்லாரையும் ஆசீர்வதித்ததோடு அவர்களுக்கு பழங்களை எடுத்து தந்து சாப்பிடச்சொன்னார்.

அவர்களுக்கு கண்களில் கண்ணீரே வந்துவிட்டது. அவர்கள் மனதிலும் ஒரு இனம் புரியாத அமைதி.

அவர்களைப்பற்றி தன் அருகில் உள்ளவர்களிடம் மிகப் பெருமையாகவும் பேசினார் பெரியவர்.

"இவாள்ளாம் கண்ணப்ப நாயனரோட வம்சா வழிகள். நாயன்மார்கள்ளயே கண்ணப்பர் மாதிரி பக்தி செலுத்திய நாயன்மாரை பார்க்க முடியாது. பக்தி மிகுதியால் அவர் தான் வேட்டையாடிய பன்றி மாமிசத்தை நைவேத்யம் செய்தப்போ சுவாமி அதை தானே ஏத்துண்டார்.

https://t.me/tamilbooksworld

இவா வரைல மனசைத்தான் பார்க்கணும். மத்ததை எல்லாம் பார்க்க தேவையில்லை" என்று அவர்களை எல்லாம் சிவனடியார்களாகவே பார்த்தார் பெரியவர்.

அதைக்கேட்ட அந்த இனத்து தலைவன் பெரியவர் முன், "தங்களுக்கு இப்படி ஒரு ஸ்தானமா?" என்று கண்ணீர் விட்டான்.

அப்படியே வனத்தில் தங்கி தாங்கள் அளிக்கும் பரிசுப் பொருட்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வேண்டினான்.

பெரியவரும் சம்மதித்தார்.

தேன், தினைமாவு, மலைப்பலா, வாழை என்று பெரியவர் முன் தங்கள் விருப்பங்களைக் கொட்டிக் குவித்ததோடு ஒரு விருப்பத்தையும் வெளிப்படுத்தினர். அந்த விருப்பத்தை பெரியவரின் உதவியாளரிடம் அவர்களின் தலைவன் சொல்லவும் உதவியாளர் மறுத்தார்.

"நிச்சயம் பெரியவர் இதற்கு சம்மதிக்க மாட்டார்" என்றார்.

தலைவனின் விருப்பம் அப்படிப்பட்டது. அது பெரியவரின் தவக்கொள்கைக்கு நேர் எதிரானது. அதனால்தான் உதவியாளரும் அப்படிச் சொன்னார்.

ஆனால், பெரியவர் அது என்ன என்று கேட்டு நிற்க, உதவியாளரும் கூறினார்.

"பெரியவா, இவா சாதிப்பெண்கள் உங்கள் முன்னால நடனம் ஆடிக்காட்டுவாளாம். ஒருத்தரை ரொம்ப பெருசா மதிச்சா இப்படி ஆடிப்பாடி மகிழ்விக்கிறது இவாளோட தர்மமாம்" என்றார்.

பெரியவர் போன்ற சன்னியாசிகள் கன்னிப்பெண்கள் ஆடும் நடனங்களைக் காண்பது ரசிப்பது என்கிற எல்லாமே அவர்கள் கொள்கைக்கு விரோதம். அப்படி இருக்க எப்படி விருப்பம் ஈடேறும்?

ஆனால்...

பெரியவர் அந்த மலைஜாதி கூட்டத்தலைவனின் விருப்பத்தை நிறைவேற்ற தயாரானார். ஒரே ஒரு நிபந்தனையுடன்...

பெண்கள் மட்டும் நடனமாடக்கூடாது. மற்றபடி ஆண்கள் ஆடட்டும். அதைபோல விருந்தில் உயிர் பலிகூடவே கூடாது. சிலம்பாட்டம்,

https://t.me/tamilbooksworld

ஒயிலாட்டம் என்று உடற்பயிற்சி சார்ந்த விளையாட்டுகளை விளையாடிக்காட்டலாம் என்று நிபந்தனை விதித்திட, அந்த தலைவனிடம் ஒரே ஆச்சரியம்!

"சாமி உங்களை மாதிரி இவ்வளவு கட்டுப்பாடான ஒரு சாமியாரை நாங்க பார்த்ததேயில்லை" என்றவராக பெரியவர் முன் அந்த இனத்து ஆண்கள் மட்டும் ஆடிப்பாடினர்.

பெரியவரும் அவர்களை மனப்பூர்வமாக ஆசீர்வதித்ததோடு அவர்களிடம் கண்ணப்பநாயனார் குறித்து பேசி, பக்திக்கு நல்ல மனது மட்டும்தான் கணக்கு. மற்ற விஷயங்கள் ஒரு பொருட்டில்லை என்று கூறவும் அவர்களுக்குள்ளும் சிவபக்தி துளிர்விட்டது!

பெரியவர் யாத்திரையில் இன்னமும் நிறையவே ரசமான சம்பவங்கள் இருக்கின்றன.

## 20

ஒருநாள் ஒரு காட்டை ஒட்டி ஓடும் ஆற்றில் நீராடிவிட்டு பெரியவர் கரையோரமாக தியானத்தில் அமர்ந்த பொழுது அவர் கால்களில் அட்டைப்பூச்சிகள் ஏறிவிட்டன.

அட்டைகள் காலைப் பற்றினால் எவ்வளவு ரத்தத்தை குடிக்குமோ அவ்வளவு ரத்தத்தை குடிக்காமல் அது விடாது.

அதைப்பார்த்த பக்தர்கள் பலரிடம் பதை பதைப்பு! பெரியவரிடமோ தியானம் கலையவே இல்லை.

பொதுவாக இப்படி அட்டைகள் காலைத்தொற்றிக் கொண்டால் அதன்மேல் மூக்குப் பொடி தூவுவது, தீக்குச்சியை உரசி சூடுவைப்பது என்று அது தன் பிடியை விடுவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதை நாம் செய்வோம்.

பெரியவரை நெருங்கி அவர் அனுமதி இல்லாமல் அப்படி எல்லாம் செய்யவும் முடியாது. எனவே அவர் தியானம் கலையும் வரை தவிப்போடு காத்துக்கொண்டிருந்தனர். பெரியவர் தியானம் கலையவும் கூக்குரலிட்டனர்.

ஆனால் பெரியவர் பதட்டமடையவே இல்லை. அந்த அட்டைகளைப்பார்த்தவர்,

https://t.me/tamilbooksworld

"அதோட வயிறு நிரம்பிடுத்துன்னா... அது தானா என்னை விட்டுப்போறது. அதுக்காக அதைத் துன்புறுத்திக்கொல்றது மகாபாவம்" என்று கூறிவிட்டார்.

இறுதியில் அப்படித்தான் ஆனது.

அட்டைகள் பெரியவர் ரத்தம் குடித்து பசியாறிய நிலையில் அவரிடம் இருந்து பிரிந்தன.

பெரியவர் அதைப்பார்த்து சிரித்தபடியே, "நீங்கள் எல்லாம்தான் ரத்த தானம் செய்யணுமா? நானும் இன்னிக்கு செய்ய ஒரு உத்தர்ப்பம் வாய்ச்சது" என்றார்.

பின் அவரே தொடர்ந்தார்.

"அட்டைக்கு ரத்தம்தான் உணவுன்னும் போது அது அதை தேடிக்குடிக்கிறதுதானே அதோட தர்மம்.

நாம மரங்கள் கிட்ட காய்கனிகளை அதுக்கிட்ட கேட்டுட்டா பறிக்கிறோம்? மரத்துல காய்கள் காய்க்கிறதே நமக்காகன்னு நாம நினைக்கலாம். ஒரு அட்டைப்பூச்சி மனுஷன் உடம்புல ரத்தம் ஓடுறதே தனக்காகன்னு நினைக்கக்கூடாதா?" என்று சிரித்தபடி கேட்டார்.

ஒரு அட்டைப்பூச்சிக்கும் கருணைகாட்டுவது இது போல எத்தனை பேருக்கு மனது வரும். அனைத்துக்கும் மேலாக அதைத்தொட்டு இப்படி ஒரு மேலான சிந்தனையை அவர் வெளிப்படுத்தியதை என்னவென்று சொல்ல?

பெரியவர் தன் உயிர்போல் இந்த மண்ணின் சகல உயிர்களையும் நினைத்தார் என்பதற்கு இன்னொரு சம்பவமும் அவர் வாழ்வில் உண்டு.

1960ம் ஆண்டு!

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு பெரியவர் வருவதாக திட்டம். வடக்கு மாசி வீதியில் உள்ள ஒரு சத்திரத்திற்கு வந்துவிட்டார். அவர் வந்த வேளை மதுரையில் அன்று மூன்றுமணி நேரத்திற்கும் குறையாதபடி மழைபெய்தது.

தெருவெல்லாம் முழங்காலுக்கு தண்ணீர் ஓடியது. திடீர் மழையாதலால், புதிய தண்ணீருக்கு தவளைகள் வந்துவிட, அவைகளின் ஓயாத சப்தம்

https://t.me/tamilbooksworld

ஒருபுறம்.

இந்நிலையில் பெரியவரை அழைத்துச்செல்ல கோயில் அறங்காவல் குழுத்தலைவர் பி.டி.பழனிவேல்ராஜன் வந்துவிட்டார்.

பூர்ண கும்பமுடன் பெரியவரை அழைத்துச் செல்ல அவர் தயார். ஆனால் பெரியவர்தான் தயாரில்லை.

தன் சீடர்களில் ஒருவரை அழைத்து மீனாட்சி அம்மன் கோயில் கோபுரம் வரை நடந்தே போய் பார்த்துவிட்டு வரச்சொன்னார்.

அவரும் அவ்வாறு செய்யப் புறப்பட்டார். ஆனால் காவலருக்கோ பெரியவர் எதனால் அப்படிக் கூறினார் என்று தெரியவில்லை.

மாறாக, "வழியில் எந்த தடையும் இல்லை. நாம் தாராளமாக செல்லலாம்" என்றார் பெரியவரிடம்.

"அது எனக்கு தெரியும். உங்களோடு கோயிலுக்கு நான் மட்டும் வரப்போவதில்லை. என் சிஷ்யர்களும் மடத்தை சேர்ந்தவர்களும் வருவார்கள். எல்லாருக்குமே மீனாட்சி தரிசனம் செய்யும் ஆசை இருக்காதா என்ன? யாரையும் வராதீர்கள் என்று என்னால் தடுக்க முடியாது. அப்படி கூட்டமாக நடந்து செல்லும்போது யாருக்கும் எதுவும் ஆகிவிடக்கூடாது. பெரியமழை பெய்த்திருப்பதால் சிறு புழு, பூச்சிகள் நிறைய தெருக்களுக்கு வந்திருக்கும். அவை யாருடைய காலடிபட்டும் நசுங்கி இறந்துவிடக்கூடாது.

அருளைப் பெறச் செல்லும் போதே பாவம் செய்தால் எப்படி? அதனால்தான் வழி நெடுகப்போய் பார்த்து விட்டு வரச் சொல்லியுள்ளேன். போனவர் வரட்டும் என்ன சொல்கிறார் என்று பார்க்கலாம்" என்றார்.

பெரியவர் பேச்சைக் கேட்ட அறங்காவலர் சிலிர்த்து போய் விட்டார்.

ஒரு புழு, பூச்சிகள் மேல் கூட இவ்வளவு கருணையா? என்கிற பெருவியப்பு அவர் பார்வையில். அதே வேளை போனவரும் திரும்பி வந்தவராக நிறைய புழு, பூச்சிகள், நத்தைகள் வழி நெடுக இருப்பதைக் குறிப்பிட்டார். பெரியவர் அறங்காவலரிடம் மீனாட்சி தரிசனத்தை நாளை வைத்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார்.

பெரியவர் எத்தனை பெரிய அகிம்சாவாதி என்பதற்கு இதெல்லாம்

https://t.me/tamilbooksworld

சாதாரணமான சான்றுகள்தான். அவர் பிற உயிர்களை நேசித்ததை போல அவரை ஓரறிவு உயிர்களும் நேசித்தன என்பதுதான் ஆச்சரியமான விஷயம்.

## 21

ஒரு நாய் ஒன்று அவர் பல்லக்கின் கூடவே எப்போதும் செல்லும். சமயங்களில் பல்லக்கின் அடியில் கூட நடந்து வரும். அதை சிப்பந்திகள் துரத்திப் பார்த்தார்கள். ஆனால் போவதாக தெரியவில்லை. இப்படி ஒரு நிலையில் திருவண்ணாமலையை ஒட்டிய ஒரு கிராமத்தில் பெரியவர் தங்க நேர்ந்தது.

சில தினங்கள் அங்கே தங்கிய வேளையில் மதியம் மடத்தில் எல்லாருக்கும் சாப்பாடு நிதமும் உண்டு. போஜனம் ஆனவுடன்

எச்சில் இலைகளை எடுத்துச்சென்று குப்பைத்தொட்டியில் போடுவார்கள். அங்கே தெருநாய்கள் கூட்டமாக வந்து அடித்துக்கொள்ளும்.

அவற்றின் குரைப்புச் சப்தம் உள்ளே பெரியவர் காதுகளிலும் கேட்டது. அப்போது அவருக்கான எளிய உணவு அவருக்கு பரிமாறப்பட்டிருந்தது.

பெரியவர் அதை உண்ணாமல் வெளியே என்ன சத்தம் கேட்க, சீடர்களும் "எச்சில் இலைகளுக்கு நாய்கள் அடித்துக் கொள்கின்றன" என்றனர்.

"நம்மைப் போலதான் அவற்றுக்கும் பசிக்கும். பாவம் அவை" என்ற பெரியவர் தன் முன் வைக்கப்பட்ட உணவை எடுத்துக் கொண்டு அந்த நாய்களை நோக்கிச் சென்றார்.

சீடர்களுக்குப் புரிந்துவிட்டது. பெரியவர் தன் உணவை நாய்களுக்கு வைக்க, அவை ஆசையாக சாப்பிட்டுக் கலைந்தன.

மறுநாள் பெரியவர் சாப்பிடும் நேரம். தையல் இலைகளில் அவருக்கான அவல் உணவை வைக்கும்போது, நாய் குரைக்கும் சப்தம் எழவில்லை. மடத்தில் அவற்றுக்கு முதலில் உணவளித்து விட்டனர். பிறகுதான் எல்லாருக்குமே.

இதற்கு பெயர்தான் தானே முன் உதாரணமாக திகழ்வது என்பது.

நாய்களுக்கு நன்றி உணர்வு மிகுதி. மனிதர்களிடம் நெருங்கிப் பழகும். மனிதன் சொன்னபடியும் கேட்கும்.

https://t.me/tamilbooksworld

எங்காவது எலிகள் அதுபோல கேட்குமா?

பெரியவர் வரையில் எலிகள் அவர் பேச்சைக் கேட்டு நடந்தன. எங்கே, எப்போது, எப்படி?

பெரியவரின் கருணை உள்ளம் நம்மை எல்லாம் ஈர்ப்பது ஒரு பெரிய விஷயமேயில்லை. வாயில்லா ஜீவன்களை, அதிலும் ஓரறிவு மட்டுமே கொண்ட எலி போன்ற உயிர்களைக் கூட அவரால் ஈர்க்க முடிந்தது. இன்றுவரை பெரியவர் வாழ்வில் ஒரு பெரும் அதிசயமாக இந்த சம்பவம் கருதப்படுகிறது.

காஞ்சிபுரத்துக்கு அருகில் ஒரு கிராமம். இங்கே மடத்துக்கு என்று நிலபுலன்கள் உண்டு. இந்த நிலபுலன்கள் பக்தர்கள் மடத்துக்கு தானமாய்த் தந்தவை. இந்த நிலபுலன்களை குத்தகைக்கு விட்டு அதில் வரும் பணம் மடத்துசெலவுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இப்படி ஒரு கிராமத்துக்கு பெரியவரும் விஜயம் செய்தார். பெரியவர் விஜயம் செய்த தருணம் மடத்து நிலபுலன்களில் அறுவடை பயிர் செய்யப்பட்டு நல்ல விளைச்சலும் விளைந்திருந்தது. பெரியவரை தரிசனம் செய்ய வந்த குத்தகைதாரர் அதைச்சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போனார்.

"சாமி... இந்த ஆண்டு நல்ல வெள்ளாமைங்க! எந்த ஆண்டும் இந்த ஆண்டு மாதிரி விளையவே இல்லிங்க" என்றார்.

அதைக் கேட்ட பெரியவரும், "அப்படி என்ன விளைஞ்சது?" என்று கேட்டார்.

"கடலைப் பயிருங்க" என்றார் குத்தகைதாரர்.

"கடலையா... ரொம்ப சந்தோஷம் கடலைன்னாலே பிள்ளையார் ஞாபகம் வந்துடும். அவருக்கு ரொம்ப இஷ்டமாச்சே! கூட வெல்லத்த கலந்து வெச்சுட்டா போதும், ரொம்ப சந்தோஷமாயிடுவார்" என்ற பெரியவர், "எங்க எனக்கு கொஞ்சம் கொடேன்" என்று அவரிடம் கேட்கவும், அந்த குத்தகைதாரர் திகைத்துப்போனார்.

பெரியவர் இப்படி எல்லாம் கேட்பவரில்லை.

அப்படி கேட்காதவரே கேட்டால் வியப்பாகத்தானே இருக்கும்.

குத்தகைதாரருக்கு வியப்பாக மட்டுமில்லை, திகைப்பாகவும் இருந்தது.

https://t.me/tamilbooksworld

அதற்கு காரணமும் இருந்தது. விளைந்த கடலைப் பயிருக்கு நல்ல விலை கிடைக்கவும், அறுவடை செய்த அவ்வளவையும் விற்று விட்டார். அந்த குத்தகைதாரர் பொதுவாக அறுவடை முடியவும் தங்கள் தேவைக்கு என்று ஒரு மூட்டையோ இரண்டு மூட்டையோ எடுத்து வைத்துக்கொள்வார்கள். இந்த குத்தைதாரர் அப்படியும் நடந்துகொள்ளவில்லை. பெரியவர் இப்படி கேட்பார் என்றும் எதிர்பார்க்கவில்லை. இதெல்லாம்தான் திகைப்பிற்கும் காரணம். பெரியவரும் அவர் திகைப்பைப் பார்த்து கேட்டார்.

"என்னப்பா திருதிருன்னு முழிக்கிறே... போய் எடுத்துண்டு வா" என்றார் பெரியவர்.

குத்தகைதாரர் ஒரு முடிவுக்கு வந்தார். தன் வீட்டில் இல்லா விட்டால் என்ன? அறுவடை வயலில் நிச்சயம் இருக்கும் என்று அவருக்குள் தோன்றியது.

பொதுவாக கடலை வயல்களில் எலிகள் நிறைய இருக்கும். அவை தங்களுக்கு என்று வளைகளை அமைத்துக்கொண்டு அதில் கடலைகளை கொண்டுபோய் குவித்து வைத்திருக்கும். ஒரு ஏக்கர் வயலில் மட்டும் ஒரு மூட்டையாவது இது போல இருக்கும். ஒரு விவசாயியான அந்த குத்தகைதாரருக்கு இது தெரியாதா என்ன?

## 22

நேராக வயற்காட்டுக்குச் சென்றார். பெரிய பெரிய வளைகளாகப் பார்த்து உள்ளே கைவிட்டு கடலைகளை அள்ளினார். ஒருமுறத்தில் கடலைகள் நிரம்பின. அப்படியே பெரியவரை நோக்கி நடந்தவர், பெரியவர் முன்னால் முறத்தை வைத்துவிட்டு பணிவாக நின்றார். அவர் மனதுக்குள் பெரியவர் கேட்டு இல்லை என்று சொல்லாதபடி கொடுத்துவிட ஒரு நிறைவு!

அதே சமயம் பெரியவர் முறத்தில் இருந்து ஒரு கடலையை எடுத்து முகத்துக்கு நேராக பிடித்துப் பார்த்தார்.

அதில் எலி கொறித்த தடயங்கள்! பெரியவர் முகத்தில் ஒரு அநாயசப்புன்னகை.

அவர் ஞானதிருஷ்டிக்கு நடந்தது தெரிந்துவிட்டது.

சிரித்தபடியே குத்தகைதாரரைப் பார்த்து, "இது பறிச்சதா இல்ல

https://t.me/tamilbooksworld

கொறிச்சதா?" என்று மிக விநயமாக கேட்டார்.

கொறித்ததா? என்கிற கேள்வியே குத்தகை தாரரை சிலிர்க்க வைத்துவிட்டது!

அடுத்த நொடியே பெரியவர் முன் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிய அந்த மனிதர், எழுந்து நின்ற நிலையில் நடந்ததை சொல்லி முடித்தார். அருகில் இருந்த எல்லார் முகத்திலும் கூட அதிர்வு!

சிலர் "அடப்பாவி... பெரியவா கேட்டாளேங்கறதுக்காக இப்படி கூடவா நடந்துப்பே. போயும் போயும் ஒரு வாயில்லா ஜீவன்கிட்ட இருந்தா எடுத்துண்டு வருவே..." என்றும் கேட்டனர்.

பெரியவர் தன் பார்வையாலேயே எல்லாரையும் கட்டுப்படுத்தி விட்டு, அந்த முறத்தை எடுத்து கொள்ளச் சொன்னார். அப்படியே மடத்து உதவியாளர்கள் சிலரைப் பார்த்து பொரியும் வெல்லமும் கொண்டுவரச் சொன்னார். அதையும் எடுத்துக்கொண்டு அந்த குத்தகைதாரரோடு அவர் எந்த வளையில் இருந்து கடலையை எடுத்தாரோ அந்த வளைநோக்கி நடக்கத் தொடங்கினார். இதை யாருமே எதிர்பார்க்கவில்லை.

அந்த கிராமத்து வயல்கள் எல்லாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும். பெரியவரின் பாதங்கள் அவைமேல் பட்டுப் பொலிந்தன.

எலி வளையுள்ள வயல்பாகமும் வந்தது. குத்தகைதாரர் வசம் இருந்த கடலையை வளைக்குள் கொட்டச் சொன்னார். பின்னர் தான் கொண்டுவந்திருந்த பொரி மற்றும் வெல்லத்தை வளைக்கு முன்னால் வைத்தார்.

எல்லாரும் மவுனமாக அடுத்து நடக்க இருப்பதை கவனிக்கத் தொடங்கினர்.

பெரியவர் பிரார்த்தனை புரியத் தொடங்கினார்.

சில விநாடிகளில் அதிசயம் ஆரம்பமாயிற்று. அந்த வளையில் இருந்து மட்டுமல்ல, பக்கத்து வளையில் உள்ள எலிகள் எல்லாம் கூட மெல்ல வெளியே வர ஆரம்பித்தன. திரளாக மனிதக்கூட்டம் நிற்பது பற்றிய அச்சமே இல்லாமல், பெரியவர் தந்த பிரசாதமான பொரியையும் வெல்லத்தையும் உண்ண ஆரம்பித்தன.

பெரியவர் இருப்பதால் தங்களுக்கு எந்த ஆபத்தும் வராது என்று

https://t.me/tamilbooksworld

அவைகளுக்கு தெரிந்திருந்தது. நடுநடுவே இருகால்களை தூக்கி

வணங்குவது போல பெரியவரையும் பார்த்தன. பெரியவரிடம் கருணைமிகுந்த புன்னகை. அப்படியே குத்தகைதாரரைப் பார்த்து பேச ஆரம்பித்தார். –

"இதெல்லாம் வாயில்லா ஜீவன்கள். இதுகளுக்கென்று ஒரு வாழற முறை இருக்கு. நாம விவசாயம் பண்ணினதை இது திருடிவிட்டதா நாம் சொல்றோம். அது தப்பு. மண்ணுல விளையறதை கொஞ்சத்தை இந்த மண்ணுல வாழற இது எடுத்துக்கறது. நாம மட்டும் என்ன காய்கறிகள், செடி கொடிகளை கேட்டுட்டா பறிக்கிறோம்? இதுவும் ஒருவகை தானம்" என்று விளக்கிய பெரியவரை எல்லாரும் சிலிர்ப்புடன் பார்த்தனர்!

பெரியவரின் யாத்திரையில் இப்படி நிறைய ரசமான எவ்வளவோ அனுபவங்கள்...

ஒவ்வொரு அனுபவமுமே நமக்கு நுணுக்கமான ஒரு செய்தியைக் கொண்டிருக்கும். பெரியவர் மேல் இந்துக்கள் மட்டுமல்ல. மற்ற மதத்தவர்களும் கூட மிகுந்த மரியாதையும் பக்தியும் கொண்டிருந்தனர்.

ஒருமுறை காஞ்சிபுரத்தில்...

ஒருபிள்ளையார் கோயிலுக்கு விஜயம் செய்தார் பெரியவர்.

பொதுவாக பெரியவருக்கு பிள்ளையார் என்றால் ஒரு தனித்த பிரியம்.

பிள்ளையாரை முதலில் பிரார்த்தனை செய்துவிட்டு எந்த ஒரு காரியத்தில் இறங்கினாலும் அந்தக் காரியம் பெரும் வெற்றியில் முடியும். அதற்கு நிறையவே சான்றுகள் உண்டு.

ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கரையில் காஞ்சிகாமகோடி மடத்தின் ஒரு பகுதி செயல்பட்டு வருகிறது. அங்கே ஆதிசங்கரரின் சிலையை பிரதிஷ்டை செய்ய விரும்பி அந்த சிலையும் தயார் செய்யப்பட்டது. அது ஒரு லாரியில்தான் ராமேஸ்வரம் நோக்கி கொண்டு செல்லப்பட்டது.

அப்படி சென்ற லாரி சென்னையைக் கடந்த நிலையில் அச்சிறுப் பாக்கம் என்னும் ஊரில் லாரியின் அச்சுமுறிந்து போன நிலையில் நின்றுவிட்டது. சிலை சரியான நேரத்தில் ராமேஸ்வரத்தை அடைந்தால்தான் குறித்த நேரத்தில் நல்ல நேரத்தில் அதை பிரதிஷ்டை செய்ய முடியும்.

https://t.me/tamilbooksworld

ஆனால் அச்சு முறிந்து சிலை வந்து சேர்வது தாமதமானது. தாமதமாகும் தகவல் பெரியவருக்கும் கூறப்பட்டது.

"லாரியின் அச்சு எங்கே முறிந்தது?" என்று கேட்டார் பெரியவர்.

## 23

"லாரியின் அச்சு எங்கே முறிந்தது?" என்று கேட்டார் பெரியவர்.

அச்சிறுப்பாக்கத்தில் என்றவுடனேயே சற்று சிந்தித்தவர், ராமேஸ்வரம் மடத்தில் கணபதி ஹோமம் செய்யச்சொல்லி பிரார்த்தனை செய்து கொள்ளச்சொல்லவும், இன்னொரு வாகனம் கிடைத்து அதில் ஆதிசங்கரர் சிலையும் ராமேஸ்வரத்தை அடைந்துவிட்டது. குறித்த நேரத்தில் பிரதிஷ்டையும் ஆனது.

அந்த வேளையில் மகா பெரியவர் அவர்களும் அரிய ஒரு கருத்தினைக் கூறினார்.

"புராணத்தில் ஒரு சம்பவம் உண்டு. திரிபுரம் எரிக்க ரதமேறிப் புறப்படுவார் சிவபெருமான். அது ஒரு மகாசம்கார நிகழ்வு. புறப்படும் அவசரத்தில் விநாயகரை வழிபட்டு பிரார்த்தனை செய்துகொள்ள மறந்துவிடுவார் சிவபெருமான். அதனால் அவரது ரதத்தின் அச்சு முறிந்துபோய் ரதம் பாதிவழியில் நின்றுவிடும்.

அப்போது நாரதர் வந்து, விநாயகரை பிரார்த்தனை செய்யாமல் புறப்பட்டு விட்டதால்தான் சிவபெருமான் பயணத்தில் தடை உண்டாகிவிட்டது என்பார்.

சிவபெருமானும் அடுத்த நொடியே விநாயகரைப் பிரார்த்திக்க அச்சு முறிந்த ரதத்தின் அச்சுகள் சரியாகி ரதம் புறப்பட தயாராகிவிடும். பின் சிவபெருமானும் யுத்தத்தில் திரிபுரங்களை எதிர்த்து அசுர சக்திகளுக்கு பாடம் கற்பிப்பார்.

அன்று சிவபெருமானின் ரத அச்சு முறிந்து நின்ற இடமே அச்சிறுப்பாக்கம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது. பேச்சு வழக்கில் அச்சரப்பாக்கம் என்றும் கூறுவார்கள். இன்றும் அங்கேதான் ஆதிசங்கரர் சிலை வந்த லாரியின் அச்சு முறிந்து போயிருக்கிறது.

இதிலிருந்து ஒரு உண்மை நன்கு புலனாகிறது. ஆதிசங்கரரை சிவசொரூபம், அவரது அவதாரம் என்பார்கள். சைவர்கள் அவதார

https://t.me/tamilbooksworld

நம்பிக்கை அவ்வளவாக இல்லாதவர்கள். வைணவர்கள் அப்படியில்லை. அவர்கள் அவதாரம் உண்டு என்று நம்புகின்றவர்கள்.

இங்கே அச்சிறுப்பாக்கத்தில் ஆதிசங்கரரின் சிலை தேங்கி நிற்கவும், ஆதிசங்கரர் வேறு அந்த சிவபெருமான் வேறில்லை என்பது புலனாகிவிட்டது.

அடுத்து கணபதியை பிரார்த்தனை புரியாமல் இறங்கினால் அதில் தடைகள் ஏற்படும். அவரை சரணடைந்து விட்டாலோ அவர் அதன்பின் சகலத்தையும் பார்த்துக்கொண்டு விடுவார்.

அப்பாவின் ரதத்தையே தடுத்து நிறுத்தி தன்னை வணங்கச் செய்தவர் என்று இங்கே பொருள் கொள்ளக்கூடாது. அப்பா பிள்ளை உறவெல்லாம் நம் மானுட பாவனை. கணபதி பார்வதி புத்திரர் பிரணவ ஸ்வரூபம் கொண்டவர். இவரே மந்திரங்களுக்கு எல்லாம் மூலம். இவரை வணங்கிவிட்டுச் செய்கிற செயல்களெல்லாம் நல்லவிதமாக முடிவடையும். இதை உலகுக்கு உணர்த்தத்தான் சிவபெருமான் விஷயத்திலும் இவ்வாறு நடந்தது.

ஈஸ்வரனும் தானும் பிரார்த்தனை செய்து நமக்கெல்லாம் வழிகாட்டினார். அவரே அவ்வாறு செய்திருக்கும்போது, நாம் செய்யாமல் போகலாமா" என்று கேட்டார் பெரியவர்.

பிறகே எல்லாருக்கும் பிள்ளையார் வழிபாட்டின் வலிமையும் புரிந்தது.

இதனாலேயே பெரியவர் எங்கே பிள்ளையார் கோயில் கண்ணில் பட்டாலும் நின்று வணங்கிவிட்டே செல்வார்.

பிள்ளையார் பெருமை பற்றியும் அவர் ஏற்கனவே சமந்தகமணி மகிமை உபன்யாசத்தில் நிறைய பேசிவிட்டார்.

இதுபோக அவ்வையாரும் பிள்ளையாரும் என்னும் தலைப்பில் அவர் நிகழ்த்திய உபன்யாசம் மிக அபூர்வமான தகவல்களை எல்லாம் உடையது.

நாம் இங்கே காஞ்சியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு வருவோம். இந்த கோயிலுக்கு பெரியவர் சென்ற சமயம், கோயிலில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. திருவிழா என்பதால் தினசரி அலங்காரம். அன்று பூ அலங்காரத்தில் கோயிலே புதுவடிவம் எடுத்திருந்தது. பெரியவர் பிரமித்தார்.

https://t.me/tamilbooksworld

"இவ்வளவு அழகாக பூவேலைப்பாடு செய்தது யார்?" என்று கேட்டார்.

அப்படி செய்தவர் ஒரு இஸ்லாமியர். பூ வியாபாரம்தான் அவர் தொழில். அவரை அழைத்து வந்து பெரியவர் முன் நிறுத்தினார்கள். அவரும் பெரியவரை பணிவாக வணங்கினார். பெரியவர் அவரை ஆசீர்வதித்ததோடு, "உங்கள் கைக்கு காப்பு செய்து போட வேண்டும். அவ்வளவு அழகாக இருக்கிறது உங்கள் செயல்பாடு" என்றார்.

பின்னர் அவரிடம் சிறிது நேரம் மனம் விட்டு பேசவும் செய்தார்.

மாற்று மதத்தவர் இவரிடம் நமக்கு என்ன பேச்சு என்றெல்லாம் எண்ணாமல், அவரிடம் பேசவும் செய்தார்.

அவரிடம், "நீங்கள் விடாமல் தொழுகை செய்கிறீர்கள்தானே?" என்றுகேட்டார்.

அவரும், "ஐந்து வேளையும் நான் விடாமல் தொழுகை செய்கிறேன் சாமி" என்றார்.

அப்போது அந்த இஸ்லாமியருக்கே தெரியாத ஓர் அரிய தகவல் ஒன்றைக் கூறினார் பெரியவர்.

"எல்லோரும் தொழுகை என்றால் ஐந்து வேளை என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த நாளில் ஆறுவேளை தொழுகை இருந்தது. நள்ளிரவில் அந்த ஆறாவது தொழுகை புரியவேண்டும். காலப்போக்கில் இரவு உறங்க வேண்டியிருப்பதால் அது விடுபட்டுவிட்டது போலும்!" என்றார்.

## 24

அப்படியே அருகில் உள்ள பிராமணர் ஒருவரைப் பார்த்து, "இவா பகல்ல ஐந்து வேளைதொழுறதை விடறதேயில்லை. பிராமணனுக்கு மூன்றுவேளை சந்தியாவந்தனம் புரியவேண்டும். அதாவது சூரியன் உதிக்கும் முன், உச்சிக்கு வந்தப்பின், அஸ்தமிக்கும் சமயம் என்று அந்த மூன்று வேளைகள்.

இதில் மதியம் சந்தி செய்வதை பலர் மறந்துவிட்டனர். கேட்டால் ஆபீசில் வேலையில் இருக்கும்போது எப்படி செய்ய முடியும் என்று கேட்கின்றனர். ஆபீசுக்கு போகிறவங்களால் முடியாமல் போகலாம். ரிட்டையர்மென்டாகி வீட்டில் இருப்பவர்கள் தவறாமல் மூன்று வேளை

https://t.me/tamilbooksworld

சந்தியாவந்தனம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தங்களுக்கான கடமையை செய்யத்தவறிய பாவத்துக்கு ஆளாக வேண்டும்" என்றவர்,

"தினமும் சந்தியாவந்தனம் செய்வதால் அன்றைய தினம் நாம் அறியாமல் செய்த பாவங்கள் எல்லாமும் போய்விடும். சந்தியா வந்தனத்தில் நாம் ஜபம் செய்யும் காயத்ரி மந்திரத்துக்கு அப்படி ஒரு சக்தி உண்டு" என்றார்.

காயத்ரி மந்திரம் பற்றியும் பெரியவர் பல இடங்களில் பல தருணங்களில் பேசியுள்ளார். சொல்லப்போனால், காயத்ரி மந்திரத்தை விட மேலான ஒரு மந்திரம் இல்லை என்பதே அவருடைய கருத்தும்கூட.

ஒருமுறை ஒருவர் பெரியவரிடம் மந்திர உபதேசம் பெற விரும்பி பெரியவரை நாடிவந்தார். அவர் பிறப்பால் ஒரு பிராமணர். பஞ்சகச்சம் உடுத்தி, தலையில் குடுமியோடும், நெற்றியில் விபூதி குங்குமத்தோடும் பளிச்சென்று இருந்தார். பெரியவரிடம் மனம் விட்டு பேசினார்.

"பெரியவரே, எனக்கு குடும்ப வாழ்வு புளித்துவிட்டது. நான் இனி முழுமையான ஓர் ஆத்மிகவாதியாக வாழ விரும்புகிறேன். அப்படி வாழ விரும்புகிறவர்களுக்கு குருநாதருடைய மந்திரோப தேசம் மிக முக்கியம் என்றும் அறிந்தேன். அதனால்தான் உங்களை நாடி வந்துள்ளேன். நீங்கள் எனக்கு மந்திர உபதேசம் செய்து வழிகாட்ட வேண்டும்" என்று உருக்கமாக பேசி நின்றார்.

பெரியவரும் அவரை ஏற இறங்கப்பார்த்துவிட்டு, "நீங்கள் பிராமணர் தானே?" என்று கேட்டார்

அவரும் ஆமோதித்தார்.

"இளம் வயதிலேயே பூணூல் போட்டிருப்பார்களே" என்று பெரியவர் கேட்டதும், அவரும் ஆமோதித்தார்.

"அப்படியானால் உங்களுக்கு மந்திர உபதேசம் ஆகிவிட்டதே!" என்றவரை புரியாமல் பார்த்தார் அந்த பிராமணர்.

"என்ன பார்க்கிறீர்கள்... பூணூல் போட்ட சமயம் உங்கள் காதில் ரகசியமாக காயத்ரி மந்திரத்தை வேத பண்டிதர் ஓதியிருப்பார். அதுதான் மந்திர உபதேசம். அந்த காயத்ரி மந்திரத்தை விட மேலான ஒரு மந்திரம் எனக்குத் தெரிந்து இருப்பதாக தெரியவில்லை. ஆகையால் அதையே நீங்கள் ஜெபித்து பயனடையலாம்" என்றார்.

https://t.me/tamilbooksworld

அந்த பிராமணரும் அதன்பின் மகிழ்வோடு சென்றாராம். பெரியவர் காயத்ரி மந்திரம் எப்படிப்பட்டது. அதன் சக்தி எத்தகையது என்றும் கூறியிருக்கிறார்.

காயத்ரி மந்திரம்தான் உலகின் மிகச்சிறந்த கடவுள் வாழ்த்து!

அமெரிக்க விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் ஹார்வர்டு ஸ்டிங்கின் என்பவர் காயத்ரி மந்திரத்தின் ஒலிக்கட்டுமானச் பெற சிறப்பை ஆராய்ச்சி செய்துள்ளார். இந்த மந்திரம் உச்சரிக்கும் ஒரு போது ஒரு லட்சத்து 10 ஆயிரம் ஒலி அலைகள் புறத்தில் எழுகின்றன. அதுவும் ஒரு வினாடியில்... இதைச் சொல்லச் சொல்ல தார். மனம் மெள்ள மெள்ள அமைதியடைகிறது. ஆன்ம பலம் அதிகமாகிறது. ஜெர்மனியில் உள்ள ஹாம்டர்க் யூனிவர்சிடி இதை ஆய்வு செய்து உறுதிபடுத்தியுள்ளது. அமெரிக்காவில் ‘சுரிநாம்' எனும் ஊரில் அங்குள்ள வானொலி ஒலி பரப்பில் தினமும் 15 நிமிடங்கள் காயத்ரி மந்திரம் ஒலி பரப்பப்பட்டும் வருகிறது!

ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது வேதங்களில் ஒன்றான ரிக்வேதத்தில் இருந்து இது தோன்றியது. அதற்கும் முன்பே கூட இது உச்சரிக்கப்பட்டிருக்கலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

நிலவுக்கு சென்ற முதல் மனிதனான ஆம்ஸ்டிராங் நிலவில் காலடி வைத்த நிலையில் ஓம் எனும் பிரணவ சப்தத்தை உணர்ந்தாராம்.

இப்படி மேல் நாட்டவர்களும் நம் மந்திரத்தின் பெருமை மற்றும் சக்தியை உணர்ந்து வைத்துள்ளார்கள்.

இந்த மந்திரம் விஸ்வாமித்திர முனிவரால்தான் நமக்கெல்லாம் கிடைத்தது. தவம் என்றால் விஸ்வாமித்திரர் என்று ஒரு பொருள் உண்டு.

"நீ பிறப்பால் ஒரு ஷத்ரியன். உன்னால் புலன்களை அடக்கி தவம் செய்ய இயலாது. மாவீரனால் ஒரு நாட்டை வேண்டுமானால் ஆளமுடியும். ஆனால் ஐம்புலன்களை அடக்கி உடற்கட்டை உன்னால் ஆள முடியாது" என்று ராஜரிஷியான வசிஷ்டர் கூறவும். அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, ஐம்புலன்களை ஒடுக்கி தவம் செய்து அந்த தவத்தின் பெரும் பயனாக அவர் மூலம் நமக்கு கிடைத்ததே காயத்ரி மந்திரமாகும். இதில் காயத்ரி எனும் சொல்லை இருவிதமாக பொருள் கொள்ளலாம். விஸ்வாமித்திர முனிவர் தம் காயமாகிய உடம்பையே பஞ்சு திரியாக போட்டு விளக்காய் எரித்து தவத்தின் உச்சத்தை தொட்டு அடைந்த

https://t.me/tamilbooksworld

மந்திரம் இது என்பது ஒரு சாரார் கருத்து.

## 25

காய -என்றால் உயிரூட்டுதல்; த்ரி என்றால் மூன்று கால வேளைகளாக குறிக்கும். அதாவது சூரியன் உதிக்கும் சமயம் அவன் உச்சியில் நிற்கும் சமயம். அஸ்தமிக்கும் சமயம் என்று சூரியனை மையமாகக் கொண்டு மூன்று வேளைகள் நாம் சந்தியா வந்தனம் எனும் கர்மாவை புரியவேண்டும்.

இது அந்தணர்களுக்கு கட்டாயமாக்கப் பட்டது. இதை பெண்களோ, பிற வருணத்தவர்களோ செய்யத் தேவையில்லை. செய்தால் அதில் எந்த தவறுமில்லை. ஆனால் வேதம் ஓதும் கடமையை உடைய அந்தணர்கள் இதை செய்யாமல் இருப்பது கடமை தவறிய செயலாகும்.

பெரியவர் இதனை மிகவே வற்புறுத்துகிறார். எந்த ஒரு பிராமணரைக் கண்டாலும், "ஒழுங்காக சந்தி செய்கிறாயா?" என்று அவர் கேட்கத் தவறியதேயில்லை.

அதே போல ஐந்து வயது முடிந்து ஆறுவயதை ஒரு பிராமணச் சிறுவன் அடைந்து விட்டால், அவனுக்கு உபநயனம் எனும் பூணூல் போடும் சடங்கு நடந்து விடவேண்டும்.

இந்தச் சடங்கிற்கு மாசி மாதம் மிக ஏற்ற காலம். ஆறு ஏழு வயதிலும் ஒருவருக்கு உபதேசிக்கப்படும் மந்திரமானது சாகும் வரை மறக்க இயலாதபடி மனதில் தங்கிவிடும்.

எனவேதான் இந்த சிறுவயதிலேயே பூணூல் போட வேண்டும் என்றனர் நம் முன்னோர்.

இன்னொரு காரணமும் உண்டு. ஒருவர் வளர்ந்து வாலிப்

பிராயத்தை அடையும் போது, காம உணர்வு தலைதூக்கத் தொடங்கிவிடும். இதுவே காதல் உணர்வாக மாறி விரும்பும் பெண் பின்னால் அவனைச் சுற்ற வைக்கும். இறுதியில் திருமணத்தில் முடிந்து, இல்வாழ்வும் தொடங்கிவிடும். இப்படித் தான் ஆண், பெண் என்று இரு சாரருக்கும் இந்த உலகில் நடக்கிறது.

எனவே காமன் புகுமுன் காயத்ரி ஒருவர் மனதில் புகவேண்டும் என்றே ஏழு, எட்டு வயதில் பூணூல் போடப்பட்டது.

https://t.me/tamilbooksworld

காயத்ரி புகுந்த மனது மிக பலமானதாக சலனங்களுக்கு இடம் கொடுக்காததாக, காமத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். காயத்ரி எனும் மந்திரத்துக்கு பின்னாலே இத்தனை சங்கதிகள் நாம் உணர்வதற்கு உள்ளன.

இதை மிகச்சரியான உச்சரிக்க வேண்டியதும் மிக முக்கியம். தவறான உச்சரிப்பு தவறான பயனை அளித்துவிடும். இதை ராகம் போட்டு பாடக்கூடாது. ஆலாபிக்கக்கூடாது. மனதுக்குள் இதைச் சொன்னால் சிறந்த பயன். சற்று உரத்தக் குரலில் பிறர் கேட்கும்படி சொன்னால் மிகச்சிறந்த பலன் உண்டாகும்.

பெரியவர் இதனாலேயே இதை பெரிதும் வற்புறுத்தினார். இதை மட்டுமா? அன்னதானம், தண்ணீர் பந்தல், மருத்துவ முகாம் என்று அவர் சமூக நன்மையை உத்தேசித்து செய்யச் சொன்னது ஏராளம்.

இதில் ஒருவர் தண்ணீர் பந்தல் நடந்த இடத்தை அபகரித்து, அன்னதானம் நடைபெற முடியாதபடி செய்துவிட்டார். தண்ணீர் பந்தல் நடந்த இடத்தில் பெரிய வணிக வளாகம் கட்டி பெரிய அளவில் பணம் சமந்பாதிக்கவும் திட்டம் போட்டார். ஒருபுறம் அவர் பணம் சம்பாதிக்கவும் மறுபுறம் அவரது சிறுநீரகங்கள் இயங்குவதில் சிக்கல் ஏற்பட்டது! இந்நிலையில் அவர் பெரியவரை தரிசனம் செய்யவும் வந்தார்.

பெரியவரை தரிசனம் செய்ய வந்த அந்த மனிதர் (தண்ணீர் பந்தலை தடுத்தவர்) பெரியவர் தரிசனத்துக்காக வரிசையில் நின்றார். அவர் முகத்தில் நோயின் வாட்டம்! மனிதர்களுக்கான வியாதிகள் பலவிதம். அதில் ஒவ்வொன்றும் ஒருவிதம் அவைகளில் சிறுநீரக பாதிப்பும் அது தொடர்பான அவஸ்தையும் மிகக் கொடுமையான ரகம்!

ஒரு நாளைக்கு இவ்வளவு தண்ணீர்தான் குடிக்கலாம் என்று மருத்துவர்கள் கூறிவிடுவார்கள். எவ்வளவு தாகம் எடுத்தாலும் ஒரு மடக்குக்கு மேல் தண்ணீர் குடிக்க முடியாது. குடித்தால் தாகம் தீரும். ஆனால், சிறுநீர்ப்பை நிரம்பி போய் பெரும் அவஸ்தை ஆரம்பமாகிவிடும். அதன்பின் மொத்த உடம்பே பாரமாகி சிறுநீரில் உள்ள உப்பு பிரியாமல் ரத்தத்தில் கலந்து ஒரு மந்த கதி தோன்றிவிடும்.

அவரிடமும் மந்த கதிதான் தென்பட்டது.

பெரியவர் போன்ற மகான்களைப் பார்த்தாலாவது மோசனம் ஏற்படாதா? என்று தான் வந்திருந்தார். வேதனை அவருக்கு நல்ல புத்தியை

https://t.me/tamilbooksworld

தந்துவிட்டது என்றும் கூறலாம்.

அவருக்கான முறை வந்து தீர்த்தம் பெற ஆவலாக கை நீட்டியவரை பெரியவரும் தீர்க்கமாக பார்த்தார். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள்! பிறகு, அவரிடம் பேசவும் தொடங்கினார்.

அவரும் தன் மோசமான உடல்நிலையைச் சொல்லி கதற ஆரம்பித்துவிட்டார்.

மவுனமாக அவரை பேசவிட்டு, கேட்டுக்கொண்ட பெரியவர் பின் மெள்ள கேள்விகளை கேட்க ஆரம்பித்தார்.

"தண்ணீர்ப் பந்தல் அமைந்திருந்த இடத்தை வாங்கியது நீங்கள்தானே?"

"ஆமாம் சுவாமி..."

"தொடர்ந்து அங்கே தண்ணீர் பந்தல் அமைத்து தாகம் தீர்க்கிறீர்களா?"

"இல்லை சுவாமி..."

"காலங்காலமாக நடந்து வந்த ஒரு நல்ல காரியத்தை தடுத்து, அந்த இடத்தை வாங்கி என்ன சாதித்துவிட்டீர்கள்?"

இப்படி கேட்கவும் அவரிடம் பதிலில்லை. இருந்தும் கூறினார்.

"அங்கே கட்டிடம் கட்டி வியாபாரம் செய்ய நினைத்தேன். முடியாவிட்டால் வாடகைக்கு விட்டால் வருமானம் வரும் என்றுதான் அந்த இடத்தை வாங்கினேன்."

"எப்படி வாங்கினீர்கள்... தண்ணீர் பந்தல் இருக்கிறது விற்க முடியாது என்று கூறியவர்களை மிரட்டித்தானே?"

அவரிடம் அமைதி.

"தண்ணீர் தாகம் தீர்ப்பது என்பது ஒரு மிகப்பெரிய தர்மகாரியம். அடுத்து பசியைத்தீர்க்கும் அன்னதானம்! இந்த நல்ல காரியத்தை நாம் செய்ய முடியாவிட்டால் கூட பரவாயில்லை. செய்து கொண்டிருப்பவர்களை விரட்டி, அதை தடுப்பது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா?" பெரியவர் கேட்க அந்த மனிதரின் கண்களில் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

https://t.me/tamilbooksworld

"பேராசையால் நீ செய்த பாவத்துக்கு உன் உடம்பே உனக்கு தண்டனை தந்துவிட்டது. ஐந்து பூதங்களில் எதை பிரதானமாக வைத்து பாவம் செய்கிறோமோ? அதாலேயே தண்டனை கிடைக்கும். ஒருவிதை வளர்ந்து மரமாக கால நேரம் இருக்கிற மாதிரி அந்த பாவமும் வளர்ந்து வட்டியோடு வந்து நிற்கும். இதிலிருந்து ஒருவர்கூட தப்பிக்க முடியாது. அரசன்தான் அன்றே தண்டனை தருவான். தெய்வம் நின்று மெள்ள உணர்த்தியபடியே கொல்லும்.

காலையில் தவறு, மாலையில் தண்டனை என்றால் அந்த தண்டனையை மனித மனம் பெரிதாக எண்ணாது. தண்டனையைக் கூட விலைக்கு வாங்கி தப்பிக்க எண்ணும். இன்று அப்படியும் தப்பு செய்கிறவர்கள் இருக்கிறார்களே. அதனால்தான் எந்தப் பாவத்துக்கு எப்போது தண்டனை என்பது கடவுள் வரையில் ரகசியமாகவே உள்ளது. ஒருவேளை அந்த தண்டனைக்கான காலம் வருவதற்குள் நம் ஆயுள் முடிந்து விட்டால் அந்த தண்டனையை நம் பிள்ளை குட்டிகள் அனுபவிக்க நேரிடும். அதற்கு ஏற்பவே அவர்களும் பிறந்திருப்பார்கள்.

நாம் இப்பிறப்பில் ஒரு தவறும் செய்யாமல் வாழும் போதும் நமக்கு சில கஷ்டங்கள் நேரிட அப்படிப்பட்ட முன்னோர் பாவங்களே காரணம். அதை உணர்ந்து நாம் அந்த கஷ்டத்தை முழு விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டு அனுபவித்து கழித்துவிட வேண்டும். அதே சமயம் ஒரு நாளைக்கு ஒரு நல்ல செயலாவது முனைந்து செய்ய வேண்டும்.

ஒருவர் வழிகேட்கிறார். அவருக்கு வழிக்காட்டுவதுகூட ஒரு கைாரியம். சாலையில் ஒரு முள் கிடக்கிறது என்றால், அதை ஓரமாக எடுத்துப்போடுவதும் ஒரு நல்ல காரியம்தான். நல்ல காரியம் செய்ய பணம் தேவை என்று இல்லை. மனம் இருந்தால் போதும்.

இதை நாம் தொடர்ந்தால் பாவபுண்ணியம் என்கிற நமக்கான இரண்டு தட்டில் புண்ணியத்தட்டில் மெள்ள எடை கூடிக் கொண்டே போய், பாவத்தட்டு மேலேபோய் புண்ணியத் தட்டு தாழ்ந்து பாவத்தை சமன் செய்து புண்ணியமும் மிச்சம் இருக்கும். பின் நம்வாழ்வு அதற்கேற்பவே இருக்கும்.." என்று அவருக்கு ஒரு நல்ல விளக்கமும் தந்தார்.

அவரும் திரும்பிச் சென்று தான் எந்த இடத்தை வாங்கி தண்ணீர்ப்பந்தல் நடப்பதை தடுத்தாரோ அங்கே திரும்ப தண்ணீர் பந்தல் நிறுவி, அதை தினமும் செயல்படும்படி செய்தார். அதற்கு பின் திரும்பி வந்து பெரியவரிடம் தன் தவறை நேர் செய்துவிட்டதாக கூறினார்.

https://t.me/tamilbooksworld

பெரியவரும் மனதார அவரைப்பாராட்டி விட்டு, "கவலைப் படாதே, நாட்டு மருந்துக்கடையில் வசம்பு எனும் மூலிகை கிடைக்கும். அதை வாங்கி, நன்றாக அரைத்து அடிவயிற்றில் பூசு. போகபோக உன் வியாதி குணமானாலும் ஆகும்" என்றார்.

அவரும் அவ்வாறே செய்ய... என்ன ஆச்சரியம்! அவரது சிறுநீரகக் கோளாறு முற்றிலும் நீங்கியது. மருத்துவர்களும் பெரிதும் வியப்பு தெரிவித்தனர். இதனால் சிறுநீரகக் கோளாறுக்கு வசம்பு ஒரு மருந்து என்று எல்லாரும் நினைத்துவிடக்கூடாது.

வசம்பு இங்கே ஒரு பாகம்தான்! பெரியவரின் பேரருள், தப்பு செய்தவரின் முழுமையான திருந்திய நிலை தொடர்ந்து செய்த தண்ணீர் பந்தலுக்கான புண்ணியம் இவை எல்லாம் ஒன்று சேர்ந்தே அவர் பரிபூர்ணமாக குணமானார்.

பிறருக்கு வழிகாட்டுதல், குறைதீர்ப்பதில் பெரியவருக்கு இணையே கிடையாது. அவரிடம் நின்று குறைகளை வாய்விட்டுச் சொன்னால்தான் என்றில்லை. நாம் கூறத்தேவையே இல்லாமல் நம் முகத்தை வைத்தே அவருக்கு எல்லாம் தெரிந்துவிடும்.

ஒருமுறை ஓர் ஏழைப்பெண்மணி பெரியவரைக் காண வந்தாள்.

அந்த பெண்மணியின் மகளுக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது. ஆனால் செலவுக்குத்தான் பணமில்லை. குறிப்பாக திருமாங்கல்யம் வாங்கக்கூட கையில் காசில்லை. பெரியவரை தரிசிக்கும்போது அதை கண்ணிரோடு முறையிட்டாள்.

பெரியவரும் காமாட்சி கோயிலுக்குப் போய் தரிசனம் செய்துவிட்டு பிறகு தன்னை வந்து பார்க்கச் சொன்னார்.

அந்தப் பெண்மணியும் உடனேயே கோயிலுக்குச் சென்றாள். கோயிலை சுற்றிவலம் வரும்போது வழியில் ஒரு தங்கத் திருமாங்கல்யம்!

காமாட்சியம்மன் கோயில் வெளிப்பிரகார வெளியில் கிடந்த அந்த தங்கத்திருமாங்கல்யம் அந்த பெண்ணை ஒரு வினாடி அதிர்ச்சிக்கும் மறுவினாடி ஆச்சரியத்துக்கும் ஆட்படுத்தியது.

குனிந்து கையில் எடுக்கும் போதே ஒரு இனம் புரியாத நடுக்கம்.

பெரியவர், "காமாட்சியம்மன் கோயிலுக்கு போய்விட்டுவா" என்று

https://t.me/tamilbooksworld

கூறியது இதற்கு தானா?

திருமாங்கல்யத்தை எடுத்த அந்த பெண் முதல்காரியமாக கண்களில் ஒற்றிக்கொண்டார். உள்ளங்கை எடைபோட்டுப் பார்த்தது.

'பாவம் இதை தொலைத்தவள்... அவள் மனம் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறதோ?' அந்தப் பெண்மணி அதை தனக்கு கிடைத்ததாக எண்ணாமல் தொலைத்த பெண்மணிக்காக வருத்தப்பட்டாள். அப்படியே நாலாபுறமும் பார்த்துவிட்டு பெரியவரைக் காணவும் புறப்பட்டாள்.

பெரியவர் அந்த பெண்மணி வரவும் புன்னகைத்தார்.

## 27

ஒன்றும் அறியாதவர் போல, "என்ன காமாட்சியை தரிசனம் பண்ணிட்டியா?" என்றும் கேட்டார்.

அந்த பெண்ணும் ஆமோதித்தப்படியே, அந்த திருமாங்கல்யத்தை பெரியவர் முன்னால் வைத்தார்.

"என்ன இது... நீ கேட்ட திருமாங்கல்யம் கிடைச்சிருக்கா?"

"இல்லை பெரியவரே... இது கோயிலில் கீழே கிடந்தது. பாவம் யாரோ தவறவிட்டு விட்டார்."

"ஓ அப்படியா?"

"ஆமாம்... நீங்க சொன்னபடி தரிசனம் முடித்துவிட்டு வரும் போது கிடைத்தது. பாவம் தொலைத்தப் பெண் தன் கணவருக்கு ஆபத்து நேரப்போவதன் அறிகுறி என்று பதறிக் கொண்டிருப்பாள்..."

"அப்ப இதை அம்பாள் உனக்கு கொடுத்ததா நீ நினைக்கலையா?"

பெரியவர் கேட்ட நொடி அந்தப் பெண்ணின் கண்களில் ஓர் அதிர்ச்சி!

"ஏன் கலங்கறே?"

"இல்லை... இன்னொரு பெண்ணோடதை நான் எப்படி எனக்கு கிடைச்சதா நினைப்பேன்? அம்பாள் எனக்கு கொடுக்க விரும்பினா இப்படியா கொடுப்பா?"

https://t.me/tamilbooksworld

பெரியவர் அந்தப் பெண்ணின் பதிலைக் கேட்டு அர்த்தத்தோடு சிரித்தபோது, ஒரு பெண்மணி அழுதுகொண்டே அங்கு வந்தாள்.

"பெரியவரே! நான் காமாட்சியம்மன் கோயிலுக்கு தரிசனம் செய்யச்சென்ற இடத்தில் என் திருமாங்கல்யம் தொலைந்து விட்டது. எனக்கு பயமாகவும் பதற்றமாகவும் உள்ளது. என் கணவர் வேறு உடல் நலமில்லாமல் இருக்கிறார். எனக்கு நீங்கள் தான் நல்ல வழிகாட்டவேண்டும்" என்று கண்ணீர் சிந்தினார்.

பெரியவர் அடுத்த வினாடியே "இந்த மாங்கல்யமா பார்" என்று தன் வசம் உள்ள மாங்கல்த்தைக் காட்டவும். அந்தப் பெண்ணும் வாங்கிப்பார்த்துவிட்டு பூரித்தாள்.

"இதுவேதான்... இதுவேதான்!" என்று உணர்ச்சி வயப்பட்டாள். பெரியவரும் அதை அவள் வசமே ஒப்படைத்து வைத்துக்கொள்ள சொல்லவும், அவள் நெகிழ்ச்சியோடு நன்றி சொன்னாள்.

"நன்றியை நீ இந்தப் பெண்ணுக்குச் சொல். இவள்தான் நீ தொலைத்ததை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தாள்..." என்று சொல்ல, அந்தப் பெண்ணும் ஒரு மாங்கல்யத்துக்கூட வக்கில்லாத அந்தப் பெண்ணுக்கு நன்றி கூறினாள்.

"பெரியவரும் அந்த இருவரையும் பார்த்து சிலாகிக்க தொடங்கினார்."

"அம்பாள் சன்னதில தப்பு நடக்காது. நடக்கவும் கூடாது. அதை அவ அனுமதிக்கமாட்டா. தாலியை இழந்து சலனப்படணுங்கற உன்விதிப்பாடு முடிஞ்சது. உன் கணவர் உடல்நலமும் தேறிவிடும். நீ சவுக்கியமாய் வாழ்வாய்!" என்று தாலியை பெற்றுக்கொண்ட பெண்ணை வாழ்த்தி அனுப்பினார்.

தாலிக் கேட்டு வந்தது நிற்கும் பெண்ணிடம், "உனக்கும் அனுக்கிரகம் உண்டு. காலம் உனக்கு வைத்த பரிட்சையில் நீ பாசாயிட்டே..." என்று கூறி சிரித்தார்.

அந்தப் பெண்ணுக்கு அது அவ்வளவாக புரியவில்லை. அதே சமயம் ஒரு வயதான தம்பதியினர் பெரியவரை தரிசனம் செய்ய வந்தனர்.

அவர்கள் தங்கள் பெண்ணுக்கு திருமணம் நடக்க இருப்பதைக் கூறி, வாழ்த்த வேண்டினர்.

https://t.me/tamilbooksworld

அப்படியே இந்தத் திருமணம் நல்ல விதமாய் முடிவானால், அம்பாளுக்கு திருமாங்கல்யம் செய்து போடுவதாக வேண்டியிருந்தோம். அந்தத் திருமாங்கல்யம் செய்துகொண்டு வந்துள்ளோம் என்று பெரியவர் முன்னால் ஒரு திருமாங்கல்யத்தை வைத்தனர். அருகிலேயே அந்தப் பெண்மணியும் இருந்தாள்.

பெரியவர் அவர்களிடம், "அப்படி என்றால் இந்த திருமாங்கல்யம் அம்பாளுக்கா?" என்று கேட்டார்.

அவர்கள் "ஆம்" என்றனர்.

"அம்பாள் வரையில் தனக்கு ஒன்றை பரிகாரத்தமாக செய்வதை விட பிறருக்கு பராபோகாரமாக செய்வதை அவள் மிகவும் விரும்புவாள். இது உங்களுக்கு தெரியுமா?’ என்று கேட்டார்.

அந்த தம்பதியினர் ஆமோதித்தனர்.

"அப்படி என்றால் இதை நீங்கள் தானமாக யாருக்காவது தரலாமே!’ என்று சொன்னார்.

அவர்களும் குருவின் வழிகாட்டுதல் எதுவோ அதுவே எங்கள்வழி. அவர் விருப்பமே எங்கள் விருப்பம் என்றிட அந்தப் புதிய திருமாங்கல்யத்தை தவித்தபடி இருக்கும் பெண்ணிடம் தரச்சொன்னார்.

அவர்களும் சந்தோஷமாக தந்தனர். அப்படியே மேற்கொண்டு உதவவும் தயார் என்றனர்.

பெரியவரை நாடிவந்த பெண்ணின் துன்பமும் நீங்கியது. வந்தவர்களுக்கும் ஓர் ஏழைப்பெண்ணுக்கு உதவிய நிறைவு.

அனைத்துக்கும் மேலாக திருமாங்கல்யத்தை தொலைத்துவிட்ட பெண்ணுக்கும் அருள்வழி காட்டியவராக அவர் நடந்து கொண்ட விதம்தான் உச்சபட்சம்.

ஒரு அப்பழுக்கற்ற சன்னியாசிக்கே திரிகால ஞானம் முப்பரிமாணப்பார்வை இருக்கும்.

அவர்களாலேயே நடந்தது. நடக்கப்போவது நடந்து கொண்டிருப்பது போன்றவற்றை எல்லாம் தெரிந்தும் புரிந்தும் செயல்பட முடியும். அதற்கு 20ம் நூற்றாண்டில் ஓர் அசலான உதாரணம் பெரியவர்!

https://t.me/tamilbooksworld

# 28

ஒருமுறை இப்படித்தான் வெளியூரில் இருந்து வந்திருந்த பெண்மணி, பெரியவர் எதிரில் அமர்ந்து அவர் பூஜிப்பதை பார்த்தபடி இருந்தார்.

பூஜை முடிந்து எல்லாரும் கிளம்பிவிட்ட நிலையில், அந்தப் பெண்ணும் புறப்பட தயார் ஆனாள். முன்னதாக அமர்ந்திருந்த இடத்தில் யாரோ வெற்றிலையைக் கிள்ளி காம்பைப் போட்டு விட்டு அதை சாப்பிட்டு விட்டிருந்தனர்.

அந்தப் பெண் காம்பை எல்லாம் பொறுக்கி குப்பை கூடையில் போட அதை தேடினாள். யதார்த்தமாக அதைக் கவனித்த பெரியவர். அந்த வெற்றிலை காம்புகளை அவள் மஞ்சப் பைக்குள் போட்டுக்கொள்ளச் சொன்னார்.

அதை அந்தப் பெண்மணியும் உள்ளங்கையில் அடங்கியிருந்த அந்தக் காம்புகளை பையில் போட்டுக்கொண்டாள்.

பெரியவர் சொன்னால் அதில் காரணமிருக்கும் என்று நம்பினாள்.

பின்னர் பெரியவரை வணங்கிவிட்டு பஸ்சில் தன் ஊருக்குப் புறப்பட்டாள்.

அவள் பையில் கொஞ்சம் பணமும் பிரசாதமும் இருந்தது. அதே பஸ்ஸில்தான் அவளுக்கு ஓர் ஆபத்தும் காத்திருந்தது!

அந்தப் பெண்மணி தன் ஊர் நோக்கி பஸ்ஸில் பயணிக்கையில், அந்த பஸ்சுக்குள் ஒரு திருடியும் இருந்தாள்.

ஓடும் பஸ்சுக்குள் நோட்டம் போட்டு, ஆள் பார்த்து திருடுவது அந்த திருடியின் வழக்கம். குறிப்பாக மடத்துக்கு வந்துவிட்டும், காஞ்சிபுரம் வந்து எல்லா கோயில்களுக்கும் போய்விட்டும் திரும்பும் பக்தர்களிடம் திருடுவதை அவள் ஒரு வழக்கமாகவே வைத்திருந்தாள்.

ஏனென்றால் இவர்கள் கோயிலில் அலைந்து திரிந்த களைப்போடு பஸ்சுக்குள் தங்களை மறந்து தூங்கிவிடுவார்கள். அவர்கள் தூங்கும் தருணம்தான் இவளுக்கும் திருடுவதற்கு மிக தோதான தருணம்.

அந்த வகையில் அன்று பெரியவரை தரிசனம் செய்துவிட்டு சென்ற

https://t.me/tamilbooksworld

பெண்ணின் மஞ்சள் பை அந்தத்திருட்டுப் பெண்ணின் கண்ணில் பட்டுவிட்டது. அந்தப் பெண் லேசாக கண்ணயரவும், அந்தப்பையை திருடிவிட்டாள்!

பஸ்சும் ஒரு இடத்தில் நின்றது. திருட்டுப் பெண்ணும் மஞ்சள் பையோடு இறங்க முற்பட்டாள்.

அதேவேளை அந்த பைக்கு உரிய பெண் கண்விழித்தவளாக தன் வசமிருந்த பையை காணாமல், "கடவுளே என் பை!" என்று அலறியவள், தன் பையுடன் திருட்டுப் பெண் இறங்குவதைப் பார்த்து, "அதோ என் பை..." என்று கத்தவும், அவளை எல்லோரும் தடுத்து நிறுத்தினர். ஆனால் அந்த திருடி கொஞ்சம் கூட கலக்கமில்லை. பதற்றமில்லை. தன்னைப்பிடித்து நிறுத்தியவர்களிடம், "என்னங்கடா... இது என்னோட பை..." என்றாள்.

அதைக்கேட்ட பையை தொலைத்த பெண்திகைத்தாள்!

"அடிப்பாவி... என் பையை திருடிவிட்டு உன் பைன்னு சொல்றியே நீ நல்ல இருப்பியா?" என்று அழுதாள்.

"சும்மா நீலிக்கண்ணீர் வடிக்காதே. இதுல ஐநூத்தி அறுபது ரூபா சில்லரையோட என் பர்ஸ்தான் இருக்கு. இந்தாங்க பாருங்க..." என்று மணி பர்ஸை அந்தப் பைக்குள் இருந்து எடுத்து, பர்ஸை திறந்து காட்டினாள். அதில் ஐநூற்று அறுபது ரூபாய் இருந்தது. இது போக இந்த பையில் பிரசாதம் இருக்கு... "அவ்வளவுதான்" என்றாள்.

அவளது விளக்கமான பதிலும் தெளிவான பேச்சும் எல்லாரையும் கட்டிப்போட்டுவிட்டது.

பையைத் தொலைத்த பெண்ணை பதிலுக்கு எல்லாரும் ஒருமாதிரியாக பார்த்தனர்.

அந்த பெண்ணுக்கு ஒரே ஆச்சரியம்! 'உள்ளே தான் வைத்திருக்கும் பணம் எவ்வளவு என்று இவளுக்கு எப்படி தெரியும்?' என்று கேள்விக்குள் சிக்கியவளுக்கு விடை கிடைத்து விட்டது.

டிக்கெட் வாங்க பர்ஸ் எடுத்தவள் உள்ளே இருந்து அறுநூறு ரூபாயை எடுத்து அதில் ஒரு நூறு ரூபாயைத் தரவும், டிக்கெட் தொகை நாற்பது ரூபாய் போக அறுபது ரூபாய் மீதம் கண்டக்டர் தந்ததும், அதை எல்லாரும் பார்க்க பர்ஸில் வைத்ததும் ஞாபகம் வந்தது. அப்போது இந்த திருடி

https://t.me/tamilbooksworld

கவனித்திருக்க வேண்டும் என்பது தெரிந்துவிட்டது.

அப்போதுதான் அந்தப்பெண்ணுக்கு வெற்றிலைக் காம்புகளை பெரியவர் பைக்குள் போடச் சொன்னது நினைவுக்கு வந்தது.

உள்ளே வெற்றிலைக்காம்புகள் இருப்பது கண்ணுக்கே தெரியாத நிலையில், அது இருப்பதை எப்படிக் கூறமுடியும்? எனவே, அந்த காம்புகளை எண்ணியவளாக, "இந்தப் பை, என் பைதான் என்பதை என்னால் நிரூபிக்க முடியும். இதில் என்னவெல்லாம் உள்ளது என்றும் கூறுகிறேன்" என்று சொல்ல,

அதைக்கேட்ட திருடியும், "இந்த மணிபர்சும் பிரசாதத்தை தவிர இதில் எதுவுமில்லை. இதை சொல்வது ஒன்றும் பெரிய விஷயமில்லை" என்று பதில் கூறினாள்.

"இல்லை. மூன்றாவதாக ஒருவிஷயம் உள்ளது. அவசியப் பட்டால் அந்த விஷயத்திற்கு காஞ்சிப்பெரியவரே சாட்சியும் சொல்வார்" என்று பையைத் தொலைத்த பெண்மணி பீடிகை போட, திருடிய பெண்ணின் முகம் மெல்ல வெளிற ஆரம்பித்து விட்டது.

பஸ்சில் இருந்தவர்கள் பரபரப்பாகி, "அது என்னன்னு சொல்லுங்க" என்றிட, "இந்த பைக்குள் பத்து பதினைந்து வெற்றிலைக் காம்புகள் இருக்கும். அவை பெரியவர் பூஜை செய்யும்போது முன்னால் கூட்டமாய் அமர்ந்தவர்களில் சிலர் கீழே போட்டதாகும். நான் அதை எடுத்து குப்பைத்தொட்டியில் போடப்போன போது, பெரியவர்தான் பையில் போட்டுக்கொள். பிறகு வெளியே போய் உரிய இடத்தில் போட்டு விடு..." என்று சொல்லாமல் சொன்னார். அவர் பையில் போட்டுக்கொள்ள சொன்ன காரணம் இப்போது புரிகிறது.

## 29

"உங்களுக்கு சந்தேகமிருந்தால், பையை உதறுங்கள் தெரியும். அப்போதும் நம்பிக்கை வராவிட்டால் விடுங்கள் பெரியவரிடம் போகலாம். அவர் பதில் கூறுவார்" என்று கூறினாள் அந்தப் பெண்.

கூட்டத்தில் ஒருவர் பையை வாங்கி உதறவும் வெற்றிலைக் காம்புகள் சிதறி கீழேவிழுந்தன. திருடிய பெண்ணும் வேறு வழியின்றி தான் திருடியதை ஒப்புக்கொண்டாள்.

https://t.me/tamilbooksworld

ஒரு சாதாரண வெற்றிலைக்காம்பு கூட ஒரு ஞானியின் பார்வையில் ஒரு சாட்சியமாக மாறும் என்பது எத்தனை வியப்புக்குரிய விஷயம்.

இது போன்ற சம்பவங்களை கேள்விப்படும்போது, நமக்குள் பல துணைக்கேள்விகள் எழலாம். பெரியவரின் ஞானதிருஷ்டிக்கு பைதிருடு போவது தெரிந்திருந்ததால் தானே காம்பை பையில் போட்டுக்கொள்ளச் சொன்னார். இதற்கு அந்தப் பெண்ணிடம் பை திருடப்பட இருக்கிறது. ஜாக்கிரதை என்று எச்சரிக்கை செய்திருக்கலாமே!

அப்படி ஒரு திருட்டே நடக்காமல் போயிருக்குமே? என்று சிலர் நினைக்கலாம்.

விதிவழிச் செயல்பாடுகளை யாராலும் மாற்ற இயலாது. அப்படி மாற்ற முடியும் என்றால் பெரியவர் போன்றவர்கள் முதுமை அடையவே தேவையிருக்காது. இளம் பிராயத்தோடு நின்று விடலாம். இதே அடிப்படையில் எல்லாவற்றையும் மாற்றி விடலாம். அப்படி மாற்ற முடியும் என்று தோன்றினால் இன்றுள்ள உலகமும் இன்றுள்ள நம் வாழ்வும் கூட இன்று இருப்பது போல இருக்காது.

விதிவழி நடப்பது நடந்தே தீரும். அதை பெரியவர் போன்ற ஞானியர் நேர்ப்படுத்த அதில் வாய்ப்பு இருந்தால் நேர்ப்படுத்துவர். நேர்ப்படுத்தவும் விதி ஒத்துழைக்க வேண்டும்.

பணம் திருடக்கொடுத்த பெண்மணி வரையில் அது திருடு போய் பெரியவர் வழிகாட்டலால் திரும்பக் கிடைக்க வேண்டும் எனும் அமைப்பு இருந்திருக்க வேண்டும்.

பெரியவர் போன்ற ஞானியர்களை நல்ல விதிப்பாடு இருந்தாலே சந்திப்போம்.

உலகில் எவ்வளவோ கோடிபேர்! அவ்வளவு பேருமா பெரியவரை தரிசனம் செய்தவர்கள்?

சிலருக்குத்தான் அந்த வாய்ப்பு கிட்டுகிறது.

எந்த வகையிலாவது தன்னை அண்டியவர்களுக்கு உதவுவது தான் பெரியவர் விருப்பம். தொலைவில் இருந்தாலும் தன்னை நம்பி தன் மேல் பக்தியோடு உள்ளவர்களையும் அவர் கைவிட்டதேயில்லை.

இப்படித்தான் வயதான பெரியவர் ஒருவர், மகாபெரியவர் மேல் மிகுந்த

https://t.me/tamilbooksworld

பக்திகொண்டவர். பல ஆண்டுகளாக பெரியவரை தரிசித்து ஆசிபெறவேண்டும் என்பது அவர் விருப்பம். ஆனால், முதுமை காரணமாக முடியவில்லை.

ஒருநாள்...

அந்தப் பெரியவரின் வீட்டின் முன் காஞ்சி மடத்துக்கு சொந்தமான வேன் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பெரியவரின் சிஷ்யர்களில் இருவர் அந்த பெரியவர் முன்னால் சென்று அவர் பெயரைச் சொல்லி, ‘நீங்கள்தானே அவர்?’ என்று கேட்டார்கள்.

அவரும் ஆமோதித்தார். சிஷ்யர்களும் உடனே அவரிடம் தாங்கள் காஞ்சி மடத்தில் இருந்து வருவதாகக் கூறவும் அந்த வயதான பெரியவரிடம் ஒரே பரவசம்.

"பெரியவா உங்களை கையோட அழைச்சுண்டு வரச் சொன்னா... நீங்க அவரை தரிசனம் பண்ண ரொம்ப ஆசைப் படுதறா கேள்விப்பட்டோம்" என்றார்கள்.

வயதான பெரியவருக்கு பெரும் திகைப்பு!

தான் இங்கே நாலு சுவத்துக்குள் நடமாட முடியாத நிலையில் ஆசைப்பட்டபடி இருப்பது காஞ்சியில் பெரியவருக்கு எப்படி தெரியும் என்பது அவர் முதல் வியப்பு!

அடுத்து பெரியவரே தன் விருப்பம் தெரிந்து மடத்து சிஷ்யர்களை அனுப்பியது அடுத்த கட்ட வியப்பு! அதை அவர் முகம் எதிரொலித்தது. அதை அவர் சொல்லவும் செய்தார்.

"பெரியவரா என்னை அழைத்துவரச் சொன்னார்?"

"ஆமாமா!"

"இங்க நான்தவித்தபடி இருப்பது அவருக்கு எப்படி தெரியும்?"

"அது எங்களுக்கு தெரியாது... பெரியவா சொல்றதை கேட்டு நடக்கறவா நாங்க. உங்கள அழைத்துக்கொண்டு வரும்போது காமாட்சியம்மன் கோயில்ல தரிசனமும் பண்ண வச்சு அப்புறமா அழைச்சிண்டு வரச்சொன்னா."

இந்த பதில் அந்த வயதானவரை திக்குமுக்காட வைத்துவிட்டது. அந்த

https://t.me/tamilbooksworld

வயதானவருக்கு பிள்ளைகள் இல்லை. உறவினர் சிலரின் அரவணைப்பில் இருந்து வருபவர். தள்ளாத முதுமை காரணமாக நடமாட்டமும் இல்லை. கண் பார்வையும் மங்கிவிட்ட நிலை!

மடத்து சிஷ்யர்கள் அவரை பக்குவமாக தூக்கிக்கொண்டு சென்று வேனில் ஏற்றினர். அவரும் குரு தரிசனத்துக்கு தயாரானார்.

காமாட்சியம்மன் கோயிலுக்கு சென்ற இடத்தில், ‘முதலில் குரு தரிசனம் பிறகே அம்பாள்’ என்று கூறிவிட்ட நிலையில் சிஷ்யர்களும் அவரை பெரியவர் முன்கொண்டு சென்று அமர வைத்தனர்.

வயதானவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

மகாபெரியவரும் அவரை உற்றுப்பார்த்தார். பின்பு நலம் விசாரித்தார். வயதானவருக்கோ பேச்சே வரவில்லை. தான் காண்பது நனவா? இல்லை கனவா? என்கிற எண்ணம் அவருக்குள் நெடுநேரம் வெறித்தபடியே இருந்தார். பின் பெரியவரே, "என்ன வேண்டும். ஏதாவது பேசுங்கள்..." என்றார்.

"சர்வேஸ்வரா... உடல் உபாதையை சகிக்க முடியல. ஒத்தாசைக்கு யாருமில்லை. என் போன்ற ஒவ்வொரு தள்ளாதவனும் பூமிக்கு பாரம். நான் வலியில்லாத மரணத்தை விரும்புகிறேன். திரும்ப பிறக்கவும் கூடாது. அனுக்கிரகம் பண்ணுங்கோ" என்றார்.

# 30

"நான் ஒரு ஸ்லோகம் சொல்றேன்… அதை சொல்லிண்டே இருங்கோ. உங்க விருப்பப்படியே எல்லாம் நடக்கும்" என்ற பெரியவர், அந்த ஸ்லோகத்தையும் உபதேசித்தார்.

"அநாயசேன மரணம்-விநா தைன்யேன ஜீவனம்
தேஹிமே க்ருபயா சம்போ-த்வயி பாதபக்திம் அசஞ்சலாம்"

என்று அவர் சொன்ன ஸ்லோகத்தை அந்த வயதானவரும் திரும்பச் சொன்னார்.

இந்த மந்திரத்தோடு ருத்ரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வரும் 'த்ரயம்பகம் யஜாமஹே...' என்று தொடங்கும் ஸ்லோக வரிகளையும் சேர்த்துக்கொள்ளச் சொன்னார்.

https://t.me/tamilbooksworld

அவரும் கண்ணீரோடு விடை பெற்றார்.

திரும்பும் வழியில் கண்குளிர காமாட்சி தரிசனமும் ஆயிற்று. வீடு போய் சேர்ந்தார். சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே பெரியவர் சொன்ன மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பித்தார்.

சற்றைக்கெல்லாம் அவர் உறவினர்கள் வந்து அவரைத் தொட்டபோது உடம்பு சில்லிட்டிருந்தது.

மகாபெரியவர் அவரை அழைத்துவரச் சொல்லி அருளாசிகள் வழங்கிய வேகத்துக்கான காரணமும் அனைவருக்கும் புரிந்து போயிற்று.

அந்த வயதானவர் முறையாக வாழ்ந்தவர். மிகுந்த பக்தியும் ஆசாரமும் உடையவர். முதுமை அவரை முடக்கிப்போட்டதில், அவரால் பல காரியங்களைச் செய்ய முடியவில்லை. குறிப்பாக அவரது குருபக்தி அப்பழுக்கற்றது. அதுவே இறுதியில் அவரைக் கடைத்தேற்றியும் விட்டது.

பெரியவர் பேரில் நமக்கு பக்தி இருந்தால் போதும், எங்கிருந்தாலும் அதை அவரால் உணர முடியும். அது தான் அவர் தவச்சிறப்பு! அவரிடம் மனம்விட்டு பேசினால்தான் அவருக்கு புரியும் என்று கிடையாது.

ஐம்புலன் சுருக்கிய உள்ளொளி பெருக்கில் ஞானியர்க்கு ஞான திருஷ்டி எப்பொழுதும் பளிச்சென்று இருக்கும். அதிலும் தவநெறியில் துளியும் பிசகாதவரிடம் தெய்வம் நின்று பேசும். பெரியவர் தன் தவநெறிக்கு குந்தகமாக ஒரு போதும் நடந்து கொண்டதில்லை. அவர் வரையில் ஏழை, பணக்காரன் என்கிற பேதமும் கிடையாது. துலாக்கோல் போல அவ்வளவு சமமாக நடந்துகொள்வார்.

பாரதப் பிரதமராக இருந்த இந்திரா, பெரியவரை தரிசனம் செய்ய வந்தார். அவரை எவ்வாறு சந்தித்து பேசினாரோ அதற்கு அணியும் குறைவின்றி அன்று தன்னை சந்தித்த பக்தர்கள் அவ்வளவு பேரிடமும் பேசினார்.

குறிப்பாக அன்று பேசக்கூடாது. மவுனவிரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்தவர் பாரதப் பிரதமரே பார்க்க வரவும் அதை தளர்த்திக்கொண்டார். அவரோடு பேசிவிட்டு மற்றவர்களிடம் பேசாவிட்டால் எப்படி? அவர் தன்னை ஒரு நெருப்புச்சுடர் போல வைத்துக்கொண்டதற்கு ஓர் எளிய சம்பவமே சாட்சி.

மடத்தில் அவரது உணவு மிக எளிமையானது. சற்று இளம்வயதில் கீரை, பருப்பு என்று சாப்பிட்டார். வயதாகிவிட்ட பிறகு வாழைக்காய் மாவும்,

https://t.me/tamilbooksworld

மோரும்தான் அவர் பிரதான உணவு. பொதுவாக வாழை சார்ந்த வாழைத்தண்டு, வாழைப்பூ, வாழைக்காய் சன்னியாசிகளுக்கு ஏற்ற உணவு. ஏனென்றால் இவற்றில்தான் திரும்ப முளைக்கச் செய்யும் விதைகள் கிடையாது.

ஒருமுறை அவர் கீரை சாப்பிட நேர்ந்தது. அதை அவரது சிஷ்யர் சமைத்த விதம் மிகபக்குவமாய் இருந்தது.

தன்னை மறந்து சிஷ்யரை அழைத்து, "உன் கைப்பக்குவம் பிரமாதம்" என்று பாராட்டினார்.

அது அந்த சிஷ்யரை சந்தோஷத்தில் ஆழ்த்திவிட்டது.

குருநாதரின் பாராட்டு மறுநாளும் அவரை கீரை சமைத்து போடச் செய்தது. அன்றும் நல்ல ருசி!

ஒரு கட்டத்தில் பெரியவரை தரிசனம் செய்ய வந்தவர்களிடம் எல்லாம் பெரியவருக்கு பிரியமான அந்தக் கீரைக்கட்டுகள்தான்!

அந்தக்கீரைக்கே அதன் இயல்பான பெயர் போய் ‘சங்கராச் சாரியாருக்கு பிடித்தமான கீரை’ என்கிற பெயர்வந்து விட்ட ஒரு நிலை! அதன் எதிரொலியாக பெரியவர் 15 நாட்களுக்கு தண்ணீர் கூட சாப்பிடாதபடி உபவாசத்தில் ஆழ்ந்துவிட்டார்.

மடத்தில் உள்ளவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை!

கீரை சமைத்துப்போட்ட சிஷ்யரிடம், "உன்னால்தான் எல்லாம்" என்று சண்டை போடாத குறை. ஆனால் உபவாசம் கலைத்த பெரியவர் அனைவரையும் அழைத்து உபவாச காரணத்தை பிறகே கூறினார்.

"நான் முற்றும் துறந்த துறவி. ஆதிசங்கரபகவத்பாதாள் சென்ற பாதையில் சென்று உலகத்தவர்க்கு ஆன்மிக கடமையாற்றித்தான் மடாதிபதி என்றும் ஆகியுள்ளேன். அப்படிப்பட்ட எனக்கு ஒருகீரை பிடித்துப்போய் அது சங்கராச்சாரியருக்கு பிடித்த கீரை என்கிற நிலைக்கு சென்றுவிட்டது.

இதனால் என் குருநாதர் பெயருக்கு களங்கம் வந்துவிடுமோ என்று நான் வருந்தினேன். ருசித்து சாப்பிட்ட என் தவறுக்கு எனக்கு நானே கொடுத்துக்கொண்ட தண்டனைதான் இந்த உபவாசம். எதன் மேலும் பற்றின்றி வாழக் கடமைப்பட்டவனே நான். அது அல்ப கீரைக்கும் பொருந்தும்.

https://t.me/tamilbooksworld

இம்மட்டில் அதை ருசியாக சமைத்த என் சிஷ்யன்பால் எந்த தவறுமில்லை. அவன் தன் கடமையை சரியாக செய்தவன். தன் குருவை திருப்திப்படுத்த அவன் செயல்பட்டான். ஆகையால் அவனை யாரும் குறை சொல்லாதீர்கள். ருசித்து சாப்பிட்டதே என் குற்றம். ஒரு கீரைக்கு அடிமைப்பட்டால் அப்புறம் நானென்ன சன்னியாசி?" என்று பெரியவர் கூறவும், அனைவரிடமும் பிரமிப்பு.

அதுதான் பெரியவர்!

## 31

பெரியவர் ஒரு சன்னியாசி மட்டுமல்ல; மடாதிபதியும் கூட இந்த இரண்டு ஸ்தானமும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானது. சன்யாசியின் நிலைப்பாடு என்பது பற்றே இல்லாமல் தவம் புரிவது. மடாதிபதி கடமையோ சமூக பற்றோடு அவர்களை வழி நடத்துவது.

தன் வாழ்நாளில் இந்த விநோத நிலைப்பாட்டை எண்ணி பெரியவர் பல தருணங்களில் பேசியிருக்கிறார்.

"முற்றும் துறந்த எனக்கு மடாதிபதி என்றும் ஒரு பெயர். போதாதற்கு ஜெகத்குரு என்றும் ஒரு பட்டம். இதை நினைக்கும் போது எனக்கு சற்று சிரிப்பும் கூட வரும். அதே சமயம் என் ஆதி குருவான ஆதிசங்கர பகவத்பாதர் இப்படி ஒரு மடத்தை நிறுவி, சன்னியாசியான என் போன்றவர்களை மடாதிபதி என்று ஆக்காமல் போயிருந்தால், உங்களை எல்லாம் சந்திக்க சந்தர்ப்பமே கிடைத்திருக்காது என்பதல்லவா உண்மை.

இந்த கடமை எனக்கு சிக்கப்போய்தானே நான் ஊர் ஊராக போய் உபன்சாயம், பூஜை, புனஸ்காரம், சதஸ் என்று எல்லாம் செய்ய முடிகிறது. நான் மடாதிபதியாக இல்லாது வெறும் சாமியாராக மட்டும் இருந்திருந்தால் எந்தமலைப்பொந்துக்குள் நான் அடைந்து கொண்டிருப்பேனோ... யாருக்குத் தெரியும்? ஒரு விதத்தில் இப்படி மடாதிபதி கடமையாற்றுவதுதான் சன்னியாசியாக இருப்பதை விடவே மேலானதாக எனக்கு படுகிறது. சன்னியாசியாக இருப்பதில் தனக்கு மட்டும்தான் நன்மை. மடாதிபதியானதால் ஒரு கடப்பாடு வந்து எல்லாருக்கும் வழிகாட்டும் பொறுப்பும் வந்துவிடுகிறது. ஒரு சமூகத்துக்கே சேவை செய்யும் வாய்ப்பும் அமைந்து விடுகிறது.

ஊர் உலகத்துக்கு பயன்படுவதுதானே பிரயோஜனம்? அதே ஊர் உலகத்துக்கு வழிகாட்டுபவன் அந்த வழியில் துளியும் பிசகில்லாமல்

https://t.me/tamilbooksworld

நடப்பவனாகவும் இருக்க வேண்டும் என்பதால், ஒரு நல்ல சன்னியாசியாகவும் இருக்க வேண்டியிருக்கிறது. மடாதிபதியாகவும் இருக்க வேண்டியுள்ளது" என்று தன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் பெரியவர், அதற்கேற்ப நடந்துகொண்ட சம்பவங்களும் பல உண்டு.

ஒருமுறை பெரியவர் விஜயவாடா நகரில் தங்கியிருந்த போது அங்கே பெரியவருக்கு தங்கக்கிரீடம் செய்து அணிவிக்க அங்குள்ள பக்தர்கள் விரும்பி அதற்கான பணியில் இறங்கினர்.

பெரியவரை அவர்கள் அந்த பரமேஸ்வரனாகவே பார்த்தனர். எனவே பரமனுக்கு தங்கக் கீரிடம் மிக பொருத்தமானது என்றும் கருதினர்.

இதற்காக நிதி வசூலித்த போது லட்சக்கணக்கில் திரண்டது.

அங்குள்ள மக்கள் மனமுவந்து அளித்தனர். அந்த நிதியைக் கொண்டு ஒருபுறம் தங்கக்கிரீடம் உருவானது.

மீதமும் பல ஆயிரங்கள் இருந்தன. இதை மடத்து கணக்கில் சேர்த்துவிட எண்ணி அவ்வாறே செய்தனர். பெரியவர் ஒரு நிர்வாகியாக மடத்தை நடத்தி வந்த நிலையில் பணம் என்பது தேவைக்கு இருந்தால் போதும் என்று எண்ணினார்.

நாளைக்கு தேவைப்படும் என்று வங்கியில் போட்டு வைப்பது என்பது நமக்கு புத்திசாலித் தனமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் மடம் போன்ற புனித ஸ்தாபனங்களுக்கு அதன் பலம் அருள் பலமாக மட்டுமே இருக்க வேண்டும். பொருள் பலம் இரண்டாம் பட்சமே...

நம் வாழ்வில் பொருளை முதலாவதாகவும் அருளை இரண்டாவதாகவும் வைத்துள்ளோம். பெரியவர் இம்மட்டில் அருள் பலத்தை விட பொருள் பலம் அதிகமாகிவிடாதபடி கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொண்டார்.

இதனால் மடத்து கணக்குப்பிள்ளை இரவு கேஷ் பாக்சினை பூட்டும்போது அதில் இரண்டேகால் ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அதற்கு சரியான காரணம் இருக்க வேண்டும். அதாவது அதற்கு உடனடியாக தேவை இருக்க வேண்டும். விஜயவாடாவில் அன்று ஆயிரக்கணக்கில் வைத்து பூட்டும்படி ஒரு நிலை.

அன்று பெரியவருக்கு தூக்கமே வரவில்லை. உடம்பெல்லாம் வலிப்பதுபோல ஒரு பிரமை. பொழுது விடிந்ததும் அதை எதிரொலித்தார். அப்படியே கணக்குப்பிள்ளையை கூப்பிட்டு கேஷ் பாக்சை எடுத்து

https://t.me/tamilbooksworld

வரச்சொல்லி பார்த்தார். உள்ளே பல ஆயிரங்களில் பணம்!

"என்ன இது?" என்று கேட்க கணக்குப் பிள்ளையும், இது டொனேஷனாக வந்தது… பிறகு பேங்கில் போடலாம் என்று வைத்திருக்கிறேன்" என்றார்.

பெரியவர் அதை கண்டித்தார்.

"ஒரு சன்னியாசி இப்படி கட்டுக்கட்டாக பணம் வைத்திருப்பது? மடத்தின் தேவைக்கு மேல் மடத்துக்குள் காலணா இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா... இதை முதலில் யாரிடமாவது கொடுத்து வெளியேற்று. கேஷ் பாக்சில் இரண்டேகால் ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது" என்றார்.

(இந்த இரண்டே கால் ரூபாய் என்பது தொடக்கத்தில்... பிறகு சற்று கூடுதலாக வைத்துக்கொள்ள அனுமதித்தார் என்பதே பின்பு எனக்கு தெரியவந்த தகவல்)

கணக்குப்பிள்ளையும் அவ்வாறே செய்தார்.

அவர்கள் அதன் பிறகு தங்கக் கிரீடம் அணிவிக்க வரும்போது அவ்வேளையில் கூட ஓர் அரிய காரியத்தை செய்தார்.

"நான் சன்னியாசி எனக்கு எதற்கு தங்கத்தில் கிரீடம்? ஆனால், நீங்கள் என்னை சன்னியாசியாக பார்க்காமல் அந்த பரமேஸ்வரனாகவே பார்ப்பதால் நான் இதை அணிந்து கொள்ள சம்மதிக்கிறேன். நான் அணிந்த பிறகு இது எனக்கானதாக ஆகிவிடுகிறது. பின் நான் இதை என்ன செய்யச்சொல்கிறேனோ அதன்படி செய்துவிட வேண்டும். இதற்கு சம்மதமா?" என்று கேட்டார்.

எல்லாரும் சம்மதிக்கவும் அந்தக் கிரீடத்தை தலையில் அணிந்துகொள்ளத் தயாரானார்…

## 32

கிரீடத்தை நேராக அவர்கள் தன்னுடைய தலையில் சூட்டிவிடாதபடி தன்தலைமேல் நிறைய ருத்ராட்சமாலைகளை எடுத்து அணிந்துகொண்டார் பெரியவர். அதன் பிறகே அந்த கிரீடம் சூட்டப்பட்டது. அது ருத்ராட்சம் மேல் கம்பீரமாக அமர்ந்துகொண்டது. ருத்ராட்சங்கள் வேறு அந்த இறைவன் வேறில்லை. எனவே அது பரமேஸ்வரனுக்கு அணிவிக்கப்பட்ட தாகவே ஆனது. பிறகுதான் அவர்

https://t.me/tamilbooksworld

தன் விருப்பத்தை கூறத் தொடங்கினார்.

"இந்த தங்கக் கிரீடம் வாஸ்தவத்தில் ராஜாக்கள் தலையில்தான் இருக்க வேண்டும். அதுதான் ராஜாக்களுக்கும் அழகு. அந்த வகையில் இதை ஒரு ராஜாவுக்கு நான் அணிவிக்க விரும்புகிறேன். ஆனால் இது ஜனநாயக நாடு. ராஜாக்கள் என்று யாரும் இல்லை. பழைய ராஜ வம்சத்தவர்களும் கிரீடமெல்லாம் அணிவது கிடையாது" என்று பீடிகை போட்டவர்,

"இதுதஞ்சை ராஜராஜ சோழன் சிலைக்கு அணிவிக்கப்படட்டும் அவன் பூத உடம்புதான் நம்மிடம் இல்லை. ஆனால் அவன் புகழுடம்பு அப்படியேதான் உள்ளது. அவன் மட்டும் இல்லாவிட்டால், இன்று சைவர்கள் போற்றி துதிக்கும் பெரியபுராணம் என்கிற நாயன்மார்களின் வரலாறே நமக்கு கிடைக்காமல் போயிருக்கும். சைவத்துக்கும் ஆன்மிகத்துக்கும் பெரும் தொண்டாற்றிய அரசன் அவன். அதற்கு அவன் எழுப்பிய பெரிய கோயிலே சாட்சி!

அன்று அவன் மட்டும் சிதம்பரம் போய் தீட்சிதர்கள் வசம் நால்வர் பெருமக்கள் தந்து விட்டு போயிருந்த ஏடுகளை எல்லாம் பெற்று வராமல் போயிருந்தால், அந்த ஏடுகளை செல்லரித்து விட்டிருக்கும். நமக்கும் பெரியபுராணம் கிடைத்திருக்காது. எனவே, ராஜாக்களில் பெரும் ராஜாவாக தர்மராஜனாக வாழ்ந்து மறைந்த ராஜராஜ சோழனின் சதயத்திருநாளில் இதை அணிவித்துக் கொண்டாடுங்கள் என்றார்.

எப்பேர்ப்பட்ட ஓர் அற்புதமான அணுகுமுறை இது என்று எண்ணிப் பாருங்கள். ஒரு சன்னியாசியாகவும், அதே சமயம் மடாதிபதியாகவும் பெரியவர் கச்சிதமாக நடந்துகொண்டார்.

அவரது செயல் தீரத்துக்கு இன்னமும் கூட சான்றுகள் உண்டு. அது…

பெரியவர் 80 வயது, 90 வயது வரை என்று முதுமையைத் தொடும் வரை ஓயாது யாத்திரைகள் மேற்கொண்டவர்.

யாத்திரை மேற்கொண்டு மக்களைச் சந்திக்க வேண்டும். அவர்களுக்கு அருள்வழி காட்டவேண்டும் என்பதெல்லாம் தான் அவர் கடப்பாடு. இதற்காகவே ஆதிசங்கரர் மடத்தை நிறுவினார் என்பார். அப்படி இருக்க தான் ஒரே ஊரிலேயே தங்கியிருப்பது சரியல்ல என்று எண்ணி எப்போதும் யாத்திரை மேற்கொண்டபடியே இருந்தார். அப்படி அவர் யாத்திரை மேற்கொண்டு சென்ற தருணங்களில் நிறையவே அதிசயங்களும் அற்புதங்களும் நடந்தன. அவற்றை வரிசையாக இனி

https://t.me/tamilbooksworld

காண்போம்.

ஒருமுறை தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வழியாக, அவர் திருவண்ணாமலை நோக்கி சென்றுகொண்டிருந்த சமயம் வழியில் ஒரு கிராமம். வசந்த கிருஷ்ணாபுரம் என்பதாக ஞாபகம். அந்த ஊர் பெயரில் இருந்த வசந்தம் ஊரில் இல்லை. காரணம் மழையே துளியும் இன்றி ஊரில் கடும் தண்ணீர் பஞ்சம், ஊரணி, குளங்களில் எல்லாம் வறண்டு விட்ட நிலையில் மக்கள் குடிதண்ணீருக்கே தத்தளித்த நிலை. இப்படி ஒரு நிலையில் பெரியவர் அந்த ஊருக்கு எதிர்பாராத விஜயம் செய்தார்.

பொதுவாக பெரியவர் போன்றவர்கள் வரப்போகிறார்கள் என்றால் ஊர் எல்லையிலேயே பூரணகும்பத்தோடு அழைத்துச் செல்வதுதான் மரபு. பல நேரங்களில் அதற்கு இடம் கொடுக்காதபடி பெரியவர், தன் யாத்திரையில் இது போல் நடந்து கொண்டுவிடுவார். அதே சமயம் அப்படி அவர் நடந்து கொண்டதன் பின்னால் பெரிதும் பொருளிருக்கும். அதை எவராலும் முன்னதாக கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

வசந்த கிருஷ்ணாபுரம் நோக்கி தன் பல்லக்கை திருப்பச் சொன்ன பெரியவரிடம், மடத்து மேலாளர் "இந்த வழியாக நாம் போகும் ஊருக்கு போய்ச் சேர முடியாது" என்று கூறினார்.

அதற்கு பெரியவர், "எனக்குத் தெரியும். நீ போ" என்றார்.

அதைப்போலவே ஸ்ரீமடம் தன் பரிவாரத்தோடு அந்த ஊர் நோக்கித்தான் சென்றது. ஸ்ரீமடத்துக்கு என்று யானை, குதிரை, காளை, ஒட்டகம் என்கிற வாயில்லா ஜீவன்களும் உண்டு. எங்கே போனாலும் இவை சகிதமாகத்தான் ஸ்ரீமடம் செல்லும். இது காஞ்சி மடத்துக்கு என்றில்லை. எல்லா மடங்களுமே யானை, பசு, ஒட்டகத்தை மடத்தில் வைத்து வளர்த்து வந்தனர். அவைகளுக்கு பூஜைகளும் உண்டு.

அனைத்து உயிர்களுமே சமமானவை என்கிற ஒருபாவனை இதனால் உருவாகிறது. இவை முன்னால் செல்ல பின்னால் மடத்து வேத கோஷ்டி வேத பாராயணம் செய்தபடி நடப்பார்கள். இப்படி பாராயணம் செய்துகொண்டு நடக்கும்போது, வேதம் சொன்னது போலவும் ஆயிற்று. நடந்த களைப்பும் தெரியாது.

நடுவில் பல்லக்கு எனப்படும் மேனாவுக்குள் பெரியவர் அமர்ந்திருப்பார். பெரியவர் இப்படி பல்லக்கில் வந்தது சில காலம்தான். மிகுந்த அகிம்சை உணர்வு உடைய முற்றும் துறந்த சன்னியாசிக்கு பல்லக்கு மட்டும் எதற்கு?

https://t.me/tamilbooksworld

என்று சிலர் மேலோட்டமான எண்ணங்களோடு கேட்டதுண்டு.

பல்லக்கில் பெரியவர் அமர்ந்து வருவதன் பின்புலத்தில் நிறைய நுட்பமான சங்கதிகள் உள்ளன.

## 33

பெரியவர் போன்ற சன்னியாசிகள் நம்மைப்போல வயிறு நிறைய விதம் விதமாகவும் அறுசுவையாகவும் சாப்பிடுபவர்கள் கிடையாது. இருவேளை உணவுதான். அதுவும் உப்பு காரமில்லாத பத்திய உணவு. இதில் பெரும்பாலான நாட்கள் விரதம் அனுஷ்டிப்பார்கள். இதனால் நம்போல பல மைல் தூரம் நடப்பது என்பது அவர்களுக்கு சிரமமான காரியம். அடுத்து அப்படி நடந்து செல்லும் போது கல்லோ முள்ளோ? இத்தி கால்கள் பாதிப்புக்குள்ளாகி பயணத்திட்டம் தடைப்பட்டால், அதனால் வரிசையாக எல்லா நிகழ்ச்சிகளும் பாதிக்கப்படுவதோடு அவர்கள் கட்டாயம் செய்தாக வேண்டும் என்கிற அன்றாட அனுஷ்டானமும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகும்.

இதை எல்லாம் உத்தேசம் செய்தே பல்லக்கில் வைத்து அவர்களை சுமக்கும் ஒரு முடிவு உருவானது. அவரது பல்லக்கை சுமப்பவர்களுக்கு நல்ல ஊதியமும் உணவும் வழங்கப்பட்டன. எப்படி ஜனாதிபதி, பிரதமர், முதல்மந்திரி போன்றோரை பாதுகாக்க வேண்டியதும் ஒரு கடமையோ அப்படியே இதுவும்... இதில் விருப்பு வெறுப்புக்கு இடமே கிடையாது. இருந்தாலும் பெரியவர் ஒரு கட்டத்தில்தான் பல்லக்கில் அமர்ந்து வருவதை தவிர்க்கத்தொடங்கினார்.

ஒரு மூன்று சக்கர சைக்கிள் வண்டியை பிடித்தபடியே நடந்தே பல ஊர்களுக்கு சென்றார். மடத்து நிர்வாகிகளும், பொது மக்களும் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் பெரியவர் மறுத்து விட்டார். அதே சமயம் கார், வேன் போன்ற வாகனங்களும் வந்துவிட்ட நிலையில், மனிதனை மனிதன் சுமக்கும் பல்லக்கு தானாக ஒழிந்து போனது.

இன்று மடாதிபதிகள் பல்லக்குக்கு பதில் கார்களை பயன்படுத்த தொடங்கிவிட்டனர். இன்றுள்ள சாலைகள் அன்று போல மண்சாலைகளல்ல. அவ்வளவும் தார் ரோடுகள். இவற்றில் செருப் பில்லாமல் எவர் நடந்தாலும் கால்கள் பொத்துப்போய்விடும். இதனால் இன்று பிச்சை எடுப்பவர்கள் கூட செருப்பு போட்டுக் கொண்டுதான் பிச்சை எடுக்கின்றனர். இதைத்தான் கால மாற்றம் என்கிறோம். இந்த மாற்றங்களை ஏற்காவிட்டால் யாராக இருந்தாலும் பின்தங்கிவிடும்

https://t.me/tamilbooksworld

ஒருநிலை வந்துவிடும். அடுத்து ஜன சமூகத்துக்காகவே மடங்கள் உள்ளன.

எனவே சமூக மாற்றங்களை அனுசரித்தே பக்தியையும் வளர்க்க வேண்டியுள்ளது. எனவே இம்மட்டில் மடாதிபதிகள் காரில் பயணிப்பதை செருப்பு அணிவதை ஒரு குறையாக, தவறாக கருதினால் அதைவிட பாவம் இருக்கமுடியாது.

பெரியவரோ தான் ஜீவனுடன் இருந்த நாள்வரை காரில் கூட ஏறத்தயங்கினார். ஏன் என்றால், அது தன் சன்னியாச கடமைக்கு எதிரானது என்பதால்... அதே சமயம் மடாதிபதியாகவும் இருப்பதால், தன் வழியில் அடுத்தடுத்து பட்டத்துக்கு வந்த ஸ்ரீஜெயந்திரரையும் ஸ்ரீவிஜேயேந்திரரையும் அவர் அம்மட்டில் கட்டுப்பாடுகளை தளர்த்திக்கொண்டு செயல்பட அனுமதித்தார்.

இந்தத் தொடரை வாசித்துவருபவர்களுக்கு பெரியவர் வரையில் சிறு கேள்விகளுக்குக்கூட இடமிருக்கக்கூடாது என்றே இத்தனை விளக்கங்கள்.
|

அன்று பல்லக்கில் வசந்த கிருஷ்ணா புரத்துக்குள் நுழைந்த பெரியவரைப் பார்த்து ஊரே மகிழ்ந்தது.

அதே சமயம், ‘குடிக்க தண்ணர் கூட இல்லாத ஊருக்குள் எதற்கு வந்தார்?’ என்றும் தங்களுக்குள் கேட்டுக்கொண்டனர். ஊர்ப் பெரியவர் ஒருவர் முன்னால் வந்து வணங்கி, வரவேற்றதோடு தண்ணீர் இல்லாத வறட்சியை சொல்லி வருத்தப்பட்டார்.

அன்று இரவு பெரியவர் அந்த ஊரில் தங்க அவரிடம் அனுமதி கேட்டார். அவரோ, "தாராளமாக தங்குங்கள்... ஆனால் விடியும் போது குளிக்க விரும்பினால், அதற்குத்தான் வழியில்லை. இருந்தாலும் நாங்கள் தண்ணீர் கிடைக்கும் இடங்களுக்குச் சென்று தண்ணீர் சுமந்துவந்து தங்கள் தேவைக்கு உதவ முயற்சிக்கிறோம்" என்றார்.

அதற்குப் பெரியவர், ‘சொன்னதே போதும்!" என்றார்.

இரவு ஊர் எல்லையில் பெரிய மரத்தடியில் மடம் தங்கியது. தற்காலிகமாக ஒரு கூடாரம் போடப்பட்டு தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டு, அன்றைய பூஜை அங்கே நடந்து, கிராம மக்களுக்கு மடந்து சார்பாக பிரசாத விநியோகமும் நடந்து முடிந்தது.

https://t.me/tamilbooksworld

நள்ளிரவு வரை பெரியவர் விழித்து ஜபித்தபடி இருக்க... மெல்ல வானில் மேகங்கள் திரள ஆரம்பித்தன ஜில்லென்ற காற்றோடு மழையும் பெய்யத் தொடங்கியது. நிறுத்தி நிதானமாக பெய்யத் தொடங்கிய மழை நான்கு மணிநேரம் பெய்த பிறகே விட்டது. விடியவும் பார்த்தால் எங்கு பார்த்தாலும் தண்ணீர்!

முதல் நாள் தொலை தூரத்தில் இருந்து தண்ணீர் பிடித்து வந்து தருவதாக சொன்ன ஊர் பெரியவர் வீட்டுக்குள்ளும் மழை நீர் புகுந்து விட்டது.

பெரியவர் எதற்காக வழியில் அந்த கிராமத்துக்கு வந்தார் என்பது எல்லாருக்கும் புரிந்து விட்டது. ஊர் மக்கள் சிலிர்த்துப் போயினர்.

பெரியவரும் கிட்டத்தட்ட நிரம்பி விட்ட ஊருணியில் குளித்து அனுஷ்டானங்களை முடித்தவராக அங்கிருந்து புறப்பட்டார். புறப்படும் முன், "ஊர் தெய்வத்தை மறவாது பொங்கலிட்டு வணங்குங்கள். அதை ஒற்றுமையாக ஊரே ஒன்றுப்பட்டு செய்ய வேண்டும். பிரிவினையோ? நான்தான் பெரியவன் என்கிற எண்ணமோ யாருக்கும் கூடாது. ஊர் தெய்வம் குளிர்ச்சியாக இருந்தால், மழை பெய்ய சில சமயம் தாமதமானாலும் பெய்யும் சமயம் நன்றாக பெய்து பயிர்களும் உயிர்களும் செழிக்கும்!" என்றார்.

எத்தனை உன்னதமான கருத்து!

## 34

பெரியவரின் யாத்தரையில் நடந்த இன்னொரு அற்புத சம்பவம் இது. யானை, குதிரை என்று மடத்து பரிவாரத்தோடு பெரியவர் பல்லக்கில் யாத்திரை செய்து கொண்டிருந்த ஒரு தருணம்.

நத்தம் எனும் ஊருக்குப் போக வேண்டும். வழியில் மாயனூர் அரிச்சந்திரபுரம், திட்டச்சேரி என்ற கிராமங்கள்...

இதில் திட்டச்சேரியை கடந்து செல்கையில் பாதை இரண்டாக பிரிந்து சென்றது. அப்படி பிரியும் இடத்தில் ஒரு பிள்ளையார் கோயில்.

அந்தக் கோயிலில் அவர் பல்லக்கு அடைந்த நேரத்தில் தன் கையில் உள்ள தண்டக்குச்சியால் பெரியவர் தட்டி ஒலி எழுப்பி, நத்தம் நோக்கி போகாமல் இன்னொரு பாதையான மண்மங்கலம் என்னும் கிராமம் நோக்கிச் செல்லச் சொன்னார்.

https://t.me/tamilbooksworld

அப்போது என்ன வேளை தெரியுமா? அதிகாலை 5 மணி!

மடத்து சீடர்களும் அவர் உத்தரவுப்படி மண்மங்கலம் நோக்கி நடந்தனர்.

வேத கோஷம் முழங்க, பெரியவர் பல்லக்கு தங்கள் ஊர் நோக்கி வருவதை அதிகாலை கண்விழித்து வாசலில் கோலம் போட்டபடி இருந்த ஊர்ப் பெண்கள் பார்த்து வியந்து நின்றனர்!

ஊர்ப் பெரியவர்களும் திரண்டு ஓடோடி வந்து வரவேற்றனர். பூரண கும்பத்தோடு வரவேற்க முடியவில்லையே என்று வருத்தப்படவும் செய்தனர்.

பெரியவரும் ஒருபெரிய திண்ணையாக பார்த்து அமர்ந்தார். எல்லாரும் வரிசையில் நின்று வணங்கி ஆசிகள் பெறத் தொடங்கினர். சிலர் பெரியவரிடம் அந்தப் பரமேஸ்வரனிடம் பேசுவது போல நினைத்து மனம் விட்டு பேசினர். ‘நல்ல மழை பொழிய வேண்டும். எல்லாரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

சண்டை சச்சரவுகளே கூடாது’ இப்படி பல வித கோரிக்கைகள் வைத்தனர்.

அப்போது பெரியவர் அங்குள்ள ஒரு முதியவரை அழைத்து, "இந்த ஊரில் சிவன்கோயில் எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.

அந்த முதியவரோ திருதிருவென விழித்தார்.

ஏன் என்றால், அப்படி ஒரு கோயிலே அந்த ஊரில் இல்லை. இல்லாத ஒன்றைப் பற்றி பெரியவர் கேட்கிறார் என்றாலே, ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது என்றுதானே பொருள்?

அப்போது இன்னொருவர்.அதற்குப்பதில் சொல்ல முன்வந்தார். "சாமி, எங்க ஊர்ல சிவன் கோயில் இருந்ததா சொல்வாங்க. ஆனா, இப்ப இல்லை. ஒரு பெருமாள் கோயில் தாங்க இருக்கு" என்றார்.

"பெருமாள் கோயில் இருந்தால், நேர் எதிர் திசையில் சிவன் கோயிலும் இருந்தாகணுமே" என்றார் பெரியவர்.

"இருந்தது... ஆனால், காலத்தால் அது தூர்ந்து போய் மண்ணோடு மண்ணாகிவிட்டது. கோயிலுக்கென்று நிலங்களும் இருந்தன. அதில் வருவாயும் வந்தது. காலத்தால் எல்லாம் மாறி அழிந்தே போய்விட்டது."

இப்படி அந்த சிவன் கோயில் குறித்து பேசிக்கொண்டிருக்கும் போதே,

https://t.me/tamilbooksworld

ஒரு இஸ்லாமிய தம்பதியினர் பெரியவரைக் காண வந்தனர். அவர்கள் பெயர் லத்தீப் பாய், மெக்ருன்னிசா என்று தெரியவந்தது. அவர்களிடம் ஒரு மெல்லிய பதற்றம்... அவர்களிடம், "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

"சாமி, எங்களுக்கு இந்த ஊர்ல நிலபுலன்கள் இருக்கு. அதுல விவசாயம் செய்து பிழைப்பு நடத்துகிறேன் நான். எங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து மனவளர்ச்சி இல்லாம இருந்து பத்து வருஷம் முந்தி செத்தும்போச்சு. அல்லா எங்களை இப்படி சோதிக்கிறானேன்னு நாங்க ரொம்ப வருத்தப்பட்டோம். இந்த நிலையில் எங்களுக்கு சில உண்மைகள் தெரியவந்தது. நான் இப்ப விவசாயம் செய்ற எங்க நிலம் ஒரு காலத்துல சிவன்கோயில் சொத்தா இருந்துருக்கு. காலப்போக்குல கோயில் அழியவும் இடத்தை பலர் ஆக்கிரமிச்சிட்டாங்க. அது பல கை மாறி கடைசியில என் முன்னோர் கைக்கு வந்து சேர்ந்தது. அதுலதான் நான் விவசாயம் செய்துவரேன். நேற்று மாலை அங்க நான் மண்வெட்டியால உரக்குழி போடப்போனப்ப குழியை வெட்டும்போது ‘ணங்கு’னு சப்தம் கேட்டது. மண்வெட்டி உண்டாக்குன சப்தம் அது.

என்னன்னு ஆழமாக தோண்டுணப்ப, அங்க ஒரு சிவலிங்கம் இருந்துச்சு. எனக்கு ஒரே திகைப்பா போயிடுச்சு. அப்பத்தான் அது சிவன்கோயில் இருந்த இடம்ங்கிற எண்ணமும் எனக்கு ஏற்பட்டது. என்ன செய்யறதுன்னு தெரியல. காலைல கண்விழிச்சு பிறகு அது சம்பந்தமா ஒரு முடிவுக்கு வரலாம்னு நாங்க நினைச்சப்போ நீங்க ஊருக்கு வந்திருக்கிற தகவல் தெரிஞ்சது" என்று அவர் சொல்லி முடிக்கவும்...

எல்லாரிடமும் ஒரேதிகைப்பு!

பெரியவர் சிவன் கோயில் பற்றி எதற்காக கேட்டார் என்பதும், அப்போது புரிந்து போயிற்று. அந்த இஸ்லாமிய அன்பரே தொடர்ந்து பேசினார்.

"சாமி, அந்த இடத்தை நான் அப்படியே இலவசமாக ஊருக்கு தந்துடுறேன். எப்ப யாரால தப்பு நடந்திருந்தாலும் அது இப்ப சரியானாபோதும்" என்று அவர் கூறவும், அனைவரிடம் மேலும் திகைப்பு!

பெரியவரும் அவரை மனம் குளிர ஆசீர்வதித்தவராக, "நீங்கள் உங்கள் மார்க்க கடமையை நிறைவேற்றி விட்டீர்களா?" என்று கேட்டார். அதாவது புனித யாத்திரையான ஹஜ் யாத்திரையைத் தான் ‘மார்க்க கடமை’ என்பார்கள்.

https://t.me/tamilbooksworld

அவரோ, இல்லை என்றதோடு அதற்கான வசதி தற்போது எனக்கில்லை என்றார்.

உடனே, "அவர் ஹஜ் யாத்திரை செல்ல அவருக்கு ஊர் உதவ வேண்டும். ஏனென்றால் அவர் ஊருக்கு பெரிய உதவி செய்திருக்கிறார்" என்று பெரியவர் கூறவும், எல்லாரும் வேகமாக முன் வந்தனர்.

இந்த விஷயத்தில் ஸ்ரீமடமும் அவருக்கு உதவும் என்றார். அவர் ஹஜ் யாத்திரை சென்று நலமாக திரும்பி வர மீண்டும் வாழ்த்தினார்.

பின்னர், வயலுக்குச் சென்று அந்த சிவலிங்கத்தைப் பார்த்து, வணங்கி விட்டு புறப்பட்டார்.

நத்தம் நோக்கி சென்றபடி இருந்தவர், மண்மங்கலம் நோக்கி திரும்பியதன் விளைவாக ஒரு சிவாலயம் உருவாகப் போவதோடு, மதம் கடந்த மனித நேயமும் இறைநம்பிக்கையும் உறுதிப்பட்டதை என்னவென்று சொல்வது?"

## 35

பெரியவரின் சன்னியாச ஞானம் பிரமிப்பூட்டுவதாகும். 1930 களில் அவர் ஒரு வாலிப சன்னியாசியாக இருந்தபோது, திருவண்ணாமலை பக்கமாய் செல்வது என்றால் பெரியவருக்கு ஒரு தனிப்பிரியம்.

காரணம் திருவண்ணாமலை சன்னியாச நாட்டமுள்ள சித்தர்கள் மற்றும் முனிவர்கள் பலர் நடமாடித் திரிந்த ஒரு இடமாகும். இது பஞ்ச பூத தலங்களில் அக்னிதலமாக கருதப்படுகிறது. திருவண்ணாமலை குறித்து சூட்சுமமான ஒரு கருத்தும் உண்டு. இந்தப் பூமி, இறைவனால் உருவாக்கப்பட்ட போது, முதலில் ஒரு தீப்பிழம்பாக, சூரியனில் இருந்து தெறித்து விழுந்து, வான்வெளியில் அது சுழலும் இடத்தில் நிலை நிறுத்தப்பட்டது. பின் குளிர்ந்து நீர் உருவாகி, உயிரினங்களும் உருவாகி, பூமி உயிர்களின் வாழும் களமாக ஆனது. இந்நிலையில் தனக்குத் தானே சுற்றிக்கொள்ளுதல். சூரியனைச் சுற்றிவருதல் போன்ற பூகோள செயல்பாடுகளால் இரவு பகல் ஏற்பட்டதோடு, பருவ காலங்களும் உருவாகின.

சூரியனில் இருந்து தெறித்து விழுந்தபோது நிலவிய வெப்பம் குளிர்ந்தே இதெல்லாம் நடந்தது. அவ்வாறு வெப்பம் குளிர்ந்து அவிந்து

https://t.me/tamilbooksworld

அடங்கியதில் இறுதியாக வெப்பம் குளிர்ந்த இடமாய் திருவண்ணாமலை அமைந்தது.

இதனால் அக்னியின் குணப்பாடு இப்போதும் அங்கே உள்ளது. அந்தக் குணம் ஞான விழிப்பைத் தரும் சக்தியாகவும் உள்ளதால், அங்கே இறைவனின் அக்னிக்கான சாந்தித்யத்தை மையப்படுத்தி அருணாசலமாக ஈசனை நிலைப்படுத்தினர். இதனால் வாழ்ந்தது போதும் என்று சன்னியாசம் மேற்கொண்டு வருபவர்களுக்கு இம்மண்ணில் புலனடக்கம் ஏற்பட்டது.

அவர்களின் மிச்சம் மீதமுள்ள கர்மங்களும் இங்கு மேற்கொள்ளும் தவத்தால் வேகமாகத் தீர்ந்து அவர்கள் எல்லாரும் திருவண்ணாமலை தலத்தில் தங்கள் ஸ்தூல உடம்போடு ஜீவசமாதி கொண்டனர்.

அவர்களின் ஆன்மா இரு கூறாகப் பிரிந்து, ஒன்று கைலாயம் சென்றிட, மற்றது அவர்கள் விரும்பும் இடம் சென்று சூட்சும ரூபத்தில் கோயில்கொள்ளத் தொடங்கின. குறிப்பாக திருவண்ணாமலையில் அவர்களின் சூட்சும ரூபம் கர்மம் காரணமாக பிறப்பெடுத்தவர்கள் வணங்கி வழிபடுவது போலவே வணங்கிவருவதாக தெரிகிறது.

இவை எல்லாமே ஞானத்தால் மட்டுமே உணர முடிந்த ரகசியங்கள் ஆகும். நமக்கிருக்கும் மூளையைக்கொண்டு நாம் சார்ந்து வாழும் இந்த உலகம் நமக்கு தரும் சந்தர்ப்பங்களைக் கொண்டு இதை நாம் உணர்வதும், உணராததும் நடக்கிறது.

இவை எல்லாமே கற்பனை அல்லது நம்பிக்கை போன்ற மாயை என்று கூறி இந்த கருத்துக்களை புறக்கணிப்பவர்கள் பலருண்டு.

திருவண்ணாமலைக்கு யாத்திரைக்கு வந்த இடத்தில் கிரிவலம் மேற்கொள்ளும் போது, பலருக்கு பல அமானுஷ்ய அனுபவங்கள் நேரிட்டுள்ளன.

பகவான் ரமணர் தென்பகுதியில் அருப்புக்கோட்டைக்கு அருகிலுள்ள திருச்சுழி என்கிற ஊரில் பிறந்திருக்கும், மதுரையில் நடமாடியும் கூட அவர் தன் தவத்துக்கு திருவண்ணாமலையே ஏற்ற இடம் என்று தேர்வு செய்து திருவண்ணாமலைக்கு வந்து, அங்கே காலத்தால் ஓர் ஆசிரமம் உருவாகவும் காரணமானார்.

யோகிராம் சூரத்குமார் ஒரு வட நாட்டவராக இருந்தும்,

https://t.me/tamilbooksworld

திருவண்ணாமலையே தனக்கான மனை அமையும் இடம் என்று தேர்வு செய்து வாழ்ந்தார்.

திருவண்ணாமலையின் பவுர்ணமி கிரிவலம் மிகுந்த அருள் நலம் தரவல்லது. இதன் பின்புலத்தில் நுட்பமான விஞ்ஞான காரணங்களும் உள்ளன. பவுர்ணமி நாளில் பூமியின் ஈர்ப்பு விசையில் மின்காந்த அலைகள் அதிகரிக்கின்றன. அவை மலைகளில் பட்டுத்தெறிக்கும் போது, நிறைய மாற்றங்களை சந்திக்கின்றன. குறிப்பாக கூம்பு வடிவ மலைகளின் மேல் பொழியும் நிலாக்கதிரானது தட்டையான நிலப்பரப்பின் மேல் விழுந்து பரவுவதற்கும் மலைச்சரிவின் மேல் விழுந்து பாவுவதற்கும் நிறைய வேற்றுமை உள்ளது. மலை அடிவாரங்கள் பவுர்ணமி நாளில் பலம் கொண்ட வெளியாக திகழ்கின்றன. அப்போது ஏகசிந்தையோடு புரியும் தவம் தியானம் யோகம் போன்றவை உடம்பு, மனது என இரண்டுக்கும் ஆரோக்கியம் தருகின்றன. எனவேதான் கிரிவலம் வரும் சடங்கு உருவாக்கப்பட்டது.

இன்று மக்கள் கோடிக்கணக்கில் கிரிவலம் வரவும் செய்கிறார்கள். திருவண்ணாமலை கிரிவலம் என்பது சிலர் வரையில் ஒருத்தரைப்பார்த்து ஒருத்தர் செயல்படுவது போல இருக்கிறது. அதில் புத்தி பூர்வம் இருக்காது. அடுத்து, கிரிவலம் வந்தால் கடன் தொல்லை நீங்கும், கல்யாணமாகும், நல்ல வேலை கிடைக்கும், புது வீடு கட்ட முடியும் என்று வாழ்க்கை தேவைகளை முன் வைத்து பக்தியைப் பின் வைத்து பலர் யாத்திரை மேற்கொள்கின்றனர். இதை ஒரு தவறாகக் கூற முடியாது. அதேவேளை ஞானியர் கோணத்தில் இது ஒரு வேடிக்கையான செயல்பாடாகும்.

இந்தப் பிறவி என்னும் சிறையில் இருந்து விடுதலை தர முடிந்த இறைவனிடம் அற்பமாக இவைகளையா கேட்பது என்பது அவர்கள் கோணம்.

எப்படியோ திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தால் போதும், கடவுள் சிந்தையே இல்லாதவன் கூட திருவண்ணாமலையில் சிலகாலம் வாழ்ந்தால் போதும், மெள்ள மாற்றத்துக்கு ஆளாகி ஞானிகளாகத் தொடங்கிவிடுவார்கள்.

## 36

ர்வத மலையை கிரிவலம் வந்து வணங்க முற்பட்ட பெரியவர். தன்னைப் போலவே வலம் வந்து வணங்கும் ஆயிரக்கணக்கான கிராமத்து

https://t.me/tamilbooksworld

ஜனங்களை ஒரு வினாடி எண்ணிப் பார்த்தார்.

ப

திருவண்ணாமலை கிரிவலம் கூட மிக அதிகபட்சம் இரண்டு மணிநேரத்தில் முடிந்துவிடும். ஆனால், இந்த கிரிவலம் ஒருநாள் பொழுதையே கூட எடுத்துக்கொண்டுவிடும். நடக்கிறவர்களுக்கும் மிகவும் பசியும் தாகமும் ஏற்படும்.

குறிப்பாக உடம்பின் எல்லா பாகங்களுமே ஒன்று கூடி ஒரே சமயத்தில் அதிகபட்சமாக செயலாற்றுவது என்பது ஒரு மனிதன் வேகமாக நடக்கும் போதுதான். அதனால்தான் டாக்டர்கள் இன்று நடைபயிற்சியை உடல் ஆரோக்கியத்துக்கான ஒரு பெரிய விஷயமாக கருதி, அதை எல்லாருக்கும் சிபாரிசு செய்கின்றனர். அதற்காக ஆண்டு முழுக்க நடக்காமல், ஆண்டுக்கு ஒருமுறை இதுபோல் பாத யாத்திரை மேற்கொள்வதால் மட்டும் ஆரோக் கியம் வந்துவிடாது. ஆனால், உடலை வருத்திக்கொண்டு நாம் மேற்கொள்ளும் பாதயாத்திரை என்பது உண்மையில் ஒரு மிகச்சிறந்த ஆன்ம பிரயத்தனம்! அது ஒரு வகை பஞ்ச பூத வழிபாடு.

மனம், வாக்கு, காயம் எனும் மூன்றால்தான் ஒரு மனிதன் நன்மையோ தீமையோ செய்கிறான். எதைக்கொண்டு தீமை செய்தோமோ அதைக்கொண்டே பரிகாரம் தேடும் ஒரு செயல்தான் பாதயாத்திரை!

பாதயாத்திரை என்கிற ஒன்றை உயர்ந்த நோக்கங்கள் இல்லாமல் ஒருவர் செய்யவே முடியாது. அதிலும் இந்த நாளில், ஒரு நூறு அடி தூரத்தில் உள்ள இடத்திற்கு கூட நடக்காமல் டூவிலரில் செல்லும் பழக்கம் கொண்டுள்ள நாம் பல மைல் தூரத்தை ஒரு காரணமும் இல்லாமலோ, இல்லை சராசரி காரணங்களுக்காகவோ நிச்சயம் ஆட்படுத்தமாட்டோம். நமக்கு ஒரு பொதுவான உயர்ந்த நோக்கும், காரணமும் கட்டாயம் தேவை. அம்மட்டில் இறைவன் குறித்து நோக்கம் என்பதும், அருளை வேண்டிடும் காரணமும் மிகவும் பெரியது.

ஒருவரிடம் நிறையவே செல்வம் இருக்கும். ஆனால் நிம்மதி இருக்காது. செல்வம் இருப்பதற்கு அவரது முன்னோர்கள் பணக்காரர்களாக இருந்தும், ஏன் அவரே கஷ்டப்பட்டு சம்பாதித்ததாகவும் கூட இருக்கலாம். ஆனால் நிம்மதியை மட்டும் ஒருவர் நல்வினைகள் புரியாமல் சம்பாதிக்கவே முடியாது. நல்வினைகளின் வடிவம்தான் அருள்.

எனவே, அருளுக்காக ஒருவர் எதைச் செய்தாலும் அது நிகரில்லாத செயலாகிவிடும். அதிலும் உடம்பை வருத்தி மேற்கொள்ளும்

https://t.me/tamilbooksworld

பாதயாத்திரை மிக உன்னதமானது. இதுவும் ஒருவித தவமே!

இப்படி தவம் புரிவதும் உன்னதம். தவம் புரிபவர்களுக்கு உதவிசெய்வது அதைவிட உன்னதம்.

பெரியவர்தான் பாதயாத்திரை புரிவதோடு யாத்திரை புரிபவர்களுக்கெல்லாம் மடம் சார்பில் அன்னம் அளிக்க விரும்பினார். ஆயிரக்கணக்கில் வந்தால் என்ன செய்வது? அவ்வளவு பேருக்கும் அளிக்க முடியுமா? ஒருவருக்கு அளித்து ஒருவருக்கு அளிக்காவிட்டால் அது சங்கடத்தை தரும். இதன் பின்னே நிறையவே சிக்கல்களும் இருந்தன. இருந்தாலும் பெரியவர் எல்லாருக்கும் உணவளிக்கும்படி கூறிவிட்டார்.

மடத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் கடமையைச் செய்யத் தொடங்கினர். கைவசம் உள்ள அரிசி, பருப்பு, காய்கறிகளை கொண்டு பெருமளவில் அன்னமும் தயாராகிவிட்டது. இந்த அன்னத்தை சாப்பிட குறைவான கூட்டம் வந்தாலும் அதுவும் சிக்கலே. மீதமுள்ளது விரயக் கணக்காகிவிடும்.

ஆனால், ஓர் அற்புதம் அந்த முறை நடந்தது. யாத்திரை புரிபவர்கள் வரவர இலைபோட்டு சாதம் போட்டபடியே இருந்தனர். இறுதியாக சிலருக்கே இருந்தது. அதிலும் இறுதியாக ஒருவர் சாப்பிடும் அளவு இருக்க, அதற்கு ஏற்ப ஒரே ஒருவர் மட்டும் சாப்பிட்டுச் செல்ல அதன்பின் சாப்பிடுவதற்கு ஒருவரும் வரவில்லை.

அதாவது மிலிட்டரியில்தான் நூல்பிடித்தது போல கணக்கிட்டு செயல்படுவார்கள். அங்கு கூட சாப்பாடு விஷயத்தில் கனகச்சிதத்துக்கு இடம் கிடையாது. ஆனால், பெரியவர் அன்னமிட்ட சமயம் கனகச்சிதம் அங்கே அமைந்தது. இதை பெரியவர் உணராமல் இருந்திருந்தால் இந்த விருந்துக்கே சம்மதிருக்கமாட்டார். இம்மட்டில் பெரியவரின் ஞானதிருஷ்டியே இதற்கு காரணம். ஆனால், இதனால் வரும் வியப்பெல்லாம் நமக்கு மட்டும்தான். பெரியவர் இது குறித்தெல்லாம் வியப்பதோ, பேசுவதோ கிடையவே கிடையாது.

இதே திருவண்ணாமலையில் இன்னொரு சம்பவம். துல்லியமான கால அளவு தெரியவில்லை. திருவண்ணாமலைக்கு அருகில் ஒரு கிராமம்! அங்கே பெரியவர் தங்கியிருந்து பூஜித்த சமயம், அவர் கமண்டல நீரை ஒரு நாய் வந்து முகர்ந்து பார்த்து குடிக்க முனைந்தது. அதை அவரைச்சுற்றி உள்ளவர்கள் கல்லால் அடித்த துரத்த முனைந்தனர்.

https://t.me/tamilbooksworld

பெரியவர் அதைத் தடுத்ததோடு தன் சீடர்களை அழைத்து ஊரில் உள்ள வீடுகளுக்குச் சென்று வீட்டில் உண்ணும்படியாக உள்ள பலகாரம், பழங்கள் என்று சகலத்தையும் பிட்சையாக பெற்று வரச் சொன்னார்.

பின் அதை பொதுவாக ஓர் இடத்தில் வைத்து ஒரு பாத்திரம் நிறைய நீரையும் வைத்து பிரார்த்தித்துக் கொள்ளவும், அந்த கிராமத்தில் திரியும் அவ்வளவு நாய்களும் வந்து அந்த பலகாரத்தை உண்டு, நீர் அருந்தி விட்டுச்சென்றன. அதை கண்குளிர புன்னகையோடு பார்த்தவர், தன் சீடர்களைப் பார்த்து கூறியது இதைதான்.

"நீங்கள் என் ஆசார பங்கத்தை பார்த்தீர்கள். நான் அதன் ஆகார பங்கத்தை பார்த்தேன். இப்போது இரண்டும் சரியாகிவிட்டது" என்றார்.

இதுதான் பெரியவரின் அணுகுமுறை.

## 37

ஒருமுறை பெரியவர் மதுரைக்கு விஜயம் செய்த சமயத்தில், வடக்கு மாசி வீதியில் உள்ள ஒரு சத்திரத்தில் தங்கினார். மதுரைக்கு வரும் சமயமெல்லாம் அவர் மீனாட்சி அம்மனை தரிசனம் செய்யாமல் போகமாட்டார்.

சக்தி தேவிதான் காஞ்சியில் காமாட்சியாக, மதுரையில் மீனாட்சியாக, காசியில் விசாலாட்சியாக சேவை தருகிறாள். இந்தப் பெயர்கள் மாற்றத்திற்கு ஏற்ப அவளது அருளும் விதத்திலும் நிறையவே மாறுதல்கள் உண்டு.

மீனாட்சியம்மையை உற்று கவனித்தால் ஒரு பேருண்மை புலனாகும். எல்லா தெய்வச்சிலை ரூபங்களும் தங்கள் கைகளை அருளும் விதமாக வைத்திருக்கும். ஆனால் மீனாட்சி மட்டும் கையில் கிளியைப் பிடித்தபடி நிற்பாள்.

கிளி வேதத்தின் ஒருவடிவம். அவள் தன் கைகளில் வேதத்தையே தாங்கிக்கொண்டிருக்கிறாள். இதனால் அவள் வேத வித்தகர்களுக்கு எல்லாம் குருவாகவும் அவர்களுக்கு ஞானம் தருபவர்களாகவும் விளங்குகிறாள். இவள் அருள் புரிய கைகள்தான் வேண்டும் என்றில்லை. இவள் கண்களாலேயே அருள் செய்து விடுபவள். அதனாலேயே மீனை உதாரணமாகக் கொண்டு மீன் போன்ற கண்களை (அட்சி) உடையவள் எனும் பொருளில் இவளை மீனாட்சி, கயற்கண்ணி என்றெல்லாம்

https://t.me/tamilbooksworld

அழைக்கிறோம்.

உயிர்களில் மீன் சிறப்பானது. உலகத்தின் மிகப்பெரிய உயிரினம் மீன்தான்! எண்ணிக்கையிலும் சரி, பெரிய வடிவிலும் சரி, மிகச்சிறியவடிவிலும் சரி, மீனே உலகின் பெரும் உயிரினமாகும். இது எப்போதும் விழித்திருப்பது...

தன் பார்வையாலேயே தன் குஞ்சுகளை பராமரிக்கத்தான். இரு விழிகளால் நாமெல்லாம் ஒன்றையே பார்க்க முடியும். இது இரு புறமும் தனித்தனியே பார்க்க வல்லது. இரண்டையும் சேர்த்தும் பார்க்கவல்லது. இதற்கென குறிப்பிட்ட இடம் கிடையாது.

ஒர் ஆற்று மீன் ஆற்றின் ஓட்டத்தில் கடலில் கலந்து அந்த கடலிலும் எது எங்கெங்கோ சென்று விடக்கூடியது. இடம், திசை என்ற கட்டுப்பாடும் கிடையாது.

எப்படி மீன் தன் குஞ்சுகளை பார்வையாலேயே பராமரிக்கிறதோ அப்படியே மீனாட்சியும் தன் பக்தர்களை பார்வையாலேயே ரட்சித்து விடுகிறாள்.

இவளுக்கு மாதங்கி என்றும் பெயருண்டு. பாமரர்கள் அந்த நாளில் இவளை அங்கச்சி என்றும் அழைத்துள்ளனர். இவள் மதுரையை ஆறு மாதகாலம் ஆட்சி செய்பவள். மறு ஆறுமாத காலத்தையே சிவ பெருமான் ஆட்சி செய்கிறார்.

மண்ணில் கடவுள் ஆட்சி செய்வது என்பது மதுரைக்கு மட்டுமே கிடைத்த அதிசயப் பெருமை. இப்படிப்பட்ட மதுரையில் வாழ்ந்திட முக்தி கிடைக்கும்.

காசியில் இறந்தால் முக்தி, காஞ்சியில் வணங்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி, திருவாரூரில் பிறந்திட முக்தி என்று முக்திக்குரிய தலங்களை குறிப்பிடும்போது, மதுரையில் வசிப்பதும் வாழ்வதும் முக்தி என்பார்கள். அப்படி வாழும் போது அவள் ஆட்சியில் வாழ்பவர்களாக நாம் ஆகிறோம் என்பதுதான் நுட்பம்.

இதனால் மதுரையில் வசிப்பவர்கள் எக்காரணம் கொண்டும் மதுரையை விட்டு செல்ல விரும்பமாட்டார்கள். இதுவே காலத்தாலே மதுரையைச் சுற்றிய கழுதை கூட மதுரையை விட்டு போகாது என்று சொல்லுமளவு ஆகிப்போனது.

https://t.me/tamilbooksworld

அடுத்து சிவபெருமானைப் பற்றி குறிப்பிடும்போது, 'தென்னாட்டுடைய சிவனே போற்றி' என்பார்கள். இது மேலோட்டமாக பார்க்க சற்று முரணாக தோன்றும். ஆனால் ஆழ்ந்து நோக்கினால் உண்மை புரியும். அந்த ஈசன், பெருமாள் போல அவதாரம் எடுத்து வந்து பக்தர்களை காப்பவனல்ல. அவதாரம் என்றால் அது பெருமாளுக்கு மட்டும் உரியது.

ஆயினும் ஈசனும் பூமிக்கு வந்து பல திருவிளையாடல்கள் புரிந்துள்ளான். அப்படி அவன் இந்த பூமியில் கால்பதித்து நடமாடியது ஒன்று மதுரையில், அடுத்து திருவாரூரில்! அதிலும் மதுரையில் ஒரு முறைக்கு பலமுறை தோன்றி மனிதனாக நடமாடித்திரிந்து காலாகாலத்துக்கும் நாம் உணர வேண்டிய பல உண்மைகளை அவன் நமக்கு உணர்த்தியுள்ளான்.

அதனாலேயே தென்னாட்டுடைய சிவனே போற்றி என்றார்கள்.

இத்தனை சிறப்பு வேறு எந்த நகரத்துக்கும் கிடையாது. அப்படிப்பட்ட மதுரைக்கு எப்போது பெரியவர் வந்தாலும் மீனாட்சியம்மை ஆலயத்துக்கு போகாமல் இருப்பாரா என்ன?

பெரியவர் மீனாட்சியை வணங்கியதோடு பொற்றாமரைக் குளத்தில் குளித்து அங்கே ஜபமும் செய்தார். இங்கேதான் சிவபெருமானும் நக்கீரரும் சண்டைபோட்டு தமிழை வளர்த்தனர் என்றார்.

## 38

பெரியவரின் அளப்பரிய கருணை உணர்வுக்கும் அருளும் தன்மைக்கும் நாம் எவ்வளவோ உதாரணங்களை அவர் வாழ்வில் இருந்தே காட்ட முடியும். அவரது ஞான திருஷ்டியும் மிக சக்தி வாய்ந்தது.

இந்த ஞான திருஷ்டி என்கிற விஷயம் தவம் செய்பவர்களுக்கு மட்டுமே சாத்தியமான ஒன்றாகும். தவம் என்றால் பலரும் கண்களை மூடிக்கொண்டு அசையாமல் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு தியானிப்பதையே தவம் என்று எண்ணுகிறார்கள். ஆனால், இதைக் கடந்து அன்றாடம் நித்ய கர்மங்களை துளியும் பிசகின்றிச் செய்வது, ஒவ்வொரு நாளையும் மிகுந்த பயனோடு கழிப்பது என்பதே சிறந்த கர்ம தவமாகும்.

பெரியவர் அதிகாலை 3.30க்கு கெல்லாம் எழுந்து விடுவார். அதன்பின் மூலிகை வேர் கொண்டு பல்துலக்குவார்.

சமயத்தில் உப்பும் கரியும் கூட பயன்படுத்துவார். காலை கடனை கழித்து

https://t.me/tamilbooksworld

விட்டு, நீராடி முடித்து சந்தியாவந்தனம், சூரியநமஸ்காரம் என்று வழிபாடுகள் வரிசையாக ஆரம்பமாகும்.

அதன்பின் மடத்து வழிபாட்டுக்குரிய சந்திரமவுலீஸ்வர ஸ்படிக லிங்கத்துக்கு பூஜை தொடங்கும். பெரும்பாலும் காலை உணவு என்று எதையும் எடுத்துக்கொள்ளமாட்டார்.

சந்திரமவுலீஸ்வர பூஜைக்கு பிறகு பக்தர்கள் சந்திப்பும், பிரசாதம் வழங்குவதும் நிகழும். அதன்பின் மடத்தில் தினந்தோறும் பிட்சையிடுதல் என்கிற ஒரு நடைமுறை உண்டு. ஒரு முழுமையான சன்னியாசி பக்தர்களிடம் பிட்சை பெற்றே உண்ண வேண்டும். இந்த பிட்சையையும் அன்றன்றுதான் பெற வேண்டும். நாளைய உணவுக்கு இன்று ஒருவர் தர முன்வந்தாலும் பெற்றுக்கொள்ளக்கூடாது.

ஒரு சன்னியாசிக்கு அன்றன்று வாழ்வதே வாழ்வு. அந்த வாழ்வில் உடம்பு சார்ந்த சுக போகங்களுக்கு இடம் தரவே கூடாது.

ஓலைப்பாயில்தான் படுக்கவேண்டும். தலைக்கு மணைப் பலகைதான் தலையணை. தன் காவி ஆடையையே போர்த்திக் கொள்ளவேண்டும். தங்கியிருக்கும் இடத்தில் பூட்டிக் கொள்ளும் விதமான அறையோ வசதிகளோ கூடாது.

ஓலைக்குடிசையில் தாராளமாக தங்கிக் கொள்ளலாம். சாணி மெழுகியதரைப்பரப்பு மிக ஏற்றது.

உண்ணும் உணவிலும் உப்பு, காரம், இனிப்பு இடம் பெறக் கூடாது. பழங்களைச் சாப்பிடலாம். அந்த இனிப்புக்கு மட்டும் அனுமதி உண்டு. மடாதிபதியாக பக்தர்கள் தரும் பிரசாதத்தை ருசித்து பார்க்கலாம். அதுவும் உபவாச காலத்தில் கிடையாது.

இந்த கடமைகளுக்குப் பிறகு தனித்து அமர்ந்து சன்னியாசிக்கான தவக்கடமையையும் செய்ய வேண்டும். இப்படி பெரியவரின் ஒருநாள் செயல்பாடு என்பது ஏராளமான செயல்களையும், கட்டுப்பாடுகளையும் கொண்டதாகும்.

பெரியவர் சமயங்களில் கடுமையான மவுன விரதங்கள் இருப்பார். அது சமயங்களில் வாரக்கணக்கில் செல்லும், சதுர்மாஸ்ய விரத காலத்திலும் அவ்வளவாக பேசமாட்டார். இதனால் அவர் உடலும் சரி, மனதும் சரி வைரம் பாய்ந்ததாக விளங்கியது.

https://t.me/tamilbooksworld

அவர் வரையில் தெய்வாம்சம் என்பது அவருக்கு ஒரு குடை போலவே விளங்கிவந்தது.

என்னதான் கட்டுப்பாட்டுடன் தவவாழ்வு வாழ்ந்தாலும் ஒரு தாய் தகப்பன் மூலமாக இந்த பூமிக்கு பிறப்பெடுத்து வந்திருப்பதால், உடல் சார்ந்த கர்மவினைப் பாடுகள் பல நேரங்களில் தலையெடுக்கவே செய்யும். அதாவது காய்ச்சல், குளிர், இருமல் என்று உடல் நலம் சமயங்களில் குன்றிப்போகும்.

அது போன்ற தருணங்களை பெரியவர் அலட்டிக்கொள்ளாமல் கடந்து விடுவார். அப்போதெல்லாம் கஷாயமும், சூரணமும்தான் அவர் மருந்து.

"ஐயா, உடம்பு இப்படிக் கொதிக்கிறதே..." என்று சீடர்கள் பதற்றப்பட்டால், "அது பாட்டுக்குகொதித்து விட்டு போகட்டுமே" என்பார்.

சொல்லப்போனால், "ஐயோ காய்ச்சல் வந்து விட்டதே?" என்று நினைக்கமாட்டார். அதை ரசிப்பார். இதுதான் உத்தம ஞானிகளின் நிலை.

இப்படி அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த ஒரு தருணத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. ஒரு சமயம், பெரியவருக்கு விஷ ஜுரம் ஏற்பட்டு அது கட்டுப்படுத்த முடியாதபடி அவரை வாட்டி வதைக்க தொடங்கிவிட்டது. இது போல் நமக்கு நடந்தால் நாம் ஆஸ்பத்திரிக்கு போய் படுக்கையில் அட்மிட் ஆகிவிடுவோம். அங்குள்ள டாக்டர்களும், நர்சுகளும் பார்த்துக்கொள்வார்கள்.

நெற்றியில் பத்துபோடுவது, கை, கால்களை பிடித்து விடுவது, உடம்பை சுத்தம் செய்வது என்று அவர்களே நம்மை முழுமையாக பார்த்துக்கொள்வார்கள். நம்மால்தான் அசையக்கூட முடியாதே...

நமக்கு நர்சுகள் பணிவிடை செய்வது போல பெரியவரை ஒரு பெண் தொட்டு பணிவிடை செய்ய சன்னியாச தர்மத்தில் இடமில்லை. ஒருபெண் என்று இல்லை அவர் சீடர்களே கூட அவரை தொட்டு சேவை செய்ய அனுமதியில்லை.

இதை தீண்டாமை என்று தவறாக முடிவு செய்துவிடக்கூடாது. முதலில் இது தூய்மை சார்ந்தது. அடுத்து, இது ஆசாரம் சார்ந்தது. ஒருவரை ஒருவர் தொட்டு விடுவதால் என்னவாகிவிடும்? அழுக்கு ஒட்டிக்கொள்ளுமா? என்றெல்லாம் இங்கே சராசரியாக சிந்தித்து பேசக்கூடாது. அழுக்குக்கூட தண்ணீரில் கழுவிட போய்விடும். சில எதிர்மறையான கதிர்கள்

https://t.me/tamilbooksworld

அவ்வளவு சுலபத்தில் உடம்பை விட்டு போகாது.

## 39

நம் உடம்புக்கு வெளியே நம்மால் பார்க்க முடியாத அளவில் வெப்ப அலைகளும், அதன் பிரதிபலிப்புகளும், ‘ஆரா’ எனும் வடிவில் உண்டு. இதை சக்தி வாய்ந்த கேமராவால் படம் பிடித்து பார்க்க முடியும்.

குறிப்பாக இறந்துவிட்ட பிணங்கள் அருகே செல்வது, பிணங்களை தொடுவது, மாதவிலக்கான பெண்களைத் தொடுவது, பல நாட்களாக குளிக்காதவர்களை தொடுவது, மதுமாமிசம் சாப்பிட்டவர்களை தொடுவது போன்ற தொடுதல்களில் எதிர்மறையான கதிர்கள் நம்மைத் தாக்கி நாம் தூய்மையாக்கி வைத்திருக்கும் நம் ஆராவில், சலனத்தை உருவாக்கும்.

மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளை நாம் செய்திருக்கா விட்டாலும், ஒரு கூட்டமான பஸ்சில், ரயிலில் பயணிக்கையில் நம்மையும் அறியாமல் இது போன்றவர்களை நாம் தொட்டு நமது ஆரா பாதிப்புக்கு உள்ளாகும்.

நம் மூலமாக நாம் தொடுபவர்க்கெல்லாமும் சலனம் ஏற்படும். இதனால் மன ஒருமை குறையும். குழப்பம் ஏற்படும். உடம்பில் உப்பு, புளி, காரம் போன்ற உணவுகளால் நமக்குள் உருவாகியிருக்கும் உணர்ச்சிகள் தூண்டப்படும். இறுதியில் அது கோபதாபத்தில் முடிந்துவிடும்.

இப்படி நம் உடம்பின் பின்புலத்தில் நுட்பமாக சிந்திக்க நிறைய விஷயங்கள் உள்ளன.

இதனாலேயே காலை, மாலை இருவேளை குளிப்பது, வெளியே சென்றுவிட்டு வீட்டுக்குள் நுழையும் போது கால்களை கழுவிக்கொள்வது வழக்கம். மற்றபடி நீ தாழ்ந்த ஜாதி, கருப்பாக இருக்கிறாய், குட்டையாக இருக்கிறாய், கோரமாக இருக்கிறாய் என்கிற மாதிரி காரணங்கள் கொண்டு ஒருவரை தீண்ட மறுப்பதும், விலக்குவதும்தான் தீண்டாமை. அது பாவமும் கூட.

பெரியவர் இடையறாத தவத்தால் பூஜையால் தன் உடம்பை ஒரு சக்தி கேந்திரமாக வைத்திருப்பவர். அவர் மேல் பட்டு விடாமல் இருப்பது என்பது நாம் அவருக்கு செய்யும் உதவியாகும். இங்கே சன்னியாசியான அவர் மேல் அவர் தந்தை கூட பட்டுவிடக்கூடாது என்பதை மனதில்

https://t.me/tamilbooksworld

வைத்தால் இது எத்தனை பெரிய தவம் என்பது புலனாகும்.

இப்படி ஒருவருக்கு கடுமையாக உடல் நலம் பாதிக்கும்போது அவரைத் தொடாமல் எப்படி அவருக்கு சேவை செய்ய முடியும்? இது போன்ற தருணங்களில் விதிவிலக்கு உண்டா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். பெரியவரை நாவிதர் மட்டுமே அவரது முடிகளை நீக்கும் விதமாக தீண்டலாம். அவ்வேளையில் நிறைய சாங்கியங்கள் உள்ளன. அதனால் அந்த தீண்டலின் இழப்பு சமனாகிவிடும்.

மற்றபடி வாழ்நாள் முழுக்க பெரியவர் போன்ற சன்னியாச தர்மத்தை பின்பற்றுபவர்கள் தனித்தே இருந்தாக வேண்டும். இவர்களுக்கு நெருப்பு சம்பந்தமும் கிடையாது.

இவர்கள் முக்தி அடைந்து விட்டால், உள்ளபடியே உடலை நான்கு துண்டுகளாக்கி மிருகங்கள் சாப்பிடக் கொடுத்துவிட வேண்டும். ஆனால் நம் மன அமைப்பு அதற்கு இடம் தராமல் பூமியில் அவர்களை புதைத்து மேலே பிருந்தாவனம் எழுப்பி அவர்களை வழிபடத்தொடங்கிவிடுகிறோம்.

பெரியவரின் உடல் நலக்குறைபாட்டுக்கு வருவோம். கடும் காய்ச்சலில் பெரியவர் தவித்த நிலையிலும், தன்னைச் சீடர்கள் தாங்கிப்பிடிக்க அவர் அனுமதிக்கவில்லை. விதிபாடுகளை ஒருமுறை தளர்த்திக்கொண்டால் காலப்போக்கில் அது பலமுறையாகி ஒரு கட்டத்தில் இல்லாமலேயே போய்விடும்.

எனவே பெரியவர் யாரையும் தீண்ட அனுமதிக்காத நிலையில் தான், அவருக்கு உதவும் விதமாக அவர் அன்றாடம் பூஜை செய்யும் ஈசன் இன்னொரு சன்னியாசியை அவரை நோக்கி அனுப்பினான். இவ்வேளையில் பெரியவரின் வாரிசுகளாக வலம் வரும் புதுப்பெரியவர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி யாத்திரையில் இருந்தபடியால் பெரியவருக்கு உதவ முடியாத நிலை.

இப்படி ஒருநிலையில்தான் அந்த சன்னியாசி பெரியவரைக் காண வந்தார். அவரது சன்னியாச தண்டம் காணாமல் போய் விட்ட நிலையில் அதை இன்னொரு சன்னியாசியால் தான் தரமுடியும் என்கிற காரணம் கருதி பெரியவரைக் காண வந்தவர், பெரியவருக்கு உதவி செய்யத் தொடங்கிவிட்டார்.

இவர் இப்படி வந்து உதவவேண்டும் என்பதனாலேயே சன்னியாசதண்டம்

https://t.me/tamilbooksworld

காணாமல் போனதோ?

அந்த சன்னியாச தண்டம் காணாமல் போனது ஓர் ஆச்சரியம். சன்னியாச தண்டம் என்பது ஒரு கைத்தடி அவ்வளவுதான்! கைத்தடி கூட சற்று பருமனோடு வலிமையாக இருக்கும். இது தொலைந்ததுதான் விந்தை! ஒரு கோணத்தில் விந்தை, இன்னொரு கோணத்திலோ இது ஓர் அற்புதமான செயல்பாடு. இல்லாவிட்டால் இவர் இன்னொரு தண்டம் பெற பெரியவரை பார்க்க வந்திருப்பாரா என்ன? வந்த இடத்தில் பெரியவர் உடல் நலம் குன்றியிருக்கக் கண்டு அவருக்கு பணிவிடை செய்யத் தொடங்கி விட்டார். மடத்தை சார்ந்தவர்களும் அந்த ஈசனே அவரை அனுப்பி வைத்ததாக கருதினர். சிலரோ அதை காஞ்சி காமாட்சியின் செயலாக கருதினர்.

பெரியவர் வேறு. காமாட்சி வேறில்லை. அதற்கு எடுத்துக் காட்டாக எவ்வளவோ சம்பவங்கள் நடந்துள்ளன.

## 40

ஒருமுறை சண்டிஹோமம் ஒன்று விமர்சையாக பெரியவர் முன்னிலையில் நடந்தது. பொதுவாக ஹோமத்தில் நாம் மேலான எல்லாவற்றையும் வழங்க வேண்டும். அதை அக்னியானது பெற்றுக்கொண்டு உரிய தேவர்களிடம் சேர்த்துவிடும். நாம் பார்க்க தீயில் எல்லாம் கருகிச் சாம்பலாகி வீணாகிவிட்டது போல தோன்றும். ஆனால் அதன் நுட்பமான விஷயமே வேறு...

இங்கே பல கேள்விகள் நமக்குள் எழலாம். தேவர்களுக்கு எதற்கு நாம் தரவேண்டும்? அவர்கள் இல்லாதவர்களா? நாம் தந்தால்தான் நமக்கு அவர்கள் பதிலுக்கு தருவார்களா? ஒன்றைத் தந்து இன்னொன்றைப் பெறுவது என்பது வியாபாரம் போன்ற செயல் அல்லவா?

இப்படி இந்த ஹோமம் குறித்து சிந்திக்கும் போது நிறைய தோன்றும். உண்மையில் வேள்வி, ஹோமம் போல ஒரு மேலான செயல்பாடு இல்லை. ஐந்து பூதங்களையும் திருப்திசெய்து பூமியில் நாம் நலமாக வாழ வழிவகை செய்பவைதான் இந்த ஹோமங்கள்.

இன்று உலகம் முழுக்கவே நிறைய வன்முறை!

துப்பாக்கிச் சூடு, குண்டுவெடிப்பு என்று தினமும் கொடிய செயல்கள் நடந்தபடியே இருக்கின்றன. உண்மையில் நம் இந்தியா நாடு மிக

https://t.me/tamilbooksworld

கொடுத்துவைத்த நாடு. மூன்று பக்கம் கடல். வடக்கே மட்டும் நிலப்பரப்பு. அதுவும் கூட ஓங்கி உயர்ந்த இமயமலைத் தொடராகி தடுப்புச் சுவர் போல விளங்கி வருகிறது. நமக்கு சீனா, பாகிஸ்தான் என்று இரு அண்டை நாடுகள் மட்டுமே.. உலகில் மற்ற நாடுகளுக்கு நான்குபுறமும் அண்டை நாடுகள். அதனால் எல்லாப் பக்கமும் எல்லைச் சுவர் எழுப்பி காவல் காக்க வேண்டிய கட்டாயம்.

உண்மையில் நம் மக்கள் எல்லா விஞ்ஞான வசதிகளையும் பயன்படுத்திக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வருகின்றனர். இப்படி ஓர் அமைதியான வாழ்வை மற்ற உலக நாடுகளில் பார்க்க முடியாது.

அமெரிக்கா, ஜெர்மனியில் எல்லாம் இன்னமும் வளத்தோடு நன்றாகத்தானே உள்ளோம் என்று சிலர் கூறலாம். ஆனால் அங்கெல்லாம் கூட எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதே நிலை. அங்கெல்லாம் முதுமையை சந்தோஷமாக கழிக்க முடியாது. அங்கே முதுமையை அனுபவிக்கும் தனிமை ஒருபெரிய கொடுமை!

ஆனால் இங்கோ நம் வீட்டில் முதியவர்கள் கோயில், குளம் என்றும் பேரன், பேத்திகளோடு ஒன்றுபட்டும், உபன்யாச கதைகள் கேட்டும் அர்த்தத்துடன் பொழுதை கழிக்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் காரணம் இந்த மண்ணின் ஆன்மிகம்தான். இதன் அர்த்தப் பொதியுள்ள வழிபாடுகள், கொண்டாட்டங்கள் தான். மேல் நாடுகளில் ஆண்டுக்கு ஒரு நாளோ, இரண்டு நாளோதான் திருவிழா! நமக்கோ மாதா மாதம் திருவிழா... அதில் நாம் எல்லாரும் ஒன்றாகிவிடுவதுதான் சிறப்பு.

தேர்த் திருவிழாவாகட்டும், மாமாங்கமாகட்டும், சித்திரை திருவிழாவாகட்டும், பொங்கல், தீபாவளி, சிவராத்திரி, ஏகாதசி, ஆடிப்பெருக்கு, கார்த்திகை தீபம் என்று எல்லாமே நம்மை ஒருங்கிணைப்பவை. புதுப்பிப்பவை. இதனால் ஓர் உயிரோட்டம் நம்மிடம் உள்ளது.

அதற்கு காரணம் நம் கலாச்சாரம். குறிப்பாக நமது ஆன்மிக கலாச்சாரம் மனிதர்களை நலமாக வாழவைத்திடும் ஒன்றாகும். அதில் ஓர் அம்சம் ஹோமம் வளர்த்தல் போன்ற செயல்பாடுகள். எந்த ஊரில் ஹோமம், யாக மெல்லாம் இடையறாது நடக்கிறதோ, அங்கே மழை நன்கு பெய்யும். பயிர்கள் நன்கு விளையும். மக்கள் அன்போடு ஒற்றுமையாக

https://t.me/tamilbooksworld

இருப்பார்கள். அமைதியான பசியற்ற வாழ்வு இருக்கும்.

எனவே பெரியவர்தான் செல்லும் ஊர்களில் வேள்விகள் நடக்கவும் யாகங்கள் வளர்க்கவும் பெரிதும் ஊக்குவிப்பார்.

அப்படித்தான் சண்டிஹோமமும் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள வந்த ஒரு பெண்மணி காமாட்சி அம்மனுக்கு சாத்துவதற்காக ஒரு பச்சைப்பட்டு புடவையை வாங்கி வந்திருந்தார்.

அதை ஹோமம் வளர்ப்போரிடம் தந்துவிட்டு ஹோமத்தை பார்க்கும் போது அவர்கள் அதை ஹோம நெருப்பில் சேர்த்து விட்டனர். அந்தப் பெண்ணுக்கோ காமாட்சி அம்மனுக்கு சாற்ற முடியாமல் போய் விட்டதே என்று வருத்தமாகிவிட்டது. பெரியவரிடம் வரிசையில் நின்று தீர்த்தம் பெறும்போது, பெரியவரே அந்தப் பெண்ணிடம் பேசினார்.

"என்னம்மா அம்பாளுக்கு சாத்த வேண்டியது அக்னியில் சேர்ந்துடுத்தேன்னு வருத்தப்படுறீயா?"

"இல்ல பெரியவா... அம்பாளுக்கு நான் பார்த்து பார்த்து வாங்கினேன். அக்னியில் சேர்க்க டிசைன்லாம் பார்க்க தேவையில்லையே... அதான் வருத்தமா இருக்கு..." என்றாள் அந்தப் பெண்மணி.

பெரியவர் புன்னகைத்தவாறே, "எதுக்கும் நீ போகும்போது காமாட்சியை தரிசனம் பண்ணிட்டுபோ" என்றார்.

அந்தப் பெண்மணியும் தலையசைத்தாள்.

அதேபோல மடத்திலிருந்து கோயிலுக்கு சென்று சேர்ந்தபோது அம்பாளுக்கு அபிஷேகம் முடிந்தது அலங்காரம் நடந்து கொண்டிருந்தது. காத்திருந்து பின் தரிசனம் செய்தாள். திரைவிலகிய போது அந்த பெண்மணிக்கு துக்கிவாரிப்போட்டது. காமாட்சி அவள் தீயில் இட்ட புடவையைத்தான் அணிந்திருந்தாள்!

அந்தப் பெண்மணியால் நம்பமுடியவில்லை. கூர்ந்து பார்த்தாள் அதே டிசைன். அதே முந்தி வேலைப்பாடு. கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஓர் அதிசயம் போல பட்டரும் அந்தப் பெண்மணிக்கு எலுமிச்சம் பழத்தோடு குங்குமம் தந்து, "உங்க புடவையைத்தான் சாத்தியிருக்கோம்" என்ற போது அந்தப் பெண்மணியின் உடம்பு சிலிர்த்துப்போனது.

ஹோம நெருப்பில் நாம் போடும் பொருள்கள் தேவாதி தேவர்களுக்கும்

https://t.me/tamilbooksworld

தெய்வங்களுக்குமே சென்று சேருகின்றன என்பதை அன்று பெரியவர் கசடறப் புரிய வைத்துவிட்டார்.

# 41

பெரியவர் காஞ்சியில் தங்கியிருக்கும் தருணங்களில் வட்டாரங்களில் இருப்பவர்கள் எல்லாம் அவரை தரிசிக்க செல்வார்கள். குறிப்பாக சென்னையில் இருந்து ஆயிரக்கணக்கானோர் செல்வார்கள். ஒருமணி அளவில் சந்திரமவுலீஸ்வர பூஜை முடிந்த பின் எல்லோருக்கும் தீர்த்தமும் குங்குமமும் தருவார்.

இவ்வேளையில்தான் பக்தர்கள் பலருக்கும் அதிசயங்கள் பல நடந்துள்ளன. அந்த அதிசயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். அவற்றை சம்பந்தப்பட்ட பக்தர்கள் கூறவும் அவை எழுத்தில் பதிவும் பெற்றன.

ஒருமுறை அமெரிக்காவில் இருந்து ஒரு தம்பதியினர் பெரியவரை தரிசனம் செய்ய வந்தனர். இந்த தம்பதியில் மனைவிக்கு பெரியவர் மேல் சொல்ல முடியாத அளவுக்கு பக்தி ஆனால், கணவருக்கு துளியும் பக்தி இல்லை. மாறாக எதிர்க்கருத்தும் கொண்டிருந்தார்.

"நான் எந்த சாமியாரையும் நம்பமாட்டேன். அவர்களும் நம்மைப்போல மனிதர்கள்தானே! இல்லாத கடவுளுக்காக தேவையில்லாமல் விரதம், பூஜை என்று தங்களை வருத்திக் கொள்வது முட்டாள்தனம். இதில் போலிச் சாமியார்கள் வேறு..." என்று அவர் பேசியதைக் கேட்ட அவர் மனைவி மிகவும் மனம் வருந்தினார்.

"ஒரே ஒரு தடவை எனக்காக பெரியவரை தரிசிக்க வாருங்கள். அவரது பார்வை பட்டாலே போதும் நமக்கு எல்லாம் நல்லதே நடக்கும்" என்ற மனைவியின் திருப்திக்காகத்தான் அவர் கூட வந்தார்.

ஆனாலும் நிறைய நிபந்தனைகள் விதித்திருந்தார். பெரியவர் முன்னால் நான் கோட் சூட் போட்டு மிடுக்காகதான் வருவேன். அவரிடம் பிரசாதம் எல்லாம் பெற மாட்டேன். அவரை இரு கைகூப்பி நமஸ்காரம் செய்ய மாட்டேன். எனக்கு பரிச்சய மில்லாதவர்களை பார்க்கிற மாதிரிதான் பார்ப்பேன்' என்று கூறியிருந்தார். இதெல்லாம் மனைவியை மிகவும் பாதித்திருந்தது.

பொதுவாக நம் மதத்தில் ஒரு வலிமையான கருத்தும் உண்டு. 'சாது

https://t.me/tamilbooksworld

தரிசனம் சாபவிமோசனம்' என்பர். நல்ல சாது சன்னியாசிகளை நாம் பார்த்தாலே போதும். நாம் தெரியாமல் செய்த பாவங்கள் எல்லாம் பறந்து போய்விடும். தெரிந்து செய்தவைக்கு பரிகாரமும் தெரியவரும்.

நம் மண்ணில் கடவுளைவிட கருணையும் வலிமையும் உடையவர்தான் குரு என்பவர். இப்படிப்பட்டவரை நம்மைப் போலவே பார்ப்பது ஒருவிதம். அதைக் கடந்து கடவுளுக்கும் மேலாக பார்ப்பது இன்னொரு விதம். ஒரு சன்னியாசி போலியாகவே இருந்தாலும் அவரை நம்பி பின்பற்றும் சீடனுக்கு எந்த குந்தகமும் ஏற்படாது. அவன் நம்பிக்கை அவனை காப்பாற்றி விடும். இதெல்லாம் குருநாதர் குறித்து நிலவும் கருத்துகள் ஆகும். அதனாலேயே நல்ல தெளிவுள்ள சான்றோர் காவி அணிந்தவர் களை கண்டாலே கைகுவித்து வணங்கி ஆசிகள் பெற்றுவிடுவர். தங்கள் அறிவுக்கூர்மையை காட்டமாட்டார்கள். அது தங்களுக்கு சாபத்தை பெற்றுதந்துவிடும். வணங்கினாலோ வரம் நிச்சயம். இந்த கருத்தெல்லாம் அந்த தம்பதியிடத்தில் மனைவியிடம் மட்டும் தான் இருந்தது. கணவனோ ஒரு மனிதனைப்போய் இன்னொரு மனிதன் வணங்குவது மடமை என்கிற கருத்திலேயே இருந்தார்.

இந்நிலையில் அவர் மனைவி மானசீகமாக பெரியவரிடம் தன் கணவனுக்கும் சேர்த்து பிரார்த்தனை செய்துகொண்டாள்.

"பெரியவரே! என் கணவரின் அலட்சியம் மற்றும் அகம்பாவத்தை என் பொருட்டு மன்னித்து எங்களை நீங்கள் ஆசீர்வதிக்கவேண்டும்" என்பதுதான் மனைவியின் பிரார்த்தனையாகவே இருந்தது. அதேபோல காஞ்சி மடத்து வாசலில் காரைவிட்டு இறங்கும்போது கணவரிடம் கொஞ்சமும் குறையாத மிடுக்கு... கோட்டை கழட்டாமல் கம்பீரமாக மனைவியோடு நடந்துவந்தார். அவரை மற்றவர்கள் வித்தியாசமாக பார்த்தனர்.

எல்லாரும் பணிவாக சட்டையின்றி மேலே ஒரு துண்டுடன் தான் இருந்தார்கள். சட்டையோ கோட்டோ போடுவது எப்படி அகந்தையை குறிக்கும்? ஏன் சட்டையை கழற்ற வேண்டும்? என்றெல்லாம் சிலருக்குத் தோன்றலாம்.

உண்மையில் மிகுந்த ஆசார சிறப்புடைய கோயில்களுக்கும் சன்னியாசியை தரிசிக்கவும் ஆண்மக்கள் சட்டை போடாமல் திறந்த மார்போடு செல்வதே சரியாகும். காரணம் அவர்களைச் சுற்றிலும் நிலவும் அருள். கதிர் வீச்சானது நம் மேனி மேல்படுவது நமது உடல் நலத்துக்கு மிகப்பெரிய மருந்தாகும். இதனால் உடல் நலம், மனநலம் எல்லாம்

https://t.me/tamilbooksworld

பெருகும். இதை விஞ்ஞான பூர்வமாகவும் நிரூபித்துள்ளனர்.

மிக நுட்பமான கதிர்களை அளக்கும் கருவிகள் கண்டறியப்பட்டு விட்ட நிலையில் அதைக்கண்டு பிடித்தவர்களே நம் மண்ணில் சில ஞானிகளின் தவசக்தி மற்றும் ஆத்ம சக்தியை அளந்து பார்த்து வியந்துள்ளனர்.

நாம் மீண்டும் அந்த கணவர் மனைவியிடம் வருவோம். வரிசையில் பிரசாதம் பெற நின்ற நிலையில், மெல்ல அந்த தம்பதி பெரியவரையும் நெருங்கிவிட்டனர். அப்போது மனைவியிடம் ஒரு படபடப்பு தவறாக எதுவும் நிகழ்ந்துவிடக்கூடாதே என்ற அச்சம்!

அதே சமயம் அந்த மனிதரிடம் ஓர் ஆச்சரியப்படும்படியான மாற்றம். பெரியவர் மிகக் கருணையோடு அவரைப் பார்த்து தீர்த்தம் தரவும்... மறுக்காமல் அவரும் வாங்கிக்குடித்தார். பின் சற்று விலகி சென்றவர் கோட்டு சட்டை என்று சகலத்தையும் கழற்றிவிட்டு திரும்ப வந்து பெரியவரை வணங்கினார். அதன்பின் பெரிதும் மாறிப்போய் வாழ்நாள் முழுவதும் பெரியவரின் பெரும் பகத்ராகவே திகழ்ந்தார். அவரது மனைவிக்கோ பேராச்சரியம். அதை கேட்கவும் செய்தாள். அவரோ, "நான் பெரிய வரை எங்கே பார்த்தேன்? அந்த பரமேஸ்வரனை அல்லவா பார்த்தேன். தலையில் பிறையுடன், கையில் சூலமுடன் நான் பரமனைப் பார்த்தப் பிறகு மாறாவிட்டால் எப்படி? அடுத்து அந்த ஒரு பார்வை எனக்குள் இருந்த இருளை எல்லாம் போக்கிவிட்டது. நான் இப்போது காற்றைப்போல லேசாக உணருகிறேன்" என்றார்.

## 42

இது ஒரு அனுபவம் என்றால் இன்னொறு அனுபவம் வேடிக்கையானது மட்டுமல்ல சிந்திக்கவைப்பதும் ஆகும். ஒரு கீதை உபாசகர் பெரியவரை சந்திக்கவந்தார். அவர் பகவத்கீதையை கிட்டத்தட்ட கரைத்து குடித்துவிட்டவர். அதனால் ஒரு செருக்கும் அவரிடம் உருவாகிவிட்டது. பெரியவரிடம் தன் மேதாவிலாசத்தை எப்படியாவது காட்டிவிடவேண்டும் என்று விரும்பியே அவர் பெரியவரைக் காணவந்தார். அவர் முதல் நோக்கம் தன் மேதாவிலாசத்தை காட்டுவது... அடுத்த நோக்கம் அவரை வணங்குவதும் இத்யாதிகளும்... பெரியவரை தரிசித்த நொடி தன் மேதாவிலாசத்தை காட்டுமுகமாக எனக்கு கீதையில் ஒரே ஒரு சந்தேகம்... அதைக்கூட சந்தேகம் என்று கூறமாட்டேன். ஒரு கருத்து பேதம்! உங்களிடம் கேட்டால் அது தெளிவாகிவிடும் என்று கருதுகிறேன் என்றார். அடுத்தநொடியே

https://t.me/tamilbooksworld

பெரியவர் தன் சீடர்களை அழைத்து அவரை நான்குமுறை வலம் வந்து வணங்கச் சொன்னார். அந்த கீதாமேதைக்கோ திகைப்பு! "என்னை எதற்கு வணங்கச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். பெரியவரும் சிரித்துக்கொண்டே ‘அத்தனை பெரிய கீதையில் உங்களுக்கு இருப்பது ஒரே ஒரு சந்தேகம்... அதுவும் கூட முழுச்சந்தேகமில்லை. ஆனால் எனக்கோ அதில் பக்கத்துக்கு பக்கம் சந்தேகம்... அதனால்தான் உங்களை நமஸ்கரிக்கச்சொன்னேன். பரவாயில்லை... உங்களுக்குள் கீதை முழுவதும் வசமாகிவிட்டது. அனேகமாக அதை போதித்த கிருஷ்ணனுக்கு பிறகு உங்களுக்கே அது வசப்பட்டிருக்கிறது என்று கூற அந்த மேதைக்கு பெரியவர் தன்னை உயர்த்துவது போல சிந்திக்கவைப்பது புரிந்தது. அடுத்த நொடியே அவருடைய கர்வமும் தரைமட்டமானது!

மகாபெரியவர் வாழ்வில் அன்றாடம் பலருக்கும் பலவிதமான அனுபவங்கள்! ஒவ்வொரு அனுபவமும் நமக்கெல்லாம் ஒரு பாடம்... இந்த அனுபவங்கள் எல்லாமே சம்மந்தப்பட்டவர்கள் வாயிலாக வெளி உலகம் அறியப்பட்டவையே! அந்த வகையில் ஒரு அனுபவம் மிகவே பரவசத்துக்கும் சிந்தனைக்கும் உரிய ஒன்றாகும்.

நெல்லையில் சிவம் ஒன்று ஒரு பெரியவர்! பெரியவர்பால் மாறாத பக்தி உடையவர். இவர் ஒரு வேதபண்டிதரும் கூட... மிகுந்த ஆசார அனுஷ்டானத்தையும் உடையவர். இவருக்கு எப்போதெல்லாம் பெரியவரை தரிசனம் செய்யத்தோன்றுகிறதோ அப்போதெல்லாம் காஞ்சிபுரத்துக்கு புறப்பட்டு விடுவார்.

கையில் ஒரு மஞ்சப்பை... அதில் மாற்றுஉடை! செலவுக்கு சொற்பமாய் பணம். தேவைக்கு மேல் எப்போதுமே இவர் வைத்துக்கொண்டதில்லை. ஒருமுறை பெரியவரை தரிசனம் செய்யவந்தவர் கிட்டதட்ட பத்துநாட்கள் காஞ்சிமடத்திலேயே தங்கிவிட்டார். இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் பெரியவரிடம் இவரோ, இவரிடம் பெரியவரோ அவ்வளவாக பேசிக்கொள்ளவே மாட்டார்கள். அம்மட்டில் பெரியவர் பூஜை செய்வதை பார்த்தபடியே உட்கார்ந்திருப்பதுதான் இவர் பணி. மற்ற நேரங்களில் மடத்தில் எதாவது எடுபிடி காரியங்கள் இருந்தால் செய்வார். சாப்பாட்டை பொருத்தமட்டில் ஒரு வேளையோ இரண்டு வேளையோ கிடைத்தால் போதும் என்கிற வழக்கமுடையவர். மடத்தில் தான் தினமும் அன்னபோஜனம் உண்டே... எனவே வயிற்றுப்பாடு பற்றி கவலையே பட்டதில்லை.

https://t.me/tamilbooksworld

இவருக்கு ஒரே நோக்கம் தான்!

பெரியவரை பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். அவரோடு மனம் விட்டு பேசத்தேவையே இல்லை. பேசுவதற்கும் பெரிதாக விஷயம் என்று ஒன்று இல்லை. சொல்லப்போனால் பெரியவர் போன்ற ஞானிகளிடம் பேசி உணர்ந்து கொள்வதை விட, மௌனமாய் இருந்து கவனித்து உணர்ந்து கொள்ள வேண்டியதே அதிகம். இவர் அம்மட்டில் இரண்டாவது ரகம். எனவே பேசாமல் மௌனமாய் கண்களால் பெரியவரை கருத்தாக கவனித்தபடியே இருப்பார்.

இப்படியே பத்து நாட்களும் கழிந்துவிட்டநிலையில் ஊருக்கு புறப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. திருநெல்வேலியில் இருந்து போன் வந்துவிட்டது. அப்படி வராவிட்டால் புறப்படுவாரா என்பதே சந்தேகம்தான்!

புறப்படுவதற்கு முதல்நாள் ஏகாதசி திதி! ஆகையால் அன்று விரதம் அனுஷ்டித்த நிலையில் தண்ணீர் கூட குடித்திராதவராக பெரியவரை தரிசித்து விட்டு கிளம்ப முடிவெடுத்தார். விரதம் இருந்த வாட்டம் முகத்தில் சற்று தெரியவே செய்தது. பெரியவரும் அவருக்கு பிரசாதம் தரும்போது கவனித்தவராக, "விரதமா?" என்று வாய் மலர்ந்தார். இவரும் ஆமோதித்தார். அடுத்து "கிளம்பியாச்சா?" என்று கேட்கவும் அதற்கும் ஆமோதிப்பு!

"போகும்போது வழியில் சோடா வாங்கி குடியுங்கோ..." என்றார் பெரியவர் அடுத்து. சிவத்துக்கு ஆச்சரியம்! மிகுந்த ஆசாரமான தன்னை ஒருகடையில் சோடாகுடிக்கச் சொல்கிறாரே என்று... அவர் பேசுவதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருக்க பெரியவர் அந்த பத்து நாளில் அவரிடம் பேசிய ஒரே விஷயம் இந்த சோடாவாங்கிக் குடிக்கச் சொன்ன விஷயம்தான்!

போகிறவழியில் தாகத்தில் தவிக்காமல் இருக்க பொதுவாக பயணிப்பவர்களிடம் இப்படிச் சொல்வதும் வழக்கம்தானே?

திருசிவமும் அப்படித்தான் எடுத்துக்கொண்டார். புறப்பட்டு விட்ட நிலையில் பஸ்சில் பயணிக்கும் போது ஒரு நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று ரவுடித்தனமாக பஸ்சில் கத்திக் கொண்டும், பாடிக்கொண்டும் வந்தது. நேரம் செல்லச்செல்ல அவர்கள் அட்டகாசத்தையும் தாங்க முடியவில்லை. கண்டக்டர் கண்டித்தும் பயனில்லை. மிகமூர்க்கமாக அவரைப் பார்த்து முறைத்தனர்.

https://t.me/tamilbooksworld

# 43

பத்து நாட்களாய் பேரானந்தத்தோடு ஒரு தெய்வீகமான சன்னதியில் இருந்துவிட்டு அப்படியே நேர்மாறாக இன்று பயணிக்க வேண்டியிருக்கிறதே என்று அவர் மனம் வருந்தியது.

அந்த மூர்க்கமானவர்களை பரிதாபமாக பார்த்து, "அமைதியாக வாருங்கள்" என்று சொல்லவும் அவர்கள பதிலுக்கு பயங்கரமாக சிரித்து, "இது ஜனநாயக நாடு... நாங்க சுதந்திரமாக இருக்கோம்... உங்களுக்கு எங்க வலிக்குது?" என்றெல்லாம் கேட்டனர்.

இதை எல்லாம் கேட்டு அவர் மனம் மேலும் புண்ணாகி விட்டது. அடுத்த நொடி சத்குருவான பெரியவரை அவர் மனம் இறுகப் பற்றிக்கொண்டது. அவர் நினைவுகளில் மூழ்கி அவர்களின் ரகளையை பொறுத்துக்கொண்டே வந்தார்.

அந்த பஸ்சும் ஒரு கட்டத்தில் சாலையோர ஓட்டல் ஒன்றின் முன் சற்றுநேரம் நின்றது. சிவத்துக்கும் பயணக்களைப்பில் தாகம் எடுக்கத் தொடங்கியது. அப்போது பெரியவர் சோடா குடிக்கும்படி சொன்னதும் நினைவுக்கு வந்தது. அவர் எதைச் சொன்னாலும் அதில் பொருள் இருக்கும் என்பதில் பெரிதும் நம்பிக்கை உடைய சிவம், தன் மஞ்சள் துணிப்பையை தான் அமர்ந்திருந்த இடத்தில் வைத்துவிட்டு பஸ்சை விட்டு இறங்கிச் சென்று சோடா வாங்கிக் குடித்தார்.

சொல்லப்போனால் அப்போதுதான் சோடா என்கிற ஒன்றையே அவர் குடிக்கிறார் எனலாம். அவ்வளவு ஆச்சாரமானவர் அவர் குடித்து விட்டு திரும்ப வந்து பஸ்சில் ஏறினார். அவர் சீட்டில் அந்த ரவுடிகள் இருந்தனர். மஞ்சள் பையையும் காணவில்லை. பையை தேடியவரைப் பார்த்து கெக்கலித்து சிரித்தார்கள்.

"பெரிசு, உன் பை அதோ டிரைவர் சீட்டுக்குப் பின்னால் இருக்கு பாரு" என்று காட்டினர்.

"நான் இங்கதானே உட்கார்ந்திருந்தேன்" என்றவரிடம், "மரியாதையா போய் அங்கே உட்காரு. இல்ல இறங்கி வழிய பார்த்துகிட்டே போயிடு. தகராறு பண்ணே தாங்க மாட்டே" என்று நாக்கை எல்லாம் மடித்து முண்டாதட்டத்தொடங்கி விட்டனர்.

சிவம் அதற்கு மேல் அவர்களிடம் வாயைக் கொடுக்காமல், அவர் பை

https://t.me/tamilbooksworld

கிடந்த இடத்தில் போய் உட்கார்ந்தார்.

மனது ரணமாகிவிட்டிருந்தது. இங்கேயே இப்படி எல்லாம் நடப்பவர்கள் மற்ற இடங்களில் எவ்வளவு அராஜகமாய் நடந்து கொள்வார்கள்? யோசித்து பார்த்தவருக்கு மயக்கம் வராத குறை...

மனிதர்களில் சிலர் மட்டும் ஏன் இப்படி மதிகெட்டு தப்பாகி விடுகிறார்கள்? எல்லா காலங்களிலும் அசுரபுத்தி உடையவர்கள் இருந்ததும், பின் அவர்கள் இறைவனால் அடக்கப்பட்டதும் சிவத்துக்குள் தோன்றிக்கொண்டே இருந்தன.

பஸ்சும் கிளம்பியது...

ஒரு பதினைந்து நிமிடம் சென்றிருக்கும். 'டமார்' என்று ஒரு சப்தம், திரும்பிப்பார்த்தால் பிரேக் பிடிக்காத நிலையில் ஒரு டிரக் லாரி பின்பக்கமாய் பஸ்சின் மேல் மோதியதில் பின்பாதியில் சரிபாதி நசுங்கிச்சிதைந்து, அந்த ரவுடிகளும் அதில் கூழ் கூழாகி விட்டிருந்தனர்.

சிவத்துக்கோ சின்னதாய் ஒரு கீறல் கூட இல்லை. ஒரு வினாடி நடந்ததை நினைத்தவருக்கு நெஞ்சை அடைத்தது. அவர் மட்டும் முன்பு அமர்ந்திருந்த அதே இடத்தில் அமர்ந்திருந்தால் அந்த ரவுடிகள் கதிதான் அவருக்கும்...

சோடா வாங்கிக் குடிக்க எழுந்திருக்கப் போய் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. அப்போதுதான் பெரியவர் சோடா குடிக்கச் சொன்ன மர்மம் அவர் வரையில் அவிழ்ந்தது. பெரியவருக்குத்தான் எத்தனை தீர்க்கதரிசனம்!

சிவம் பரவசத்தில் தேம்பி தேம்பி அழுத போதிலும், அந்த ரவுடிகள் இறந்ததையும் அவரால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால், பிறகே அவருக்கு தெரியவந்தது.

விதிவசத்தால் அன்று அவருக்குத்தான் கண்டம்! ஆனால் பத்து நாள் குரு தரிசனமும் அவர் ஆசிகளும் அந்த கண்டத்தை தவிடு பொடியாக்கிவிட்டது.

## 44

பெரியவர் பெரும் அருளாளர் மட்டுமல்ல; பெரும் கல்விமான்! மாபெரும் சிந்தனையாளர். தன் அந்திமக் காலத்தில் கிட்டத்தட்ட 96

https://t.me/tamilbooksworld

வயது வரை அவர் படிக்காத நாளே இல்லை. இவ்வளவுக்கும் முதுமை காரணமாக அவருக்கு ஒரு கண்பழுதாகி சரியாக தெரியாத நிலை. ஆனால் அதைப்பற்றி கவலையே படாமல் ஒரு கண்ணை வைத்துக்கொண்டே அவர் நிறைய படித்தார்.

பெரும்பாலும் இரவு துங்கச் செல்லும் சமயங்களில்தான் அவர் படிப்பார். பெரிதாக விளக்கு போட்டுக்கொண்டு படிப்பது ஒரு ரகம். தோளுக்கும் கழுத்துக்கும் இடையே டார்ச் லைட்டை வைத்துக்கொண்டு அதன் வட்டமான வெளிச்சம் கைவசம் திறந்திருக்கும் புத்தகத்தின் மேல் விழும் நிலையில் அதை வாசிப்பது ஒரு விதம்.

பெரியவர் அடுத்தவருக்கு தொந்தரவு தராமல் டார்ச் லைட் உதவியோடுதான் வாசிப்பார்.

சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் என்று மூன்றிலும் பெரியவர் மிகுந்த புலமை உடையவராக திகழ்ந்தார். எனவே, அறிஞர்கள் பெரியவரை சந்திக்கும் போது அவர்களிடம் அவர்கள் மலைத்துப் போகும் அளவு பெரியவரால் பேச முடிந்தது. இந்த மூன்று மொழிகள் அல்லது மற்ற மொழி அறிவும் பெரியவருக்கு நிறையவே இருந்தது. அதே போல சரித்திர ஞானம், பூகோள ஞானம், விஞ்ஞான ஞானம், தமிழ் இலக்கிய ஞானம், ஆங்கிலத்தில் இலக்கண ஞானம் என்று அவரது ஆற்றலுக்கு அவர் வாழ்வில் ஏராளமான சான்றுகள் உண்டு. குறிப்பாக தமிழ் இலக்கியத்தில் பெரியவர் பெரிதும் ஆழங்கால்பட்டவராக திகழ்ந்தார். 'கலைமகள்' என்று ஒரு மாத இதழ் வெளியாகி வருவதை நாம் அறிவோம். இப்போதும் அது வெளியாகி வருகிறது.

அந்த நாளில் அந்த இதழுக்கு ஆசிரியராக இருந்தவர் கி.வா. ஜகன்னாதன். தமிழ் உலகம் அவரை கி.வா.ஜ. என்று மூன்றெழுத்தில் அழைக்கும். கி.வா.ஜ. நல்ல மேடைப் பேச்சாளர். குறிப்பாக சிலேடையாக பேசுவதில் அவர் வித்தகர்.

காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காக ரயிலில் வந்து இறங்கிய அவரை மாலை போட்டு வரவேற்கிறார்கள்.

அப்போது கி.வா.ஜ, அடடே காலையிலேயே இன்று மாலையும் வந்துவிட்டதே!' என்றிட எல்லோரும் அந்தச் சொல்லின் சிறப்பை குறிப்பாக சிலேடைச் சிறப்பை மிகவே ரசித்தனர். அதே போல சாப்பிடும் போது மல்லிகைப் பூபோல இட்லியை பரிமாறினாள் ஒருபெண். "என்னம்மா தலையில் வைக்க வேண்டியத இலையில் வைக்கிற!"

https://t.me/tamilbooksworld

என்றார். அந்தப்பெண்ணுக்கு பிறகுதான் தெரிந்தது, இட்லி மல்லிகைப்பூ போல இருப்பதையே அவர் அப்படி கூறுகிறார் என்று.

இப்படி அவரது சிலேடைகளை நூற்றுக்கணக்கில் கூறலாம். மிகுந்த தமிழ் அறிவும், புலமையும் கொண்டவர் கி.வா.ஜ இவர் தமிழந்த் தாத்தாவான உ.வே.ச. அவர்களின் மாணவரும் கூட.

இவர் ஒருமுறை பெரியவரைச் சந்தித்து ஆசிபெற வந்திருந்தார். அப்போது இருவருக்கும் இடையே நிகழ்ந்த தமிழ் தொடர்பான உரையாடல் அனைவருடைய கவனத்தையும் கவருவதாக இருந்தது.

கி.வா.ஜ விடம், "தமிழ் மொழிக்கு ஏன் தமிழ் என்று பெயர் வந்தது?" என்று பெரியவர் கேட்டார்.

இந்தக்கேள்வியை கி.வா.ஜ எதிர்பார்க்கவில்லை. என்ன பதில் கூறுவது என்றும் தெரியவில்லை.

தமிழின் சிறப்பைச் சொல் என்றால் ஒரு மணி நேரம் கூட பேசலாம். அவ்வளவு செய்திகள் உள்ளன. தமிழுக்கு தமிழ் என்று ஏன் பெயர் வந்தது என்றால் அதை என்னவென்று சொல்வது?"

உண்மையில் கி.வா.ஜவுக்கு விடை தெரியவில்லை. அதற்கு உள்ளபடியே ஒரு விடை இருப்பதாகவும் தெரியவில்லை. இருந்திருந்தால் கி.வா.ஜ. நிச்சயம் படித்திருப்பார். எனவே, "எனக்கு தெரியவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள்" என்றார் மிகுந்த தன்னடகத்தோடு.

பெரியவரும் கூறத்தொடங்கினார்.

"நான் சொல்லப் போற பதில் என்னுடைய கருத்துதானே ஒழிய இதை தமிழ்ப் புலவர்களோ அறிஞர்களோ யாரும் சொல்லலை. என் கருத்தை எல்லாரும் ஏத்துக்கணும்கிற கட்டாயமும் கிடையாது. எனக்கு தோன்றியதைச் சொல்கிறேன்" என்கிற பிடிகையோடு பெரியவர் சொல்லத்தொடங்கினார்.

"தமிழின் சிறப்பே ‘ழ’ கரம்தானே! வேறு எந்த பாஷையிலும் இது கிடையாது. 'ழ'கரம் வரும் சொற்கள் எல்லாமே பெரும்பாலும் இனியது. நல்லபொருள் உடையது. ‘மழலை, குழவி, வாழை, யாழ், பொழிவு, வியாழன், சூழல், ஆழி, மேழி, ஊழி...' இப்படி ழ, ழி, வரும் சொற்களை வரிசையாக சொல்லிக் கொண்டே வந்த பெரியவர, "தம்மிடம் இப்படி இனிய தன்மை கொண்ட 'ழ'வை உடையது என்பதால் தமிழ் என்று

https://t.me/tamilbooksworld

வந்துவிட்டதோ" என்று கேட்கவும் கி.வா.ஜ. விடம் பிரம்மிப்பு!

எவ்வளவு ஆழமான பார்வை கருத்திலும் அசைக்க முடியாத வலிமையல்லவா? கி.வா.ஜ. அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டதோடு இனி நான் பேசும் தமிழ்க் கூட்டங்களில் இதை எடுத்துச் சொல்வேன் என்றும் கூறினார்.

## 45

பெரியவருக்கு தமிழ்க்கவிஞர்களில் திருவள்ளுவரையும், அவ்வைப் பாட்டியையும் மிகவும் பிடிக்கும். திருவள்ளுவரின் பல குறட்பாக்களைச் சொல்லி அதன் பொருளை திறம்பட எடுத்துரைப்பார்.

குறிப்பாக, 'அன்பிலார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' எனும் குறளைக் கூறும்போது, 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' எனும் வரியை அதில் விரித்துச்சொல்லும் போது, 'அன்புடையார் எலும்பும் கூட என்று ஏன் வள்ளுவர் கூறவேண்டும்... எலும்பால் என்ன பிரயோஜனம்' என்கிற கேள்வி எழலாம்.

குறிப்பாக எலும்பு என்பது இறந்த நிலையில் ஒருவரை எரித்த பின்னால்தான் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அதனால் பயன் என்று பெரிதாக எதுவுமில்லை. உதிர்ந்து விழும் தலைமுடியைக்கூட திரட்டி சவுரி செய்து பயன்படுத்தலாம். அப்படி இருக்க, 'அன்புடையார் கேசமும் உரியர் பிறர்க்கு' என்று வள்ளுவர் எழுதி இருக்கலாமே? எதற்காக எலும்பை குறிப்பிட்டார் என்று நமக்கு தோன்றும்.

ஒரு பேச்சுக்கு அன்புள்ள மனிதன் தன்வசம் உள்ள சகலமும் பிறர்க்கு அளிப்பவன் எனும் பொருளில் எலும்பை ஒரு குறியீடாக குறிப்பிட்டிருப்பாரோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

ஆனால் உண்மையில் என்பும் உரியர் பிறர்க்கு என்பதன் பின்புலத்தில் நம் புராணத்தில் ஒரு கதை உள்ளது.

ததீசி எனும் முனிவரின் முதுகெலும்பு மிக வலிமையானது. அது இந்திரனின் வஜ்ராயுதத்தைப் போல ஆயிரம் மடங்கு வலிமை உடையது. அந்த முதுகெலும்பால் ஓர் ஆயுதம் செய்து, அந்த ஆயுதத்தாலேயே அழிக்கப்படமுடியாத விருத்திகா சூரன் எனும் அசுரன் கொல்லப்படுகிறான்.

https://t.me/tamilbooksworld

அசுரவதத்துக்காக ததீசி முனிவர் தன் உயிரைவிட்டு தன் முதுகெலும்பை இந்திரன் பயன்படுத்திக்கொள்ள அளித்தார். அதனாலேயே தீமை அழிக்கப்பட்டு நன்மை நிலைத்தது.

பெரியவர் ததீசியின் இந்த உதாரணத்தை சொல்லி வள்ளுவர் இதனால் கூட 'என்பும் உரிய பிறர்க்கு' என கூறியிருக்கலாம் என்றார்.

* இன்று நாடு முழுக்க பெருமழை பெய்து வெள்ளம் உருவாகி, அதனால் நிறைய சேதம் ஏற்பட்டு நாம் மிகுந்த நஷ்டத்திற்கும் துயரத்திற்கும் ஆலாகியுள்ளோம்.

உள்ளபடியே மழை என்பது பெரிய செல்வம். மழை இல்லாவிட்டால் இந்த உலகில் உயிர்களே வாழ முடியாது. அதனாலேயே 'நீரின்றி அமையாது உலகு' என்றனர். திருவள்ளுவரும் மழையின் சிறப்பை பல குறட்பாக்களில் நமக்கு புரிய வைத்துள்ளார். மாதம் மும்மாரி அதாவது மூன்று மழை பொழியவேண்டும் என்றனர் சான்றோர்கள்.

ஒரு நாட்டை ஆளும் அரசனும் தன் மந்திரிகளிடம், 'மும்மாரி பொழிகிறதா?' என்று கேட்பான். அவர்களும் பொழிந்திருந்தால் பொழிந்தது என்பர். இல்லாவிட்டால் இல்லை என்பர். பொழிந்தது ஒரு விஷயமில்லை. பொழியாவிட்டால் அதுதான் விஷயம். மழை பொய்த்துப் போனால் நாட்டில் தவறுகள் மலிந்துவிட்டது என்று பொருள்.

அரசன் பொறுப்பாக ஆட்சி செய்ய வில்லை. அவன் கடமை தவறிவிட்டான் என்று பொருள். ஒரு ராஜாவுக்கான காண்டக்ட் சர்ட்டிபிகேட்டே வானமும் மழையும் தான்!

இதே மழை அளவுக்கு அதிகமாக பெய்தால் அது வறட்சியை விட மோசமான ஒன்றாகும். ஒன்றுக்கு பல தவறுகள் நடப்பதால் தான் காப்பாற்ற வேண்டிய தண்ணீரே அழிப்பதற்கு தயாராகி விட்டது என்று பொருள்.

இன்றும் அப்படி ஒரு அழிவுக்கு நம் தமிழ்நாடும் குறிப்பாக தலைநகர் சென்னையும் ஆளாகிவிட்டது.

விஞ்ஞானிகள் இதற்கு வேறு காரணங்கள் கூறுவார்கள். மரங்களை வெட்டியது, ஏரிகளை ஆக்கிரமித்தது, பிளாஸ்டிக் பொருட்களை அதிகமாக பயன்படுத்தியது என்று அடுக்கிக் கொண்டே போவார்கள்.

இதெல்லாம் காரணங்கள். இதை பாவங்கள் என்று நம் சாத்திரம்

https://t.me/tamilbooksworld

ஒருவார்த்தையில் கூறிவிடுகிறது.

குறிப்பாக மரங்களை வெட்டுவதை நம் மதம் மிகவே கண்டிக்கிறது. மரங்களை அது விருட்சம் என்கிறது. விருட்சம் என்றால் அழிவற்றது என்று பொருள். அழிவற்றதையே நாம் அழித்தால் நாம் எவ்வளவு பெரிய பாவிகள்?

இதனால்தான் கோயில்களில் கடவுளுக்கு இணையாக விருட்சத்தை வைத்து அதையும் வணங்கினர். நம்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான கோயில்களில் ஆயிரக்கணக்கான விருட்சங்கள் இன்றும் வணங்கப்பட்டுவருகின்றன.

வணங்குவதையே நாம் அழிக்க முற்படும்போது நமக்கும் அழிவு ஏற்படுகிறது. இதையே மழை வெள்ளம் நமக்கு உணர்த்துகிறது. மழை வெள்ளம் குறித்த இத்தனை பீடிகைக்கும் பெரியவருக்கும் பெரிய தொடர்பு உண்டு.

அதற்காகவே இத்தனை பீடிகை!

ஒருமுறை பெரியவர் பண்டரிபுரத்தில் முகாமிட்டிருந்தார். வெளியூர்களுக்கு, குறிப்பாக ஷேத்திரங்களுக்கு செல்லும் போது பெரியவர். அங்குள்ள மாட்டுத்தொழுவங்களையே தனக்கான தங்கும் இடமாக தேர்வு செய்வார்.

பசுமாடு இருக்கும் இடம் வைகுண்டம் மற்றும் கைலாசத்துக்கு இணை என்பது பெரியவர் கருத்து. ஒரு பசுமாட்டின் கால் தூசிக்கு கூட பெரும்பாவத்தை நீக்கும் சக்தி உண்டு. அதனாலேயே புதுவீடு கட்டி குடிபுகும் சமயம் முதலில் பசுவை அனுப்பி விட்டு பின்னால் வீட்டுக்கு உரியவர்கள் உள்ளே செல்வார்கள்.

இதெல்லாம் இன்று சிலரால் மூடநம்பிக்கையாக கருதப்படுகிறது. அவர்களைப் பற்றி நாம் சிந்திக்க தேவையில்லை. பெரியவரும் பண்டரிபுரத்தில் தங்கி இருந்த தருணத்தில்...

## 46

பெரியவரும் பண்டரி புரத்தில் தங்கி இருந்த தருணத்தில்... பெரியவர் தங்கி இருந்த இடத்திற்கு அருகிலேயே சந்திரபாகா என்னும் நதி ஓடிக்கொண்டிருந்தது. நமக்கு காவேரி போல பண்டரிபுரத்துக்கு

https://t.me/tamilbooksworld

சந்திரபாகா நதி விளங்குகிறது. இதில் சில சமயங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். நதிகளில் வெள்ளம் பெருகலாம். அது ஊருக்குள் புகுந்து நாசம் ஏற்படுத்தும் அபாயமும் உண்டு.

அன்று பெரியவர் தங்கி இருந்த கோசாலைக்குள்ளேயும் வெள்ளம் புகுந்து விட்டது.

படிப்படியாக அது உயர்ந்து கொண்டும் சென்றது. எல்லாரும் அச்சப்பட தொடங்கிவிட்டனர்.

நிச்சயம் அழிவு நேரப்போகிறது என்றும் கருதினர். பெரியவர் முன்னால் எல்லாரும் பரிதாபமாக நின்றனர்.

பெரியவர் சிரித்தார். 'மழை பெய்யலைன்னா பெய்யலங்கிற வருத்தம். பெஞ்சா இப்படி பெய்யறதேகிற வருத்தம்... அப்படித் தானே?' என்று கேட்டார். எல்லாரிடமும் மவுனம்.

"நாம எப்படி இருக்கோம்கிறதைதான் இந்த வெள்ளம் சொல்றது. நாம் ஒண்ணுரொம்ப வருத்தப்படுறோம். இல்லைன்னா ரொம்ப சந்தோஷமா ஒரே கூத்தும் பாட்டுமா இருக்கோம். நிதானமா அளவா நாம நடந்துக்கிறதேயில்லை. அதைத்தான் இயற்கை ரூபத்துல இந்த மழை சொல்றது" என்ற பெரியவரை எல்லாரும் மவுனமாக வெறித்தனர். மழை வெள்ளத்தை வைத்து மனித மனதோடு அதை தொடர்புபடுத்தி பெரியவர் ஒரு பக்கம் உபதேசம் செய்த போதிலும் அவர் கைகள் இரண்டும் வெள்ள நீரை தள்ளிவிட்டபடியே 'போயிடு... போயிடு' என்றன. அவ்வப்போது...

சில மணிநேரங்களில் வெள்ளம் வடிந்து சந்திரபாகா நதி அமைதியாக ஓடத்தொடங்கியது. பெரியவரும், "இது என் பேச்சை கேட்டுத்து... நீங்களும் கேட்கணும். சந்தோஷத்துல தலைகால் தெரியாம குதிக்கக்கூடாது. துக்கத்துல துவண்டு போயிடவும் கூடாது. நிதானம் மனுஷ லட்சணம். அது வந்துட்டா சமாதானம் வந்துடும். சமாதானம் வந்துட்டா எல்லா தானமும் வந்து மனுஷன் பரோபகாரியா ஆயிடுவான். பரோபகாரியை பஞ்ச பூதங்கள் எப்பவுமே பாதுகாக்கும். கஷ்டப்படுத்தாது" என்றார்.

என்ன ஒரு அரிய உபதேசம்! இதை அவர் வெறும் வார்த்தைகளால் மட்டும் கூறவில்லை. வெள்ளத்தை கட்டுப்படுத்திய ஒரு பரோபகாரியாக அவரே முன் உதாரணமாக திகழ்ந்து கொண்டு கூறினார். அதுதான் பெரியவரின் பெரும் சிறப்பு!

https://t.me/tamilbooksworld

# 47

பெரும் வெள்ளத்தை தன் தவசக்தியாலே தணித்த பெரியவர் ஓர் ஊரின் தாகத்தை தணித்த ஒரு சம்பவத்தை கேட்டால் நமக்கெல்லாம் சிலிர்ப்பு ஏற்படும்.

அவர் யாத்திரையின் போது திருக்கோவிலுர் அருகில் ஒரு ஊரில் அவர் தங்க நேர்ந்தது. அந்த சமயத்தில் மழை பொய்த்து போய் அந்த ஊரே குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது.

ஆனாலும் ஒரு செல்வந்தரின் வயக்காட்டிலும் அங்குள்ள கிணற்றிலும் தண்ணீர் வற்றாமல் சுரந்தபடி இருந்தது. அந்த செல்வந்தரோ ஊரில் யாருக்கும் ஒரு சொட்டுத்தண்ணீர் கூட தர விரும்பாதவராக கிணற்றைச் சுற்றி வேலி போட்டுக்கொண்டு விட்டார்.

இதனால் ஊரிலுள்ளோர் நெடுந்துாரம் போய் கிடைக்கிற இடத்தில் தண்ணீர் கொண்டுவந்து நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தனர்.

பெரியவர் வந்து தங்கவும் அவரிடம் மழை பெய்ய வேண்டும், எங்கள் குறை நீங்க வேண்டும் என்றும் வேண்டி நின்றனர். இந்நிலையில், அந்த செல்வந்தரும் பெரியவரை தரிசனம் செய்ய வந்தார்.

வந்தவரிடம் ஒரே புலம்பல்.

"சாமி, என்கிட்ட பணம், காசு இருக்குன்னு பேர்தானே ஒழிய என்னை யாரும் மதிக்கிறதேயில்லை. ஒரு புழுவை பார்க்கிற மாதிரி தான் பார்க்கிறாங்க. அதனாலேயே என் மனது மாதிரியே இந்த ஊரும் வறண்டு கிடக்குது" என்றார்.

அதைக்கேட்ட பெரியவரும், "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று திரும்பிக்கேட்டார்.

"உங்களைக் கும்பிட்டா நல்லது நடக்கும்னு எல்லாரும் பேசிக்கிட்டாங்க. அதான் வந்தேன். இனி நல்லது நடந்தா சரி..." என்றார்.

"என்னை கும்பிட்டா மட்டும் நல்லது நடந்துடாது. நான் சொல்றபடி கேட்டாத்தான் நல்லது நடக்கும்."

"சொல்லுங்க. என்னால முடிஞ்சா கட்டாயம் கேட்டு நடந்துக்கிறேன்..."

https://t.me/tamilbooksworld

"உங்களால நிச்சயம் முடியும். உங்க மனசு வறண்டு கிடக்கிறதாலதான் ஊரும் வறண்டிருக்குன்னு சொன்னீங்க தானே?"

"ஆமா சாமி... நான் அப்படித்தான் நினைக்கிறேன்."

"அப்ப நீங்க சந்தோஷத்துக்கு மாறினா ஊரும் சந்தோஷமாயிடும்ன்னுதானே அர்த்தம்?"

"ஆனா என்னால ஆகமுடியலையே... என் பேச்சை எல்லாரும் கேட்டாத்தானே சந்தோஷப்படமுடியும்?"

"நீங்க முதல்ல உங்க கிணத்தைச் சுற்றி போட்டுள்ள வேலியை எடுத்துடுங்க. எல்லாரையும் தண்ணி எடுத்துக்க அனுமதியுங்க. அப்புறம் பாருங்க..."

"சாமி, நான் எனக்கு சொந்தமான கிணத்தைதானே பாதுகாப்பாக மூடி வச்சிருக்கேன். இது எப்படி தப்பாகும்?"

"எதுவும் நமக்கு உண்மைல சொந்தமில்ல... உங்க உடம்பையே எடுத்துக்குங்க... உயிர் பிரியப் போறவரை இது உங்க கூட தானே இருக்கப்போகுது... அதனால இது இறப்புக்கு பிறகு கூட வந்துட முடியுமா?"

"இப்படிதத்துவம் பேசினா எப்படி சாமி? இருக்கிற தண்ணியை நான் தானம் பண்ணிட்டு என் நிலத்துக்கு என்ன செய்வேன்?"

"கல்வியும் தண்ணியும் கொடுக்கக் கொடுக்கத்தான் பெருகும். நீங்க ஊர் நல்லா இருக்கட்டும்னு முதல்ல நினைங்க. பிறகு பாருங்க..."

"அப்படி செஞ்சா மழை நல்லா பேஞ்சு பிரச்னை தீர்ந்துடுமா?"

"நிச்சயமா... ஒரு ஊருக்கு ஒரே ஒருத்தர் சுயநலமா இல்லாம இருந்தாலும் போதும். அந்த ஊர்ல நல்ல மழை பெய்யும்னு திருவள்ளுவரே சொல்லி இருக்கார்."

"சாமி உங்க பேச்சை நான் நம்பலாமா?"

"தாராளமாக நம்புங்க. மனசார எல்லாருக்கும் தண்ணி கொடுங்க. நானும் உங்களுக்காக அந்த ஈஸ்வரன் கிட்ட வேண்டிக்கிறேன்."

"சரிங்க சாமி. இப்பவே போய் வேலியை எல்லாம் எடுத்துட்டு யார்

https://t.me/tamilbooksworld

வேணா வந்து எவ்வளவு வேணா தண்ணி எடுத்துக்குங்கன்னு தண்டோரா போட்டுட்றேன்" என்று கூறிவிட்டு சென்ற செல்வந்தர் அப்படியே நடந்துகொண்டார்.

ஊரார் மனம் குளிர்ந்து போனது. யார் சொன்னாலும் கேட்காத செல்வந்தர் பெரியவர் சொல்லி கேட்டதை அதிசயமாகக் கருதினர்.

இத்தனைக்கும் ஊரார் பெரியவரிடம் அந்த செல்வந்தர் பற்றியோ, நீருள்ள கிணறு பற்றியோ ஒரு வார்த்தை கூட கூறவில்லை.

அவ்வளவையும் பெரியவர்தான் ஞானதிருஷ்டியாலே தெரிந்து கொண்டுசெயல்பட்டார். அதன் பிறகு இரண்டு நாளில் அந்த ஊரில் நல்ல மழை பெய்தது. அந்த செல்வந்தருக்கும் பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது.

பெரியவரே மறுநாளே அந்த ஊரை விட்டு கிளம்பி விட்டார். இப்படி பெரியவர் நிகழ்த்திய அற்புதத்தை உணர்ந்த அந்த செல்வந்தர் பெரியவரை திரும்பவும் தேடிவந்தார். காலில் விழுந்து வணங்கி தகுந்தசயத்தில் தன் கண்களைத் திறந்துவிட்டதாகக் கூறினார். அப்படியே தனக்கொரு சொந்தப் பிரச்சனை என்று ஆரம்பித்தார்.

"என்ன?"

"சாமி, நானோ என் உறவுகளோ ஒத்துமையா இணக்கமா இல்லை. எல்லாரும் பிரிஞ்சும் கசப்பு, வருத்தம்னு இருக்கோம். எங்களுக்கு எங்க குலதெய்வம் எதுன்னும் தெரியாதுன்னா பார்த்துக்குங்களேன்..." என்றார்.

"கடைசியா நீங்க சொன்னதுலதான் விடை இருக்கு. குலதெய்வம் எதுங்கிறதை முதல்ல தெரிஞ்சிக்கிட்டு அப்புறம் வாங்க..." என்றார் பெரியவர்.

"யாருக்குமே தெரியலியே சாமி..." என்றார் செல்வந்தர்.

அப்போது பெரியவருக்கு அந்த ஊர் எல்லையில் ஒரு மரத்தடியில் சாய்ந்த நிலையில் ஒரு சிலையும் இடிந்து போன பீடமும் கொண்ட கிராம தேவதை கோயில் ஒன்று இருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

அந்தப் பீடத்தை சரிசெய்து அந்த சாய்ந்த சிலையையும் நிமிர்த்தி நிற்கவைத்து பொங்கல்வைத்து வணங்கச் சொன்னார் பெரியவர்.

https://t.me/tamilbooksworld

"அப்ப அதுவா எங்கு குலதெய்வம்?" என்று கேட்டார் செல்வந்தர்.

"போய் நான் சொன்னதை செய். உனக்கே தெரியவரும்..." என்றார்.

செல்வந்தரும் போய் பீடத்தை இடித்து சரிசெய்ய முயலும்போது அங்கே பீடத்துக்கு கீழே ஒரு பட்டியக்கல் கல்வெட்டு எழுத்துக்களோடு கண்ணில் தென்பட்டது.

அதில்?

## 48

அந்தக் கல்வெட்டில் அந்த செல்வந்தரின் முன்னோர்களின் பெயர்களும், குடும்பப்பெயரும் இருந்தன. கடந்த நூற்றாண்டிலோ அதற்கு முன்போ அவர்கள் அந்தக் கோயிலைக் கட்டி வழிபட்டு வந்துள்ளனனர்.

காலப்போக்கில் பிரிவினைகள் ஏற்பட்டு பேச்சுவார்த்தை இல்லாது போனதில் பின்னால் வந்த சந்ததிகளுக்கு அந்த தெய்வம் குறித்து தெரியாமல் போய்விட்டது.

அந்த செல்வந்தர் அந்த கல்வெட்டு தகவலோடு பெரியவரை வந்து சந்தித்து விபரம் கூறினார். அதில் ‘ஆண்டிச்சாமி’ என்கிற தெய்வப் பெயரை கண்ட பெரியவர் சிரித்தபடியே, "ஆண்டிச் சாமியை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியலிங்களே?" என்றார் செல்வந்தர்.

"முருகனுக்குதான் அப்படி ஒரு பெயர். உன் குலதெய்வமும் இந்த ஆண்டிச்சாமிதான். பழனிமுருகன் பழனி மலையில் கோவிச்சுண்டு ஆண்டியா நிற்கப் போய் வந்த பேர் இது. இந்த சாமியை கெட்டியா பிடிச்சுக்கோ... வருஷத்துக்கு ஒருமுறையாவது அபிஷேக ஆராதனை செய்து வழிபாடு செய். உன் மனதில் நிறைந்த அமைதி தானாக வந்துவிடும்" என்றவர், குலதெய்வத்தின் சிறப்புப் பற்றியும் கூறத்தொடங்கினார்.

"இந்த குலதெய்வங்கிற விஷயம் நம்ம மதத்துல மட்டும்தான் பிரசித்தம்! மற்ற மதங்கள்ள பலதெய்வ வழிபாடு இல்லாததால குலதெய்வ வழிபாடு அவசியப்படல. இங்க கடவுள் ஒருத்தர்தான் எதுக்கு இத்தனை சாமிங்கங்கிற கேள்வியும் வரும். நாத்திகர்களும் இவாளுக்கு அவா

https://t.me/tamilbooksworld

தேவலைங்கிற இரண்டும் கெட்ட ஆத்திகர்களும் கூட இந்தக் கேள்வியை கேட்கிறவா தான். இதுக்கு ஒரே வார்த்தையில பதில் சொல்ல முடியாது. என்னா இது மனுஷனோட மன அமைப்பு கருதி உருவான விஷயம்.

ஒரு ஆணும், பெண்ணும் முறைப்படி சேரும் விஷயத்தை திருமணம்னு சொல்றோம். இதுல முக்கியமான விஷயமே தாலி கட்றதுதான். இந்த தாலி கட்ட ஒரு நிமிஷம்கூட ஆகாது. ஆனா மூணு நாளைக்கு கல்யாணம் பண்றோம். அதுக்குள்ள நிறையவே சடங்கு சமாச்சாரங்கள் எதனால? ஒரு நிமிஷத்துல முடியுற ஒரு விஷயத்துக்கு எதுக்கு இவ்வளவு விஷயங்கள்?

இன்னார் பிள்ளையும் இன்னார் பொண்ணும் இல்வாழ்க்கையைத் தொடங்க இருக்கா எல்லாரும் வந்து ஆசீர்வாதம் பண்ணுங்கோ. மனசார நீங்க வாழ்த்தணும்னா வயிறார சாப்பிடணும். உங்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கும். அதைவிட்டுவிட்டு மெனக்கெட்டு வந்திருக்கீங்க. அதுக்கு நாங்க நன்றி காட்ட வேண்டாமா?

அப்புறம் வந்த உடனே கிளம்பிட்டோம்னா அது பிற்காலத்துல மனசுல நிக்காது. அதனால நீங்கள்ளாம் ஒரு இரண்டு மூன்று நாளாவது கூடவே இருந்து ஆசிர்வாதம் பண்ணனும். அப்ப உங்க பொழுதுகள் சுவாரசியமாக கழியும். அதுக்குத்தான் அனேக சடங்குகள்னு ஒரு அர்த்தத்தோட வடிவமைக்கப்பட்டது தான் நம்பதிருமண வைபவங்கிற விஷயம்.

ரிஜிஸ்தர் ஆபீஸ்ல ஒரு நிமிஷத்துல தாலி கட்டி பண்ணிக்கிறாளே அவா வாழாம போய்டாளான்னு கேட்கலாம். கூர்ந்து கவனிச்சா அப்படி கல்யாணம் பண்ணிட்டவாளுக்கு ஒரு நெருக்கடி இருக்கிறது தெரியும். ஒரு நெருக்கடியும் இல்லாம சிக்கனம் கருதி பண்ணவங்களும் இதுல இருக்கலாம். ஆனாலும் இதைப் பார்த்துட்டு வெகு ஜனசமூகம் இந்த விஷயத்தை பெருசா பின்பற்றல. யாரும் இந்த மாதிரி கல்யாணத்துக்கு பெருசா மாறிடல. ஏன்? அங்கதான் மனுஷமனசோட தன்மையை நாம் புரிஞ்சுக்கணும்.

முறையான கல்யாண பந்தங்கிறதுல இருந்துதான் நாமெல்லாமும் வந்துருக்கோம். ஒரு ஜனசந்ததி உருவாக காரணமான விஷயம் ரொம்பபெரிய விஷயம். அது ஊர் பார்க்க விமர்சையா இருக்கிறதுல ஆடம்பரம் கொஞ்சம் கூட இருந்தாலும் அர்த்தம் அதுலதான் ரொம்ப அதிகம்.

அதனாலதான் ஒரு நிமிஷம் கூட போறும்கிற விஷயத்தை பெருசா

https://t.me/tamilbooksworld

நெனச்சு மூணு நாள் அதுக்கு சடங்குங்கிற சம்பிரதாயங் களை உருவாக்கி மலை உச்சியில் படிப்படியாக ஏறி நிக்கிற மாதிரி அந்த தாலி கட்ற சடங்குக்கிட்ட போய் நிக்கிறோம்.

ஒருதாலிதான்! ஒரு தடவைதான் கட்டப்போறோம். ஒரு தடவை இது நடந்தாதான் மதிப்பும் கூட, அதனாலதான் ஒவ்வொரு பொண்ணும் தாலிக்கயிறு இத்துப்போய் அதை மாத்திக்கிறப்ப கூட பழசு கழுத்துல இருக்கும்போதே புதுசை கட்டிண்டு பழசை அப்புறமா அவிழ்த்துப்போடுவர்.

ஒரு நிமிஷத்துல நடந்து முடியுற ஒரு தடவை மட்டுமே பெரும்பாலோனருக்கு நடக்கிற கல்யாணத்துக்கு எப்படி இத்தனை சம்பிரதாயங்கள் அர்த்தப்பூர்வமாக தேவைப்படறதோ அப்படித் தான் ஒரு தெய்வம்கிற பரமாத்மாதான் பல தெய்வங்களை, அதாவது சம்பிரதாயங்களா நம் வரையில் உருவாயின.

அதனால இத்தனை தெய்வங்களும் உருவாக்கப்பட்டதுன்னு கோணலா அர்த்தப்படுத்திக்கக்கூடாது. அந்த பரமாத்மாக்கிட்ட இருந்துதான் இத்தனை உபதேவதைகளும் தெய்வ சன்னித்தியங்களும் உருவாயின. பரமாத்மான்னு ஒத்த வார்த்தையில சொல்லும் போது சட்டுன்னும் புரியாது. ஏதோ பெரியதத்துவம் பேசற மாதிரி தோணும். அதுவே படிப்புக்கு சரஸ்வதி, பணத்துக்கு குபேரன், வெற்றிக்கு முருகன், எல்லா காரியசித்திக்கும் விநாயகர், ஒட்டு மொத்தமாக சேமமாக வாழ வைக்க பெருமாள், சிவன் அப்படின்னு சொல்லி அவாளை சுபீரியரா உணர்த்தறப்ப மனசால சுலபமா புரிஞ்சு நெருங்கி பக்தி செலுத்த முடியும்.

இவாளை தியானம் பண்ணி தரிசனமும் பண்ணின மகான்களை, ரிஷிகளை, குருநாதர்கள்னு சொல்றோம். இவாள்ளாம் நம்மைப் போல ஒரு தாய் தந்தை மூலம் பிறந்தவா. அதனால நம்பளால இவாக்கிட்ட சகஜமாகவும் வேகமாகவும் நெருங்க முடியும். அதே சமயம் இவா நம்மைப்போலவே மனுஷாளா இருந்தால் நாம உணர முடியாத நிலையில் இருக்கிற தெய்வீகங்களைப்பார்த்தும் உணர்ந்தும் வச்சிருக்கிறதால இவா நம்மைவிட பல மடங்கு மேலானவளா ஆயிடுறா! அதனால இவாளை நாம கெட்டியாப் பிடிச்சுண்டா ரொம்ப வேகமா அதே சமயம் குழப்பமில்லாம கடவுளை நெருங்க முடியும். அதனாலதான் குரு பரம்பரைக்கு இங்கு மதிப்பும் மரியாதையும் அதிகம். இப்படி நம்ப மதத்துக்குள்ள மனுஷ மனசோட குணநலன் தெரிஞ்சு அதற்கேற்ப தான் எல்லாமே இருக்கு.

https://t.me/tamilbooksworld

இதுல குலதெய்வம் என்பது எப்படின்னா ஒரு சமூகத்துக்குன்னு இல்லாம கூட்டுக்குடும்பமா வாழற ஒரு குடும்பத்துக்கு மட்டுமே உரித்தான தெய்வம்தான் குலதெய்வம். இதுல பாகுபாடு இருக்குற மாதிரி தெரியலாம். ஆனா உண்மையில் ஊர்ல ஆறுன்னு ஒண்ணு பொதுவா ஓடிண்டு இருந்தாலும் தன் வீட்டில ஒருத்தன் கிணறு வெட்டி அதன் மூலமா தண்ணிய எடுத்து பயன்படுத்திற மாதிரி தான் இதுவும்...!' என்று பெரியவர் ஒரு நெடிய விளக்கம்தரவும் அனைவரும் அப்படியே சிலிர்த்துப் போயினர்.

## 49

பெரியவர் சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாதபடி வாழ்ந்தவர். என்ன சொல்கிறாரோ அதன்படி நடப்பவராகவும் அவர் இருந்தார்.

இன்று எவ்வளவோ பேர் நிறையவே ஊருக்கு உபதேசிக்கிறார்களாக உள்ளனர். ஆனால், அவர்கள் வாழ்க்கையில் அவர்கள் பேச்சுக்கும் செயலுக்கும் தொடர்பே இருக்காது.

பெரியவர் வரையில் தன் தவ வாழ்வில் அவர் அப்பழுக்கு சொல்ல முடியாதவராக திகழ்ந்தார்.

ஞானிகளில் பிரம்ம ஞானிகள் என்று சிலர் உண்டு. இந்த பிரம்ம ஞானிகளுக்கு, இந்த உலகில் உள்ள எல்லாமே ஒன்றுதான். இவர்கள் எதிரில் சிவபெருமான் ஒருபுறம் வந்து நிற்க, மறுபுறம் ஒரு தெருப்பிச்சைக்காரன் வந்து நிற்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த பிரம்ம ஞானி இருவரையும் சமமாகத்தான் பார்ப்பார். அப்படிப் பார்த்தாலே அவர் பிரம்ம ஞானி!

பெரியவருக்குள்ளும் ஒரு பிரம்ம ஞானி இருந்தாலன்றி, அவர் அவ்வளவு சமமாக அவ்வளவு பேரையும் பாவித்திருக்க முடியாது.

இதற்கு அவர் வாழ்வில் நிறையவே சான்றுகள் உண்டு.

அடுத்து, அவர் எவரிடமும் குறைகாணமாட்டார். மிக மிக மோசம் என்று சொல்லப்படுகிறவனிடம் கூட கூர்ந்து பார்த்தால் ஏதாவது ஒரு நல்லது இருக்கும். அந்த நல்லதைத்தான் நாம் பார்க்க வேண்டும் என்பார்.

இதற்கு சாட்சியாக ஒரு சம்பவம்...

https://t.me/tamilbooksworld

ஒருமுறை அவர் திருவாரூர் பக்கம் உள்ள ஒரு தலத்துக்கு விஜயம் செய்தார். அவர் வருகையை முன்னிட்டு 600 ரூபாய்க்கு வால்போஸ்டர்கள் அச்சடித்து எல்லா ஊர்களிலும் ஒட்டியிருந்தனர்.

இன்று 600 ரூபாய் என்பது ஒரு சினிமாவுக்கு போய்வரும் செலவு. அன்று ஒரு மூட்டை நெல் எட்டு ரூபாய் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இதற்கு எத்தனை மூட்டை நெல் வாங்கலாம் என்று யோசித்துப் பாருங்கள். பெரியவர், ‘போஸ்டருக்கான செலவுக்கு ஏழைகளுக்கு நெல்தானம் செய்திருக்கலாம்' என்றார். ஆனால், பெரியவரை வரவேற்ற விழாக் குழுவினரோ, நீங்கள் வருவதை இந்தப் பக்கத்தில் உள்ள எல்லாரும் அறிந்து உங்களை தரிசனம் செய்ய வருவதோடு உங்கள் அருளுரையையும் கேட்க நாங்கள் எவ்வளவும் செலவு செய்வோம். அது தகும்...' என்றார்.

அன்று அருளுரை வழங்கவும் மேடைக்கு வந்து நின்றார் பெரியவர்.

எதிரில் பெரும் கூட்டம்! பெரியவருக்கும் மகிழ்ச்சி! எல்லாரும் அன்று பெரியவர் ஒரு இரண்டு மணி நேரமாவது உபன்யாசம் செய்வார் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அன்று பெரியவர் ஐந்து நிமிடங்கள் கூட பேசவில்லை. அந்தப் பேச்சும் மிக ரத்தினச் சுருக்கமாகத்தான் இருந்தது.

"எல்லாருக்கும் என் ஆசீர்வாதங்கள்! நன்னா மழை பேஞ்சு பயிர்கள் எல்லாம் செழிச்சு வளர்ந்து, ஆடு மாடுகளில் இருந்து ஆறறிவுள்ள மனுஷா வரை யாரும் பசியால உணவில்லைன்னு கஷ்டப்படாம நல்லபடியா இருக்கணும்.

அப்புறம் கல்யாணங்கிற புனிதமான விசேஷத்தை ஆடம்பரமாக்கிடமா சிக்கனமா பண்ணுங்கோ. கல்யாணத்துல சாஸ்திர சம்பிரதாயம்தான் முக்கியம்! அடுத்து வயிறார சாப்பிட்டு வாழ்த்தறதும் ரொம்ப முக்கியம்! ஆனால், பட்டுப்புடவைக்கும் நகைக்கும் ரொம்ப முக்கியத்துவம் கொடுக்குறது தப்பு.

பெரிய தப்பு வரதட்சணை வாங்குறது! நான் இதை கடுமையா ஆட்சேபிக்கிறேன்!

அடுத்து அவா அவா கடமையை குறையில்லாம செய்யுங்கோ. ஒரு நாளைக்கு ஒரு நல்ல காரியமாவது பண்ணுங்கோ. எப்பவும் பிறருக்கு உதவியா இருக்கோ, ஆசீர்வாதம் ஆசீர்வாதம்... நாராயண... நாராயணா...!" என்று அவர் பேச்சு முடிந்தது.

https://t.me/tamilbooksworld

எல்லாரிடமும் பெரிய ஏமாற்றம். பெரியவரோ அவ்வளவுதான் என்று மேடையை விட்டு இறங்கிவிட்டார்.

அதன்பின் நிகழ்ச்சி அமைப்பாளரிடம், "என்ன நான் சுருக்கமாக பேசினதுல வருத்தமா?" என்று கேட்டார்.

"ஆமாம் பெரியவா. எனக்கும் ஏமாற்றம் தான்" என்றார் அவரும்.

"எனக்காக பேசாம நீ உண்மை பேசினதுல ரொம்ப சந்தோஷம். நான் காரணமாகத்தான் சுருக்கமாக பேசினேன். நானும் மணிக்கணக்குல ரொம்ப காலமா பேசிண்டு வரேன். ஆனா என் பேச்சு யாரும் கேட்ட மாதிரியே தெரியல. ஆடம்பர கல்யாணம், வரதட்சணை வாங்குற பழக்கம், சாஸ்த்திர சம்பிரதாயங்களை ஒதுக்கிட்டு தன்னிச்சையா நடக்கிறதைத்தான் நான் பார்க்கிறேன். ஏன் இப்படி இருக்கான்னு யோசிச்சேன். ஒருவேளை நிறைய பேசறதாலதான் யார் காதுக்கும் போய் சேரலையோ? சரி இனி ரத்தின சுருக்கமா சொன்னாலாவது கேட்டுப்பாளான்னுதான் இன்னிக்கு இப்படி பேசினேன்.

பேசறதுங்கறது எதுக்காக? நான் பெரிய பேச்சாளன்னு காட்டிக்கவா? கிடையாது. பேச்சோட நோக்கமே கேக்கற வாளுக்கு அதனால நன்மை ஏற்படணம்ங்கறதுதான் கருத்துதான் முக்கியம். கருத்தில்லாத பேச்சுங்கறது அரிசி இல்லாத பதர் நெல்லு மாதிரி பார்க்கலாம். சுருக்கமா பேசினதாவது வேலை செய்யற தான்னு" என்று பெரியவர் கூறவும், அவரால் பதில் கூற முடிய வில்லை. ஆனாலும், பெரியவர் பேச்சு வேறு விதமாய் வேலை செய்தது.

ஒருநாள் அன்பர் பெரியவருக்கு தன் மகன் திருமணப் பத்திரிகையை அனுப்பி ஆசீர்வதிக்க கோரியிருந்தார்.

பொதுவில் திருமணம் என்று வரும்போது, எல்லாரிடமும் ஓர் அதீத அக்கறையும் சில முனைப்புகளும் இருக்கும். குறிப்பாக குலதெய்வ வழிபாடு, குடும்பத்தில் மூத்தவர்களுக்கு முதல் பத்திரிகை தருவது என்று அது இருக்கும். மிக முக்கியமாக கல்யாணப் பத்திரிகையில் அவர்களுக்கு குருவானவர் எவரோ, அவர் பெயர் குறிப்பிடப்பட்டு அவரது ஆசிகளுடன் என்றுதான் பத்திரிகையை தொடங்கும்.

ஆனால், பெரியவரிடம் ஆசி கேட்டு வந்திருந்த பத்திரிகையில் பெரியவர் பெயரே இல்லை. பெரியவர்தான் அவர்களுக்கு குருநாதர்!

https://t.me/tamilbooksworld

சிலர் அதை உணர்ந்து வருத்தப்பட்டனர்.

ஒருவேளை பெரியவர் பெயரை குறிப்பிட மறந்திருப்பாரோ என்று கூட சிலர் கருதினர். அவரிடமே கேட்டுவிடுவது என்று கேட்கவும் செய்தனர்.

அவரோ, "நான் போய் பெரியவரை மறப்பேனா... அவரை மறக்கத்தான் முடியுமா?" என்று எதிர்கேள்வி கேட்டார்.

"அப்படியானால் பத்திரிகையில் ஏன் பெரியவர் பெயரை போடவில்லை" என்று கேட்டனர்.

அப்போது பெரியவரும் வந்துவிட, அவரிடமே அந்த அன்பர் காரணத்தை கூறத்தொடங்கினார்.

அது?

## 50

கல்யாணப் பத்திரிகையில் மகாபெரியவர் பெயரை போடாததற்கான காரணத்தை அந்த மனிதரும் கூறத்தொடங்கினார்.

"என்னை எல்லோரும் மன்னிக்கணும். குறிப்பா பெரியவா பாதார விந்தங்கள்ள விழுந்து நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்.

நான் காரணமாதான் கல்யாணப்பத்திரிகைல 'ஸ்ரீஸ்ரீ சந்திர சேகரேந்திர சங்கராச்சார்ய சுவாமிகளின் அருளாசிகளின் படி' எங்கற வரிகளை போடல! ஏன்னா நான் இந்த கல்யாணத்துக்கு வரதட்சணை வாங்கிட்டேன். நான் வற்புறுத்தி கேக்கலை. பெண் வீட்ல கொடுக்க முன்வந்ததை வேண்டாம்னு சொல்ல என்னால முடியலை. காரணம் என்னோட பொருளாதாரம் அப்புறம் எனக்குள்ள கடன்சுமைகள்!

பெரியவா வரதட்சணை வாங்கக் கூடாதுன்னு ஒவ்வொரு உபனயாசத்துலயும் சொல்றார். அவர் சீடனா இருந்துண்டு நான் வாங்கினது தப்புதான். ஆனா என் வரைல அதுதவிர்க்க முடியாம செய்த தப்பு. அதே சமயம் பெரியவா பேரை போட்டு அந்த தப்புல பெரியவாளுக்கும் ஒரு பங்கு இருக்குற மாதிரியாகும். அப்படி நினைக்க நான் விரும்பலை. குறைஞ்ச பட்சம் பத்திரிகைலயாவது நேர்மையா இருப்போமேன்னு தான் பேரை போடலை. நான் பெரியவா சொன்னபடி நடக்கும் போதுதான் அவா பேரை பயன்படுத்த முடியும். அல்லாத பட்சத்துல எனக்கு ஏது அந்த தகுதி?"

https://t.me/tamilbooksworld

அவர் சொன்ன விளக்கத்தை கேட்டு அவ்வளவு பேரும் விக்கித்துப்போயினர். உண்மையில் அவர் தவறானவர் இல்லை. அவரிடம் உண்மை இருக்கிறது. குற்ற உணர்ச்சியும் இருக்கிறது. அதுவே அவர் தவறுக்கு பரிகாரமாகவும் ஆகிவிட்டது. இவ்வேளையில் பெரியவர் அவரை ஆசீர்வதிக்க தவறவில்லை.

‘உன் பொருளாதார சுமை நீங்கட்டும். உன்னிடம் செல்வம் தங்கட்டும். எப்போதும் நீ இதே உண்மையோடு செயல்படு" என்று வாழ்த்தினார்.

பெரியவரிடம் ஒரு மிகச்சிறந்த விஷயம் யாரிடமும் குணதோஷங்களைப் பார்க்கமாட்டார். எவ்வளவு மோசமானவனிடமும் ஒருநல்ல விஷயமாவது இருக்கும் என்பது அவர் முடிவான கருத்து. அந்த நல்ல விஷயத்தை நாம் கொண்டாடினால் அவரது மற்ற தீய விஷயங்களும் காலப்போக்கில் காணாமல் போய்விடும் என்பார்.

அப்படித்தான் அவர் எல்லோரிடமும் நடந்து கொள்ளவும் செய்தார்.

ஒரு யாத்திரையின் போது நடந்த சம்பவம் ஒன்று நம்மை வெகுவாகவே சிந்திக்க வைக்கும். அது ஒரு கிராமத்து கோவில். மிக பழமையான கோவில். அந்த கோவிலை பரம்பரை பரம்பரையாக ஒரு குருக்கள் குடும்பமே பூஜை செய்து வருகிறது. குருக்களுக்கு இதனால் பெரிதாய் வருமானம் ஒன்றுமில்லை. கிராமத்து கோவில் தானே? அதனால் வந்துபோவோர் எண்ணிக்கையும் குறைவு. அந்த குருக்களுக்கு ஒரே ஒரு பிள்ளை. அந்த பிள்ளையை பார்த்துக்கொள்ள சொல்லலாம் என்றால் பிள்ளைபிடம் மறுப்பு. அந்த பிள்ளை இந்த காலத்து பிள்ளை.

'இந்த கோயிலோடு இனி மல்லுகட்டவேண்டாம். நாம் பட்டினம் பக்கம் போவோம். நான் என்படிப்புக்கு ஏற்ற வேலையை பார்த்துக்கொண்டு உங்களையும் பார்த்துக் கொள்கிறேன். இனியும் இந்த கோவில் சிவபெருமானை நம்பிக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. இவர் தனக்கும் வறுமையை தேடிக்கொண்டு நம்மையும் வறுமையில் வைத்திருக்கிறார்’ என்று ஒருநாள் மனதில் பட்டதை பேசிவிட்டான்.

குருக்களுக்கு மிகவே வருத்தமாகிவிட்டது.

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றும் தெரியவில்லை. அவன் கருத்தை அவரால் ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

இப்படி ஒரு நிலையில்தான் அந்த கோவில் உள்ள ஊர் பக்கமாய்

https://t.me/tamilbooksworld

யாத்திரை செய்து கொண்டிருந்த பெரியவர் யாரும் எதிர்பாராத நிலையில் அந்த கோவிலுக்குள் விஜயம் செய்தார். அப்போது குருக்கள் மகனையும் அழைத்துப் பேசும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

"அடுத்து நீ தான் கோவிலை பார்த்துக்கபோறியா?" என்று பிரச்னைக்குரிய கேள்வியை மிகச்சரியாக கேட்டார். அந்த இளைஞனிடம் மௌனத்தடுமாற்றம். குருக்களோ, அவன் தவறாக பேசிவிடக்கூடாது என்று பயந்தவராக 'ஆமாம்...' என்று கூறிவிட்டார்.

பெரியவர் அதைக்கேட்டு சிரித்தபடியே அந்த இளைஞனுக்கு புரியவேண்டும் என்பது போலவே குருக்களிடம் பேசினார்.

'கோவில் இல்லாத ஊர்ல குடியிருக்க வேண்டாம்னு ஒரு பழமொழியே இருக்கு. கோவில்னு ஒண்ணு இருந்தாக்கா ஆறுகால பூஜை நடக்கும். அப்ப மணி சப்தம் எழும்பும். அதை வெச்சே அப்ப என்ன மணின்னு தெரிஞ்சிக்கலாம். அடுத்து கோவில்ன்னு இருந்தா குளம்னு ஒண்ணும் விருட்சம்னு ஒண்ணும் இருந்தாகணும். அப்புறம் கொடிமரமும் இருக்கும். அதாவது அருட்கொடி பறக்க பசிதாகம் இரண்டும் இல்லாம அந்த ஊர் இருக்கறதா அதுக்கு பொருள்!

எதை கொண்டாடினாலும் அது பெருகும்கறது தான் மனோதத்துவம். கோவில்ல நடக்கற கொண்டாட்டங்கள்ள மழைபெய்து பயிர் வளர்ந்து பசிதாகம் இல்லாம எல்லாரும் இருப்போம்.

அடுத்து கோவிலை வெச்சு நாலு திசையும் நாலு திசையைவெச்சு தெருக்களும் அமைஞ்சு எல்லாருக்கும் ஒரு முகவரியும் கிடைச்சிடும். அதுல ஒருநாள் தேர் திருவிழா நடக்கும். ஊருக்குள்ள இருக்கறசாமி தேருக்குள்ள வரும்போது ஊரே கோவிலா மாறும். கெட்டசக்திகள் முச்சந்திகள்ள இருந்தா தேர்வரவும் அவைகள் ஓடிடும். அன்னிக்கு ஊரே ஒண்ணா கூடி சந்தோஷமா இருப்பா. நிறைய அன்னதானங்கள் நடந்து எல்லாரும் பசியில்லாம இருப்பா. இப்படி ஒரு கோவிலால உருவாக்க முடிஞ்ச நன்மைகளை ஒரு ராஜா சட்டம் போட்டெல்லாம் கூட உருவாக்க முடியாது.

அப்படிப்பட்ட சிறப்பு கொண்ட கோவில்ல ஊழியம் பண்றதுங்கறது ரொம்ப பாக்யமான விஷயம். ஒரு மனிதனோட தேவைக்கு மேல எது இருந்தாலும் அதனால நன்மையை விட தீமைதான் அதிகம். அது காசு பணமா இருந்தாலும் சரி, வீடு, வாசல்னு நில புலங்களா இருந்தாலும் சரி... நம் தேவைக்கு மேல உள்ள பணத்துக்குதான் கறுப்பு பணம்னு பேர்.

https://t.me/tamilbooksworld

நிலபுலங்களும் அப்படிதான். அதனாலதான் சுவாமி தன்கிட்ட இருக்கற தனக்கு சேவை செய்யற குருக்களை தேவைக்கு மிகாம பாத்துக்கறார்.

சுவாமியே அந்த குருக்கள்கிட்ட இருக்கறதால பணம்காசை, சொத்து பத்தை குருக்களா இருக்கறவாளும் பெருசா நினைக்கறதில்லை. நினைக்கவும் கூடாது. ஆனா இன்னிக்கு சிலர் ஆடம்பரமா வாழறவங்கள பாத்து புத்தி கெட்டுப்போய் தங்களோட இருக்கற சுவாமியை விட பணம் காசை பெரிசா நினைக்கறா!

நல்லவேளை நீயும் உன் பிள்ளையும் அப்படி நினைக்கல. 'ரொம்ப சந்தோஷம்' என்றிட குருக்களுக்கும் குருக்கள் மகனுக்கும் கண்ணிர் வந்துவிட்டது.

என்ன ஒரு அற்புதமான விளக்கம்!

*****

telegram/tamilbooksworld